300



7L
m211, N42vm
N43.2.7
199791

வசந்தம்

விலை
8
அணா

300

சுபானு - மார்கழி

1943 - டிசம்பர்

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

★

தந்தி: "ராஜா" டெலிபோன் நெ. 218. A.

கண்டோர் மயங்கும் கவர்ச்சிக் காட்சி!

ஆதிகாலத்திலே, மனித நாகரிகத்தின் ஆரம்பத்திலே, மலர்களையும், கொடிகளையும் கொய்து சிரசிலே சூடிக் கொண்டனர் சித்திரப்பதுமை யொத்த மெல்லியர். ஆனால், நாகரிகம் முதிர்ந்த இந்நாளிலே, மாணிக்கத்தையும், நவரத்தினத்தையும் இட்டு இதயம் பூரிக்கிறார்கள் எழிற் கோதைகள்!

★

பெரியகடை வீதி :: கோயமுத்தூர்

Gift copy

8 MAY 1944
MADRAS

தந்திவிலாசம்: **FLOWER.** டெலிபோன் நெ. **175.**

சௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்.

இரும்பு, எலக்ட்ரிக், மில் ஸ்டோர்ஸ் வியாபாரிகள்,

அவனுசி ரோடு, கோயமுத்தூர்.

சேர்மன் போர்டு ஆப் டைரக்டர்ஸ்

டாக்டர். ராஜா. சர் அண்ணாமலை செட்டியார், KT. LL. D.

ஆப் செட்டிநாடு.

தலைமை ஆபீஸ் செட்டிநாடு.

எங்களிடம், எல்லாவிதமான டாட்டா இரும்புச் சாமான்களும், கலாய் குழாய்களும், நீலகிரி மார்க் சிமிண்டும், குட்லஸ் வால்வர்ணம் வகையருக்களும், சானிபட்டரிச் சாமான்களும், எலக்ட்ரிக் பல்புகள், வயர்கள், பங்காக்கள், மோட்டார், சுவிட்சுகள், முதலியவைகளும், மில் ஸ்டோர்ஸ், பாபின்ஸ், தோல் பெல்ட்டுகள், கிராப்ட் பேப்பர், ஊப் தகடுகள், கித்தான்கள் கிடைக்கும்.

பிராடியூஸ் டிபார்ட்மெண்டு,

21/138, 139, ரெங்கய்ய கவுடர் தெரு

நெல், அரிசி, கோதுமை, ரவை, மாவு தினுசுகள், சர்க்கரை நவதானியங்கள், மற்றுமுள்ள மளிகை சாமான்கள் எங்களிடம் மொத்தமாகக் கிடைக்கும்.

பீஸ் கூட்ஸ் டிபார்ட்மெண்டு ("கமர்ஷியல் எம்போரியம்")

21/138, 139 ரெங்கய்ய கவுடர் தெரு

பல மில்களில் தயாராகும் ஷர்ட்டிங், கோட்டிங், மல், லாங் க்ளாத், வாயில்ஸ், சீட்டி தினுசுகள், டிரில், டுவில், வேஷ்டிகள், துண்டுகள், இன்னும் பலவிதமான மில் ஜவுளி தினுசுகளும், எங்களிடம், மொத்தமாகவும், சில்லரையாகவும், சகாயமாகவும் கிடைக்கும்.

தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய் சென்னை கிளை: **4 & 5,** முதல் லைன் பீச்

தீ விபத்து, ஆயுள், கப்பல், மோட்டார்கார், தொழிலாளர்கள் நஷ்டஈடு முதலிய இன்ஸ்யூரன்ஸ் திட்டங்களும் அடங்கி யிருக்கின்றன.

"நியூ இந்தியா"வின் பொருளாதார நிலை

வசூலான மூலதனம்

ரூ. 3,50,05,275

1942வருஷத்திய பிரிமிய வருமானம்

தீ	ரூ.	57,46,706
கப்பல்	ரூ.	45,00,706
விபத்துக்கள் முதலியன	ரூ,	14,86,288
ஆயுள் :		
முதல் வருஷத்திய பிரிமியம்	ரூ.	9,85,372
புதுப்பிக்கப்பட்ட பிரிமியம்	ரூ.	47,87,033
ஒற்றைப் பிரிமியம்	ரூ.	5,12,887
கூட்டுப் பிரிமியம்	ரூ.	9,996
உத்தேசிக்கப்பட்ட வருஷ வருமானம்	ரூ.	3,54,091

1942வருஷத்திய புதிய தொழில்கள்

ஆயுள்	ரூ.	2,33,86,850
அவசர வருஷ வருமான பாண்டுகள்	ரூ.	2,88,059
நீண்ட கால வருஷ வருமான பாண்டுகள்	ரூ.	53,825
கூட்டு இன்ஷ்யூரன்ஸ்	ரூ.	14,30,000
மொத்த சாதாரண ஆயுள் பாலிசிகள்		12,07,30,150

செலுத்தப்பட்ட மூலதனம்

ரூ. 71,21,055

31–12–1942ல் இருந்த நிதிகள்

செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ.	71,21,055
தீ நிதி	ரூ.	54,48,683
கப்பல் நிதி	ரூ.	69,41,776
விபத்துக்கள் நிதி	ரூ.	15,19,516
ஆயுள் சகாய நிதி	ரூ.	2,53,24,543
வாடகை, செலவு நிதி	ரூ.	17,715
பொது சேமிப்பு நிதி	ரூ.	3,50,000
கொள்முதல் சேமிப்பு நிதி	ரூ.	6,99,433
மாற்று சேமிப்பு நிதி	ரூ.	50,679
லாப நஷ்டம்போக மீதம்	ரூ.	11,02,023
மொத்த நிதி	ரூ.	4,85,75,423

உரிமைத் தொகை எட்டுக் கோடி ரூபாய்க்கு அதிகமாக இது வரையிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது

சென்னை மாகாணத்தில் சமஸ்தானங்கள் உள்பட ஏஜண்டுகள் தேவை.

கே. கணபதி

பிராஞ்சு மானேஜர்.

AMERICAN RADIOS

ORDERS BOOKED NOW

FOR

ARRIVING Models of

- ★ R. C. A.
- ★ PHILIPS
- ★ WESTING HOUSE

AT

GOVNT. CONTROLLED PRICES

MARCONI VALVES

AND

SPARES IN STOCK

SRI RAMA VILAS SERVICE Ltd.,

202-203, MOUNT ROAD, MADRAS.

(Sole distributors for MARCONIPHONE radios for the MADRAS PRESIDENCY including states.)


விருந்தினர்கள் எப்
பொழுதும் விரும்பும்
மிகச்சிறந்தவைநரஸூஸ்
டீயும் காபியும் தான் என்
பது வீட்டு எஜமானிக்கு
நன்ருகத் தெரியும்.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
MNK 21.
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி சேலம் தென்னிந்தியா

The
Armed Forces Grow
From
Strength to Strength.

Let National Savings
Campaign
Keep Pace With It.

INVEST
IN
DEFENCE BONDS
AND
NATIONAL SAVINGS
CERTIFICATES.

★

பொருளடக்கம்

மலர் 2] [இதழ் 9

நெஞ்சமே எழுந்திரு! வா!
டி. கே. சி

தாலாட்டு
"கதிரவன்" ... 11

பெரிய இடத்து விஷயம்
ரா. நா ... 12

ரோஜாக் கொத்து
ஆர். ஜானகி ... 14

அருவி
"சுகி" ... 21

கலைக் கோயில்
சுத்தானந்த பாரதி ... 24

இதய தாகம்
கே. விஜயராகவன் ... 37

கிராமியக் காட்சி
"ரதி" ... 43

புத்தக ஆராய்ச்சி
... ... 45

சந்திரோதயம்
எம். எஸ். சத்தி வேலு ... 48

சாவித்திரி
ஆர். ஷண்முக சுந்தரம் ... 52

என்ன கடிதம்?
"ராணி" ... 62

ஜகன் மோகினி
தி. நா. சுப்பிரமணியன் ... 65

ஆசாபாசம்
என். சிதம்பர சுப்ரமணியம் 75

சிலப்பதிகாரம்
சர். சண்முகம் செட்டியார் ... 81

மலர் மணம்
... ...

In the interests of the War Effort

We had reserved this space to urge all consumers of Petroleum Products once again to take care of oil containers and to return them quickly.

But the first consideration is the ships that bring the oil to Indian Ports. Their safety and that of their crews — as also the lives of our soldiers and sailors and the successful conduct of Military and Naval operations — can be endangered by unguarded conversation or correspondence.

Be first with your efforts but last with your news

BSGK. 64 A BURMAH-SHELL ANNOUNCEMENT

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்
—கம்பர்

நெஞ்சமே எழுந்திரு! வா!

(டி. கே. சிதம்பரநாத முதலியார்)

பக்தி என்பது தனியான உணர்ச்சி. உண்மையான உணர்ச்சியே.

1943 ம் வருஷத்தில் ஆங்கிலக் கல்வி காரணமாகவும் ஆங்கில நடை உடை காரணமாகவும் சாயங்காலம் கிளப்புகளில் நண்பர்களுடன் உறவாடுதல் காரணமாகவும் கோயில்களைப் பற்றிய நினைவு அவ்வளவாக வருவதில்லை. வந்தாலும் ஏதோ மியூசியம் பார்க்கு முதலிய இடங்கள் போலத்தான், நினைவுக்கு வரும். தினசரி வாழ்க்கையோடு ஒட்டிய காரியம் அல்லவா என்று படாது. எல்லாம் காலவித்தியாசம்.

மேலே குறித்த நாகரிகத்தின் வாழ்க்கை சம்பவங்கள் நம்மோடு ரொம்பவும் ஒட்டிக் கொண்டன. ஏதோ நம்முடனேயே பிறந்தன என்றும், அவை இல்லாமல் போனால் வாழ்க்கை வாழ்க்கையாகாது என்றுமே எண்ண நேர்ந்து விட்டது.

ஆனால் ஒன்று: இந்த வாழ்க்கைக்கு மேலான வாழ்க்கை ஒன்று இருக்கிறது; உண்மையான ஆனந்த அனுபவங்கள் அதில் இருக்கின்றன. அந்த அனுபவங்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அந்த வாழ்க்கைத் துறையில் கொஞ்சமாவது இறங்க வேண்டும். கிளப்புக்குப் போவதை ஒரு வாரம் ஒற்றிப் போட்டு (ஒரு வாரம் போதும்) உற்ற

நண்பர்களோடும் மனைவியரோடும் ஒரு கோயிலுக்குப் போக வேண்டும். சாயங்காலம் ஆனதும் கோயிலுக்குப் போக ஏற்பாடு பண்ணிவிட வேண்டும். கோயிலுக்கும் போய் அங்குள்ள வாத்தியத்தைக் கேட்க வேண்டும், பாடும் பாசுரங்களைக் கேட்க வேண்டும், பிரகாரம் சுற்ற வேண்டும், தீபாராதனை முதலான வழிபாடுகளில் கலக்க வேண்டும். இதோடு தற்காலத்து ஸயன்ஸ் சொல்லுகிற ஒரு உண்மையையும் கொஞ்சம் ஞாபகப் படுத்திக் கொள்ள வேணும்:

அதாவது; ஒரே ஒரு சக்திதான் பேரண்டம் முழுவதையும் ஆட்டுகிறது. ஒரே நியதியின்படி ஆட்டுகிறது. அதுவும் அனாதியாய் இருந்து வரும் நியதி. நம்முடைய உடலின் செயல்கள் உள்ளத்தில் நிகழும் செயல்கள் எல்லாம் ஒன்று விடாமலே அந்த நியதிக்குள் நின்று ஆடுகிற காரியந்தான். இப்படி எங்கும் வியாபித்ததாய் அநாதியாய் நிகழ்ந்து வரும் நியதியை (ஆங்கிலத்தில் "லா" என்பார்கள்) நம்மவர் இறைவனது அருள் என்றார்கள். எல்லாம் அவனது அருள் வயத்தது என்றார்கள். அடையாள முகமாய்ப் பேசும்போது எல்லாம் இறைவனது திருவடியில் அடங்கிக் கிடப்பது தான் என்றார்கள்.

கோயிலில் நின்று சேவிக்கும் போது மேலே சொன்ன திருவடியை கொஞ்சம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு வாரத்தில் தெரிந்து விடும்: கோயில் என்றால் இன்னது, வழிபாடு என்றால் இன்னது, பக்தி மார்க்கம் என்றால் இன்னது என்பதெல்லாம்.

இதை எல்லாம் நம்மவர் எவ்வளவு அற்புதமாய் வாழ்க்கையோடு ஒட்டி அனுபவித்திருக்கிறார்கள்; அவர்களது ஆழ்ந்த பண்பாடுதான் என்ன! என்று அதிசயிக்கத் தோன்றும்.

பக்திப் பண்பாட்டில் ஈடுபட்ட ஒருவர்; புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய் வழிபாட்டை ரொம்பவும் அனுபவித்தவர். அங்கங்கே உள்ள அடியார்களுடனிருந்து கடவுள் தத்துவங்களைப் பலவிதமாகவும் கேட்டுக் கேட்டுப் பரவசமானவர்.

ஒருசமயம் ஏதோ குடும்ப நிர்வாக நிர்பந்தங்களில் ஈடுபட்டு கோயிலுக்குப் போய் அனுபவிக்கும் அனுபவம் இல்லாது போய் விட்டது. இரண்டொரு மாசந் தான். பிறகு தேட்டம் உண்டாகிறது. தேட்டம் எப்படி உண்டாகிறது என்று பார்ப்போம்.

நாராயணன் எழுந்தருளி இருக்கும் ஸ்தலங்களுக் கெல்லாம் யாத்திரை செய்து விட்டு தான் வருவோமே, வீட்டுக் காரியங்களைக் கொஞ்சம் கட்டி வைத்தால் என்ன, என்று படுகிறது.

(வெண்பா)

நாடுதும்வா நெஞ்சமே
நாரா யணன்பதிகள்;

கூடுதும்வா மெய்யடியார்
கூட்டங்கள் —

எல்லா ஸ்தலங்களுக்கும் போகிறது இருக்கட்டும். நம்முடைய சொந்த ஸ்தலமான இந்தளூர்ப் பெருமாள் இதோ இருக்கிறார். அவரை இப்போதே போய் சேவித்து விட்டு வருவோமே:

நாடுதும்வா நெஞ்சமே
நாராயணன் பதிகள்;
கூடுதும்வா மெய்யடியார்
கூட்டங்கள்; — சூடுதும்வா,
வீதிளங்கும் கார்அகிலின்
வீசுபுகை வாசம்எழும்
ஆதியிந்த ளூரான் அடி.

—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

[இந்தளூர் சோழநாட்டு வைணவ ஸ்தலம்]

பக்தரது ஆனந்தம் தேட்டம் அவசரம் எல்லாம் பாடலில் அழகான பாவத்தில் அமைந்து கிடக்கின்றன; அவரது உள்ளத்தின் பண்பாட்டை பளிங்கில் வைத்துப் பார்த்த மாதிரி பார்க்கிறோம்.

அட்டைச் சித்திரம்:

தாலாட்டு

ஆரிரரோ ராராரோ
ஆரிரரோ ராராரோ!
ஆரிரரோ ராராரோ
ஆனந்தப் பொன் மயிலே
ஆலம் விழுதினிலே
ஆகாசப் பந்தலின் கீழ்
மேலாக்கைத் தூளிகட்டி
மெல்லப் படுக்க வைத்தேன் (ஆரிரரோ)
காட்டுக் கிளி மொழியும்,
கட்டை வண்டித் தெம்மாங்கும்,
பாட்டாளி மூச்சுடனே
பாய்ந்து வரும் சிந்துகளும்,
ஆற்றிசையும் புள்ளிசையும்
அருமலரைக் கொஞ்சிவரும்
காற்றிசையுந் தாலாட்டக்
கண்ணே நீ கண்ணுறங்காய் (ஆரி)
தனியே விட்டேனென்று
தங்கம்... அழுகாதே...
முனியாண்டி மேல்ப் பாரம்!
முத்தே நீ அஞ்சாதே (ஆரி)
வெள்ளெலும்பு தேய நான்
வேலை செய்த கூலி கொண்டே
சுள்ளி பொருக்கிச்
சுடுகஞ்சி வைத்தளிப்பேன் (ஆரி)

பெரிய இடத்து விஷயம்

ரா. நா

கவிஞர்களின் கவிதைகள், ஆசிரியர்களின் இலக்கியங்கள் இதைவிட அவர்கள் வாழ்க்கை சம்பவங்களைப் பற்றித் தெரிந்துகொள்வதில் தனி ரசம் இருக்கிறது. இந்த விஷயத்தில் ஆவலிருப்பதை அறிந்துதானே என்னவோ பாரதியாரைப்பற்றிய கதைகள் பல மலிந்து விட்டன. ஆங்கில இலக்கியச் சோலையில் சஞ்சரித்து, அதன் நறுமணத்தை நுகர்ந்து அனுபவிக்கையில் இலக்கிய கர்த்தாக்களின் வாழ்க்கை வரலாறுகளை படிப்பதில் நான் மிகுந்த கவனம் செலுத்தியதுண்டு. ஆங்கிலத்தில் ஆசிரியர்கள் சரித்திரமே ஒரு தனி இலக்கியம்.

டாக்டர் ஜான்ஸன் எனும் பேராசிரியரைப் பற்றி சில ருசிகரமான கதைகள் உண்டு. அவர் நடந்து செல்லும் பொழுது கைத்தடியால் ராந்தல் கம்பங்களைத் தட்டிக் கொண்டே செல்வாராம். ஒரு கம்பத்தைத் தட்ட மறந்துவிட்டால் திரும்ப வந்து தட்டிவிட்டுச் செல்வாராம்; தெருவில் கிடக்கும் ஆரஞ்சுத் தொலிகளை எடுத்து ஜேபியில் அடைத்துக் கொள்வாராம். தெருவில் பட்டினியால் வாடிப் படுத்துத் தூங்கும் ஏழைகள் கையில் அவர்களையறியாமல் தன்னாலியன்றளவு பணத்தை அவர்கள் கையில் வைத்து மூடிவிட்டுச் செல்வாராம். அவர் பரம ஏழை. ஆனால் பிறரிடமிருந்து யாசகம் கேட்க மாட்டார். தர்மமாக யாராவது உதவி செய்தால் கோபம் வந்துவிடும். பணமின்மையால் கிழிந்த சட்டையும், கிழிந்த ஜோடும் அணிந்திருப்பார். அவர் இலக்கியத்தில் ஆசை கொண்ட ஒருவர் அவருடைய ஏழ்மையான உடையைக்கண்டு, அவர் வீட்டிலில்லாத சமயம் பார்த்து ஒரு ஜோடி புது ஜோடுகளை வைத்துவிட்டுச் சென்றார். ஜான்ஸன் உள்ளே நுழைந்ததும் புதுஜோடுகள் தென்பட்டன. உடனே கோபாவேசத்துடன் அவைகளை வெளியே எறிந்தார்.

ஏழையாயிருந்தாலும் எழுத்தாளன் உள்ளத்தை ஆள்பவன் என்பதில் நம்பிக்கை கொண்டவர். லார்டு செஸ்டர்பீல்டு என்பவருக்கு அவர் எழுதிய கடிதம் இலக்கிய சரித்திரத்தில் பிரசித்தி பெற்றது. ஆங்கிலத்தில் ஜான்ஸன்

அகராதி தயாரித்து வந்தார். பொருள் இல்லாமல் அதை பிரசுரிக்க முடியவில்லை. அச்சமயம் செஸ்டர்பீல்டு போன்றவர்கள் உதவி செய்ய முன் வரவில்லை. எப்படியோ கஷ்டப்பட்டு ஜான்ஸன் அகராதியைப் பிரசுரம் செய்தார். அதுவும் பிரக்யாதி பெற்றுவிட்டது. இவ்வளவு பெருமை வாய்ந்த பிரசுரத்திற்கு தாம் உதவி செய்யவில்லையே என்று பிரபுவுக்கு உள்ளம் துடித்தது. உடனே பாராட்டுக் கடிதம் எழுதினார்.

அதற்கு ஜான்ஸன் எழுதின பதில் தான் பணக்காரர்கள் பெயரால் சமர்ப்பணம் செய்து புஸ்தகம் பிரசுரம் செய்யும் வழக்கத்தை அடியோடு ஒழித்தது. "தண்ணீரில் வீழ்ந்தவனுக்கு உடனே கை கொடுக்காமல் அவன் எப்படியோ கரை சேர்ந்த பிறகு உதவியைச் சுமத்த வருவதைப் பாராட்டுகி

றேன். ஆனால் அது தேவையில்லை'' என்பதுதான் பதிலின் சாரம்.

இவருடைய தகப்பனார் புஸ்தக வியாபாரி. அதே தொழிலை தன் மகன் மேற்கொள்ள வேண்டுமென்பதுதான் அவர் அவா. பிதாவின் வார்த்தையைக் கேளாமல் ஜான்ஸன் ஆசிரியரானார். பிழைப்புக்கு கஷ்டப்பட்டார். தகப்பன் வார்த்தையைக் கேட்காததனால் தானே கஷ்டப்பட்டோம் என்பதைச் சிந்தித்து அதற்குப் பிராயசித்தமாக தன் தகப்பனார் கடைமுன் தலைத் தொப்பியை எடுத்து விட்டு வெயிலில் நின்றாராம். பாஸ்வெல் என்பவர் ஜான்ஸனின் சரித்திரத்தை விரிவாக எழுதியிருக்கிறார். இது சரித்திரப்பிரசித்தி பெற்ற புஸ்தகம். நமது தமிழ் ஆசிரியர்களைப் பற்றி இம்மாதிரி புஸ்தகங்கள் வெளிவந்தால் எவ்வளவு ரஸமாயிருக்கும். நமது கம்பரைப்பற்றி ஒருவாழ்க்கைச் சரித்திரம் எழுதியிருந்தால் இன்று அவருடைய ராமாயணத்தை இன்னும் சுவையுடன் படிப்போம்.

* * *

ஸர் வால்டர் ஸ்காட் எனும் பிரபல நாவல் ஆசிரியர் சிவில் கடனுக்காக சிறைப் படுத்தப் பட்டார். அந்தக் கடனைத் தீர்ப்பதற்காக அவருடைய பிரக்யாதி பெற்ற நாவல்களை சிறையிலேயே எழுதினார். அவர் எழுத எழுத ஒவ்வொரு தாளாக அவர் திருப்பிக் கூடப் படிக்காமல் பிரசுர கர்த்தர்கள் எடுத்துக் கொண்டுபோய் அச்சுக்குக் கொடுத்தார்கள். புஸ்தகங்கள் பிரசுரமாகி கடன் தீர்ந்து ஸ்காட் வெளி வந்தார்.

* * *

ஆஸ்கார்வொயில்டு எனும் ஆசிரியர் கவர்ச்சி மிக்க நடையழகைக் கையாண்டவர். அவர் நடையழகில் லயித்து அவர் கருத்துக்களை அப்படியே ஏற்றுக் கொண்டு விடலாம் என்று தோன்றும். அவர் ஒழுக்கக் குறைவாக வாழ்க்கை நடத்தியதாக தண்டனை பெற்றவர். ஆகையால் அவர் நூல்களைப் படித்ததாக சிலர் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆனாலும் அவருடைய நூல்களைப் படிக்காமலிருக்கலாகாது. அவருடைய ருசிகரமான சூத்திரங்களில் சிலவற்றைப் படியுங்கள்:

"தனிமையை ஒழிக்க ஆடவன் இல்வாழ்க்கையை நாடுகிறான். ஒருவித ஆவலைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மடந்தையர் மணவாழ்க்கையை நாடுகின்றனர். ஆனால் இரு சாரரும் ஏமாற்றமடைகின்றனர்''

"கடவுளிடமுள்ள பயமே மதத்திற்குக் காரணம். சமூகத்தினிடமுள்ள அச்சமே ஒழுக்கத்திற்கு அஸ்திவாரம்''

"ஆசையை அடக்க வேண்டுமானால் அதற்கு இணங்குவது தான் சிறந்தவழி.''

இவ்வாறு பொறி பறக்கும்படி எழுதுவார். இப்படி பல ஆசிரியர்களைப் பற்றி கதைகள் எழுதலாம். புஸ்தகங்களைவிட அவைகளைப் பற்றிய சர்ச்சை ஆங்கில சஞ்சிகைகளில் அதிகமாகக் காணப்படுகிறது. நமது நாட்டில் விமர்சனம் என்பது ஒரு கலை என்பதை வெகு சிலரே அறிந்து கொண்டிருக்கின்றனர். உள்ளதை எழுதினால் ஆசிரியர் மனஸ்தாபம் ஏற்படுமோ என்று அச்சப்படுகின்றனர். இந்த நோய் தீருவதற்கு அன்னிய இலக்கிய ஞானமே கைகண்ட மருந்து.

★

ரோஜாக் கொத்து

(ஆர். ஜானகி)

"லீலா இதென்ன இவ்வளவு அமர்க்களம் இன்றைக்கு? மேஜை நாற்காலி யெல்லாம் துடைக்கிற துடைப்பில் பாலிஷெல்லாம் போய்விடும் போலிருக்கிறது! சோபாவில் போட்டிருக்கும் திண்டுகளைத் தூசி போகத் தட்டும் தட்டில் காதெல்லாம் செவிடாய்ப் போகிறது! பீரோவிலிருக்கும் புடவைகளையெல்லாம் வெளியே எடுத்துக் கடை பரப்பி வைத்திருக்கிறாய்! என்ன விசேஷம்? உன்னை யாராவது பெண்கிண் பார்க்க வருகிறார்களா, என்ன?" என்றான் லீலாவின் சகோதரன் மனோஹர். லீலா முகத்தைச் சிணுக்கிக் கொண்டே "போதும் பரிகாசம். நாளைக்கு பாம்பேயிலிருந்து என் பேனா சினேகிதி வஸந்தா வரப் போகிறாளாக்கும். அவள் வந்தால் நீ ரொம்ப அடக்க ஒடுக்கமாயிருக்க மேண்டும். சிநேகிதர்களை யழைத்துக் கொண்டு வந்து மாடி அறையில் கலாட்டா செய்யக் கூடாது. சினிமாப் பாட்டு பாடக் கூடாது. உன் காலேஜ் பாடங்களை மடாத்தப்பளை மாதிரி கத்திப் படிக்கக் கூடாது. அப்புறம்............" "ஓகோ, நான் செய்யக் கூடாதவை இன்னும் ஏதாவது உண்டோ, இவ்வளவுதானே?"

"ஓஹோ என்ன ஆஹா என்ன? நான் சொல்லுகிற படி கேட்டுத் தானாக வேண்டும். இல்லா விட்டால் எனக்கு ரொம்பக் கோபம் வரும் தெரியுமா! அது இருக்கட்டும் இந்தப் போட்டோவைப் பார். இதுதான் நாளைக்கு வரப் போகும் சிநேகிதியின் படம். எவ்வளவு நாகரீகமாக உடுத்திக் கொண்டிருக்கிறாள் பார்த்தாயா? நானும் நாளைக்கு நல்ல புடவையாய்க் கட்டிக் கொண்டு அவளை அழைக்கப் போக வேண்டும். இந்தப் புடவைகள் ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை. எதைக் கட்டிக்கொண்டு பேகலாம்? நீ தான் சொல்லேன்."

"என் லீலா, உனக்கு மொத்தம் சுமார் எவ்வளவு புடவைகள் இருக்கும்?"

"எழுபது எழுபத்தைந்து புடவைகளிருக்கும் அவ்வளவுதான்?"

"ரொம்பக் குறைச்சல்! இன்னும் கூட ஒரு இருபத்தைந்தாவது இருந்தால் தான் பொறுக்கியெடுத்துக் கட்டிக் கொள்ளச் சௌகரிய மாயிருக்கும். சீக்கிரமா கடைக்குப் புறப்படு! ஹூம். பேனாவாம், சிநேகிதியாம். சிநேகிதி வந்தால் நான் அடக்க ஒடுக்கமாயிருக்க வேண்டுமாம்! எல்லாம் கலிகாலம்!" மனோஹர் விடுவிடுவென்று வெளியே போய் விட்டான். சகோதரனின் உதவியின்றியே லீலா, மறுநாளைக்கு வேண்டிய புடவையைத் தேர்ந்தெடுத்தாள்.

மறு நாள் மாலை. லீலா ஒரு நீல மேக வர்ணப் புடவை தரித்திருந்தாள். நல்ல நீலத்தில் வெகு நாகரிகமாகத் தைத்திருந்த ரவிக்கை. தலையில் நீல வனஜாம்பரம். கைகளில் நீல நிறத்தில் கண்ணாடி வளையல்கள். கால்களில் அதே நிறத்தில் ஷூஸ். கண்ணாடி முன் நின்று தன் சிங்காரத்தைப் பரிசீலனை செய்து பார்த்தாள். முகத்தில் தவழ்ந்த புன்முறுவல் அவள் மனத் திருப்தியை அறிவித்தது.

ஒரு ரிக்ஷாவில் ஏறிக் கொண்டு பேனா சிநேகிதி வஸந்தாவை அழைத்துவர சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டாள் லீலா. காகிதத்தினால் செய்த ஒரு ரோஜாக் கொத்தை கையில் பிடித்துக் கொண்டிருந்தாள். இதே மாதிரி ஒரு பூங்கொத்து அவள் சிநேகிதி வஸந்தாவும், ரயில், ஸ்டேஷனுக்குள் வரும்போது கையில் வைத்துக் கொள்வதாக எழுதியிருந்தாள். ஸ்டேஷன் கூட்டத்தில் இவர்கள் ஒருவருக்கொருவர் எளிதில் அடையாளம் கண்டு பிடித்துக் கொள்வதற்காக இந்த ஏற்பாடு.

லீலா ஸ்டேஷனையடைந்து பாம்பே வண்டி வந்து நிற்கும் பிளாட்பாரத்திற்குப் போனாள். அவள் மனம் அளவற்ற ஆவலுடன் திக்குத் திக்கென்று அடித்துக் கொண்டது.

மணி பத்தாகி விட்டது. பாம்பே வண்டி பெரிய சத்தம் போட்டுக் கொண்டு குபுகுபு வென்று வந்தது. ஸ்டேஷனெங்கும் ஒரே பரப்பு. பேனா சிநேகிதி வஸந்தாவைத் தேடிக் கொண்டு லீலா வண்டி வண்டியாகப் பார்த்துக் கொண்டே போனாள். ஒரு வண்டியிலும் ரோஜாக் கொத்து வைத்திருக்கும் நாகரிக நங்கையைக் காணோம். லீலா மிகுந்த ஏமாற்றமும் மனச் சோர்வும் அடைந்து வீடு திரும்பத் தீர்மானித்தாள். அப்பொழுது "தாங்கள் தான் மிஸ் லீலாவோ?" என்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. லீலா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் எதிரே ஒரு அழகிய வாலிபன் நின்று கொண்டிருந்தான். அவன் கையிலும் காகிதத்தினாலான ஒரு ஒரு ரோஜாக் கொத்து இருந்தது. லீலா ஒரு நிமிஷம் திகைத்து நின்றாள். பிறகு, "நீங்கள் யார்?" என்று கேட்டாள். அவன் சிரித்துக் கொண்டே, "நான் தான் வசந்தா" என்றான். லீலா ஒன்றும் புரியாமல், "என்ன" என்று கேட்டாள். அந்த வாலிபன் அவள் அழகை அள்ளிப் பருகுவதைப் போல் அவளையே உற்றுப் பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டான். லீலா மறுபடியும், "நீங்கள் சொல்வதொன்றும் புரியவில்லையே?" என்று கேட்டாள். வாலிபன் சிரித்துக் கொண்டே "மிஸ் லீலா, என்னை நீங்கள் கிருபை கூர்ந்து மன்னிக்க வேண்டும். நான் தான் உங்களுக்கு வஸந்தா வென்று பெயர் வைத்துக் கொண்டு கடிதங்கள் எழுதி வந்தேன். உங்களுக்கு நான் அனுப்பிய படம் என் தங்கையினுடையது. நான் செய்தது தப்புத்தான். உங்கள் கடிதங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. உண்மையைச் சொன்னால் கடிதம் எழுதுவதை எங்கே நிறுத்தி விடுவீர்களோ என்று பயந்து கொண்டு வஸந்தகுமார் என்னும் என் சொந்தப் பெயருக்குப் பதிலாக வஸந்தா என்று பெண் பெயரையே வைத்துக் கடிதங்கள் எழுதிக் கொண்டு வந்தேன். இந்தச் சிறு பிசகிற்காக என்னை நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?" என்றான்.

ஆனால் லீலாவிற்கோ முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

பேனா சிநேகிதி வரப் போகிறாள், வரப்போகிறாள் என்று வீட்டில் என்ன அமர்க்களப் படுத்தினாள்! அண்ணாவை வேறு அப்படி இருக்க வேண்டும் இப்படி இருக்க வேண்டும் என்று சட்ட திட்டம் போட்டாள்! இப்பொழுது எல்லாம் வீண்! இவ்வளவு நாசுக்காய் ட்ரஸ் பண்ணிக் கொண்டது! வீண்! உண்மை தெரிந்தால் அண்ணா வேறு கேலி பண்ணித் தீர்த்து விடுவான்! லீலாவுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. கோபமும் துக்கமும் நெஞ்சையடைக்க பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தாள். அதற்குள் அந்த வாலிபன், "நாளைச் சாயந்திரம் உங்களை சாவகாசமாக வந்து பார்க்கிறேன்!" என்றான். லீலா பல்லை நெறித்துக் கொண்டு, "உங்களை ஒருத்தரும் இங்கே அழைக்கவில்லை!" என்று சொல்லி விட்டு திரும்பிக் கூடப் பாராமல் விர்ரென்று நடந்து போய் ஒரு ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள். அந்த வாலிபன் சிறிது வாடிய முகத்துடன் ஒரு டாக்ஸி பேசி அதில் ஏறிக் கொண்டான்.

லீலாவின் தாயாரும் மனோஹரனும் அவள் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். லீலா ரிக்ஷாவை விட்டு இறங்கியதும், "சிநேகிதி எங்கே" என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டார்கள். லீலாவுக்கு ரொம்ப கஷ்டமாகப் போய் விட்டது. நடந்த சமாச்சாரம் ஒன்றையும் சொல்லாமல், "என்ன காரணமோ, அவள் வரவில்லை. ஏதாவது உடம்பிற்கு வந்து விட்டதோ என்னவோ?" என்றாள்.

"அப்பா, கவலை தீர்ந்தது. நான் இனிமேல் சினிமாப் பாட்டுப் பாடலாமோ இல்லையோ?" என்று மனோஹரன் கேலி பண்ண ஆரம்பித்தான். லீலா பரிதாபமான முகத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் கேலியை நிறுத்திக் கொண்டான்.

லீலா மாடிக்குப் போனாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளை அப்படியே பிரமிக்கச் செய்தது. மாடி அறை ஒன்றில் அவள் சென்ட்ரல் ஸ்டேஷனில் சந்தித்த அதே வாலிபன், கால் மேல் கால் போட்டுக் கொண்டு ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்! அவன் இவளைப் பார்த்தவுடன் புன்னகை புரிந்துவிட்டு பத்திரிகையால் முகத்தை மூடிக்கொண்டான். ஆனால் அவன் தோள் மேலும் கீழும் ஆடியதிலிருந்து அவன் குலுங்கக் குலுங்கச் சிரித்தானென்று தெரிய வந்தது.

லீலா விடுவிடுவென்று கீழே இறங்கினாள். தாயாரிடம் போய், "அது யாரது மாடியறையில் இருக்கிறது?" என்று இரைந்தாள். "ஓ! அதுவா. யாரோ டாக்டராம். பேர் வஸந்தகுமாராம். பாம்பேலிருந்து இந்த ஊருக்கு ஏதோ ஸ்பெஷலாய்ப் படிப்பதற்கு வந்திருக்கிறானாம். ஒரு வாரந்தான் இருப்பானாம். ஒரு வாரத்திற்குப் பதினைந்து ரூபாய் வாடகை கொடுக்கிறேன் என்றான். சரியென்று நான் அறையை ஒழித்து விட்டேன். ரொம்ப மரியாதையாகப் பேசுகிறான். நல்ல பிள்ளையாகப் பேசுகிறான்" என்றாள். லீலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "சித்த நாழிகைக்குள் ரொம்ப மரியாதையெல்லாம் கண்டு விட்டாயாக்கும். முன்பின் தெரியாதவனை சட்டென்று குடி வைத்து விட்டாயே!" என்று கத்தினாள். "உச்... உன் வேலையைப் பார். இதற்கெல்லாம் நீ வராதே!" என்று கடிந்தாள் லீலாவின் தாயார்.

இந்தத் துணிச்சலான வாலிபனை எப்படியாவது வீட்டை விட்டுத் துரத்திவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டாள் லீலா. அன்றிரவு பத்து மணி இருக்கும். எல்லோரும் படுக்கைக்குப் போகும் சமயம். லீலா மனோகரன் அறைக்குப் போனாள்.

அவன் அப்பொழுது தான் படுக்கை விரித்துக் கொண்டிருந்தான். லீலா அவனிடம் போய் "மனோ, எனக்குத் தூக்கமே வரவில்லை. ஏதாவது சினிமாப் பாட்டு நல்லதாக இரண்டு பாடேன் கேட்கிறேன்" என்றாள். மனோஹரன் அவளைக் கொட்டை கொட்டையாக விழித்துப் பார்த்தான். தான் பாடக் கிளம்பினால் காதைப் பொத்திக் கொண்டு ஓடிப் போகிறவள் இன்றைக்குப் பத்து மணிக்கு மேல் வலிய வந்து "பாட்டுப் பாடு!" என்றால் அவனுக்கு ஆச்சரியமாயிருக்காதா? "என்னடா முழிக்கிறாய். வேண்டாம் வேண்டாம் என்றால் கத்துவாய். இன்றைக்கு நானே வந்து பாடு என்று கேட்டால் ரொம்ப ராங்கி பண்ணிக் கொள்கிறாயே!" என்றாள் லீலா. "ராங்கி ஒன்றுமில்லை லீலா. எதிர்த்த அறையில் வஸந்தகுமார் ஏதோ படித்துக் கொண்டிருக்கிறார். நான் பாட ஆரம்பித்தால் அவர் சண்டைக்கு வரமாட்டாரா? நீயே சொல்லு! " என்றான் அவன். லீலா ரொம்பக் கோபத்துடன் "நம்ம வீட்டில் நாம் பாடுவதற்கு யார் சண்டைக்கு வருகிறது? நீ ஹார்மோனியத்தை எடுத்து வைத்துக் கொண்டு பாடு. நான் வராந்தாவில் நின்று கொண்டு ஆனந்தமாய்க் கேட்கிறேன். சண்டைக்கு வருகிறவர்களைப் பார்க்கலாம்!" என்று சத்தம் போட்டு சொல்லி விட்டு வராந்தாவுக்குப் போனாள். எதிர்த்த அறையிலிருப்பவர் சண்டைக்கு வரமாட்டாரா என்று தானே அவள் ஜபம் செய்து கொண்டிருந்தாள்!

மனோஹரன் ஹார்மோனியம் வாசித்துக் கொண்டு பாட ஆரம்பித்தான். லீலா மிகுந்த பொறுமையுடன் வெளியிலிருந்த படியே கேட்டுக் கொண்டிருந்தாள். ஐந்து நிமிஷம் கழித்து இன்னொரு கர்ண கடூரமான குரல் மனோஹரன் குரலுடன் சேர்ந்து கேட்டது. லீலா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். உள்ளே மனோஹரனும் வஸந்தகுமாரும் ஒரு பாட்டை மாறிமாறி எவ்வளவு மோசமாகக் கத்த முடியுமோ அவ்வளவு மோசமாகக் கத்திக் கொண்டிருந்தார்கள். லீலாவால் சகிக்கவே முடியவில்லை. அவளுக்கு ஒரே எரிச்சலாய் வந்தது. விழுந்தடித்துக் கொண்டு கீழே ஓடினாள்.

இரவு பனிரண்டு மணியிருக்கும். வீட்டில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வஸந்தகுமாரையும் லீலாவையும் தவிர. லீலா அவனை மட்டந்தட்ட வழியில்லையா எனத் தீவிர ஆலோசனை செய்து கொண்டிருந்தாள். அவளுக்குப் படுக்கையே கொள்ளவில்லை. மெள்ள எழுந்திருந்து மாடிப் பக்கம் சென்றாள். வஸந்தகுமார் ஒரு பெரிய புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தான். லீலா மெதுவாகக் கீழே இறங்கி எலெக்டிரிக் மெயின் ஸ்விட்சைப் போட்டு அவன் ரூமிலிருந்த விளக்கை அணைத்து விட்டாள். பிறகு மெதுவாக நடந்து போய் அவன் அறைக் கருகில் நின்று கொண்டாள். இருட்டில் அவன் தட்டுத் தடுமாறும் சத்தம் அவளுக்கு நன்றாய்க் கேட்டது. அவளுக்கு ஒரே ஆனந்தம்! ஆனால் திடீரென்று அவன் எதன் மேலேயோ பலமாக முட்டிக் கொண்டாற்

போல் சத்தம் கேட்டது. பிறகு இரண்டு வினடிகளுக்குள் வலி பொறுக்க முடியாமல் முனகுவது போல் சப்தம். அப்புறம் ஒரே நிசப்தம்.

லீலாவுக்கு இப்பொழுது ஒரே திகிலாய்ப் போய் விட்டது. "இருட்டில் தட்டுத் தடுமாறி எதன் மேலாவது மோதிக் கொண்டு மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டாரோ? எங்காவது பெரிய காயம் பட்டு ரத்தம் கொட்டிக் கொண்டிருக்கிறதோ என்னவோ? உடனே உதவி செய்யா விட்டால் ஏதாவது அபாயம் நேரிட்டு விட்டால்!" இப்படியெல்லாம் லீலாவின் எண்ணங்கள் தாறுமாருய் ஓடின. அவள் உடம்பெல்லாம் ஒரே வியர் வையர்ய் வியர்த்தது. என்ன செய்வதென்றறியாமல் கைகளைப் பிசைந்து கொண்டாள். "அம்மாவை எழுப்பலாமா? எழுப்பினுலும் தன் அசட்டுக் காரியத்தை எப்படிச் சொல்வது? உள்ளே இருக்கிறவர் பிழைத்திருக்கிருரோ இல்லையோ என்று கூடத் தெரியவில்லையே!" லீலா கொஞ்ச நேரம் விசித்து விசித்து அழுதாள். வஸந்தகுமாருக்கு ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே என்று ஒரு தெய்வம் விடாமல் வேண்டிக் கொண்டாள். அவள் பிரார்த்தனை தெய்வத்தின் காதில் விழுந்ததோ என்னவோ, உள்ளே வஸந்தகுமார் முனகும் சப்தம் கேட்டது. ஆசாமி உயிரோடுதானிருக்கிருன் என்று தெரிந்ததும் லீலாவிற்குப் பிராணன் வந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளே அவன் நடமாடும் சப்தமும் கேட்டது. லீலாவுக்குத் தைரியம் வந்தது.

கீழே இறங்கிப் போய் படுத்துக் கொண்டு எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணினுள் லீலா. அசட்டுத்தனமாக விளக்கணைக்கப் போக வஸந்தகுமாருக்கு எங்கே அடிபட்டதோ, காயம் பட்டதோ என்று துக்கப் பட்டாள். தான் இதுவரையில் செய்ததெல்லாம் ரொம்ப ரொம்ப அசட்டுக் காரியம் என்று அவளுக்குத் தோன்றிற்று.

மறுநாள் பொழுது விடிந்ததோ இல்லையோ லீலா வஸந்தகுமாரின் அறைக்கருகே நின்றுகொண்டு அவன் கதவை எப்பொழுது திறக்கப் போகிருனே என்று ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் வஸந்தகுமார் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்தான். அவன் தலையில் ஒரு பெரிய கட்டு கட்டியிருந்தது. லீலா ஏதோ கேட்பதற்காக வாயெடுத்தாள். ஆனல் அதற்குள் அவன் "நேற்று நான் ரொம்ப மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்ததில் மணி ஆனதே தெரியவில்லை. ரொம்ப நாழிகை ஆகிவிட்டது என்று தெரிந்திருந்தால் நானே விளக்கணைத்திருப்பேன். சிரமப் பட்டுக் கீழே போய் விளக்கணைக்கும் சிரமத்தைத் தங்களுக்குக் கொடுத்திருக்க மாட்டேன். மன்னிக்க வேண்டும்!" என்ருன் சிரித்துக் கொண்டே. லீலாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "நான் விளக்கணைத்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்ருள். "நீங்கள் என் அறைக்கருகே வரும்போது நான் பார்த்துக் கொண்டுதானிருந்தேன். பிறகு கீழே போய் விளக்கணைக்கும் சப்தமும் எனக்குக் கேட்டது."

லீலா மிகவும் வணக்கமாக, "தயவு செய்து மன்னிக்க வேண்டும். இருட்டில் உங்களுக்கு ஏதாவது காயம் பட்டதோ?" என்ருள். "ஓ, அதுவா. விளக்

கணைந்து போனவுடன் படுத்துக் கொள்ளலாம் என்று போனேன். இருட்டில் கட்டில் முனையில் மோதிக் கொண்டேன். தலையில் காயம்பட்டு கொஞ்சம் ரத்தம் கசிந்தது. சிறிது நேரம் மூர்ச்சை கூடப் போட்டு விட்டது. பிறகு விழிப்பு வந்தவுடன் கையிலகப் பட்ட துணியை எடுத்து வலிக்காகக் கட்டிக் கொண்டேன். காயம் அப்படி ரொம்ப பெரிதல்ல, நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்றான். லீலாவுக்குக் கண்களில் நீர் வந்து விட்டது. "தெரியாமல் செய்து விட்டேன். தயவு செய்து மன்னியுங்கள். ம்......... அம்மாவிடம் இதைச் சொல்ல வேண்டாம்!'' என்றாள். இதற்குள் யாரோ வரும் சந்தடி கேட்கவே லீலா கீழே ஓடிப் போய் விட்டாள்.

வஸந்தகுமாருக்கு தலையில் பட்ட காயம் ரொம்ப மெதுவாகவே குணமாகிக் கொண்டு வந்தது. இதற்குள் லீலா அவனுடன் நன்கு பழகி விட்டாள். அவனுடன் பேசுவதில் லீலாவுக்கு ஒரு தனி ஆனந்தம் ஏற்பட்டது. அவன் ரொம்ப வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவான். லீலாவுக்குச் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிடும். அவனுடன் பேசுவதற்கு எப்பொழுது சமயம் வாய்க்கும் வாய்க்கும் என்று எதிர் பார்த்திருப்பாள். அல்லும் பகலும் அவளுக்கு அவன் நினைவாகவே ஆகிவிட்டது. தன் மனப் போக்கைக் கண்டு அவளே ஆச்சரியப் பட்டுக் கொண்டாள்.

ஒரு பௌர்ணமி தினத்தன்று லீலா மாடித்தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தாள். பூர்ணச் சந்திரனின் வெள்ளிக் கிரணங்கள் அவள் பெரு மூச்சை அதிகரிக்கச் செய்தன. ஆமாம்! அவள் வஸந்தகுமாரை நினைத்து நினைத்துத் தான் அப்படி பெருமூச்செறிந்தாள். பெண்ணுள்ளத்தின் தாபத் துடிப்புக்கு வெண்ணிலா தூபம் போட்டது. வஸந்தகுமாரின் மன நிலையை அவளால் அறிய முடியவில்லை. அவளுடன் அவன் வெகு சாதாரணமாகப் பழகினான். மிகவும் அன்பாகவும், பிரியமாகவும், மரியாதையாகவும் பேசினான் ஆனால் அதற்கு மேல் அவன் மன வெழுச்சிகளைப் பற்றி லீலாவால் தெரிந்து கொள்ள முடியவில்லை. "ஒரு வேளை அவருக்குக் கலியாணமாகியிருந்தால்... அல்லது நிச்சயமாகியிருந்தால்'' என்று நினைக்கும் போதே அவளுக்குப் 'பகீர்' என்றது.

"லீலா, எனக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டதே. உனக்குத் தெரியுமோ? இதோ பார் அழைப்புப் பத்திரிகை! நீ என் கல்யாணத்திற்கு அவசியம் வந்தாக வேண்டும்!'' என்று சொல்லிக் கொண்டே வஸந்தகுமார் எங்கிருந்தோ அவள் பக்கம் வந்தான். லீலாவின் மனக் கோட்டைகள் இன்பக் கனவுகள் எல்லாம் ஒரே நொடியில் தகர்ந்து போன மாதிரி இருந்தது. கடைசியில் தான் பயந்தது பலித்து விட்டதே என்று நினைத்த பொழுது அவளுக்குத் துக்கம் நெஞ்சைப் பிளந்தது. 'என்னடா உலகம்' என்று சோர்ந்து போனாள். இருந்தாலும் ரொம்பச் சிரமப் பட்டு முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு "ஓகோ, உங்களுக்குக் கலியாணமா? ரொம்பச் சந்தோஷம். கட்டாயம் வருகிறேன்.'' என்றாள். "கலியாணப் பத்திரிகையைப் படிக்க வேண்டாமா? படித்துப் பார்!'' என்று சொல்லிக் கொண்டே பத்திரிகையை அவள் கையில் வைத்து விட்டு வஸந்தகுமார் அவளுக்கு ரொம்பப் பக்கத்தில் போய் நின்று கொண்டான். லீலாவிற்குக் கோபம்

கோபமாய் வந்தது. கைகள் நடுநடுங்கப் பத்திரிகையைப் பிரித்து படிக்க ஆரம்பித்தாள். அதில் மணமகள் பெயர் லீலா வென்று போட்டிருந்தது! கீழே அவள் அண்ணன் மனோஹரன் பெயரும் போட்டிருந்தது! அவளுக்குத் தகப்பனார் இல்லாததால் அவள் சகோதரன் பெயரையே பிரதானமாகப் போட்டிருந்தது. ஆமாம், சந்தேகமில்லாமல் அது அவள் சொந்தக் கலியாணப் பத்திரிகைதான்! லீலாவின் ஆச்சரியத்திற்கும் ஆனந்தத்திற்கும் அளவேயில்லை. அவள் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பொழிந்தது. இருந்தாலும் அவள் கோபத்தை வரவழைத்துக் கொண்டு "இதென்ன அநியாயம்! பெரியவர்களை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமா? என் சம்மதத்தைப் பற்றி ஒன்றுமே கேட்காமல் நீங்கள் எப்படிப் பத்திரிகை அடிக்கலாம்?" என்றாள். வஸந்தகுமார் புன்முறுவலுடன் "பெரியவர்களையெல்லாம் கேட்டாகிவிட்டது. உங்கம்மாவும் அண்ணனும் நீ சரியென்றால் தங்களுக்கு ஒரு ஆக்ஷேபணையுமில்லை யென்று சொல்லி விட்டார்கள். அதனால்தான் நான் அவ்வளவு தைரியமாக பத்திரிகை அடித்து விட்டேன்" என்றான். லீலா ரொம்ப கோபமாக "ஓகோ உங்களுக்கு அவ்வளவு தைரியமா? நான் இப்பொழுது கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வீர்களாம்?" என்று கேட்டாள். வஸந்தகுமார் அவள் மோவாயைப் பிடித்துக் கொண்டு, "எங்கே மாட்டேன் என்று சொல்லு பார்க்கலாம்!" என்றான். அதற்கு லீலாவின் பதில், ஆனந்தமும் லளிதமும் நிறைந்த ஒரு முல்லை முறுவல் தான்.

மறுநாள் காலை. வஸந்தகுமார் தன் தாயார் தகப்பனாருக்கு இந்த சுப சமாச்சாரத்தைத் தெரிவிப்பதற்காக பாம்பேக்குப் பிரயாணப் பட்டுக் கொண்டிருந்தான். ரயிலேறியாகி விட்டது. தலையில் இன்னும் கட்டுக் கட்டியே இருந்தது. பலத்த காயமோ என்னமோ? வழியனுப்புவதற்கு லீலா ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள். ரயில் புறப்பட நேரமாயிற்று. லீலா அவனை தலையில் பட்ட காயத்தை ஜாக்கிரதையாகப் பார்த்து மருந்து தவறாமல் போட்டுக் கொள்ளும்படி புத்திமதி கூறினாள். வஸந்தகுமார் சரி சரியென்று தலையாட்டினான். ஆனால் ஸ்டேஷனை விட்டு ரயில் கொஞ்ச தூரம் போனவுடன் அவன் ஒரு விசித்திரமான காரியம் செய்தான். தலையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்து ஜன்னல் வழியாக தூர விட்டெறிந்தான். ஏன்? இனிமேல் எதற்காகக் கட்டு வேண்டும்?

லீலாவின் அன்பையும் அனுதாபத்தையும் பெறப் போட்ட வேஷந்தான் என்றாலும், இப்போது அவன் கட்டுத் தளைகளை மீறிய ஆனந்தத்தில் அல்லவா திளைத்துக் கொண்டிருக்கிறான்!

அருவி

"சுகி"

காலையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். அதில் 'குற்றாலத்தில் நல்ல சீசன், அருவியில் தண்ணீர் கொட்டுகிறது' என்று போட்டிருந்தது. இச் செய்தி எனக்கு அமிர்த தாரையாக இருந்தது. உடனே, குற்றால அருவியின் ஞாபகம் வந்து குற்றாலம் போய்விட நினைத்தேன். காரணம் சென்ற ஒரு வருஷ காலமாக நான் குழாயடியில் குளித்து வருவது தான்.

குளிப்பது என்றால், அரைக் கால் இஞ்சு குழாயடியில் குந்திக் கொண்டு, தண்ணீர் என்று சொல்லப்படும் திரவ பதார்த்தத்தில் உடம்பை நனைத்துக்கொள்வதல்ல. ஆனால், பட்டணவாசியாகி விட்ட எனக்கு, சொட்டுகிற குழாயடியை விட்டால், கதி மோக்ஷமும் கிடையாது. இப்படி உடம்பை நனைத்துக் கொள்ளுகிறதை, நான் 'ஸ்நானம்' என்றோ, 'குளிப்பது' என்றோ சொல்ல மாட்டேன். இதற்குச் சரியான பதம் தமிழில் இல்லை, ஐயா, இல்லவே இல்லை!

குழாயடிக்குப் பயந்து குளிக்காமல் இருக்கவும் முடியவில்லை. ஜலதோஷம் பிடித்திருந்தாலும் அன்றாடம் குளித்துத் தொலைப்பேன். இப்படிக் குளிக்கா விட்டால் பித்துப் பிடித்தது போல் இருக்கிறது. ஒன்றும் ஓடுவதில்லை. குளித்த பிறகுதான் 'கச்சிதமாக' இருக்கிறது.

'குளிக்கிறது' என்றால் ஆற்றையே ரெண்டாகக் கலக்கிக் குளிக்க வேண்டும். முங்கி, மூழ்கி, கும்மாளம் போட வேண்டும். அப்படி குளிப்பதில் உண்டாகும் சுகமும், ஆனந்தமும்......கேவலம், வசனத்தில் சொல்ல முடியாது.

ஸ்நானம் செய்ய வேண்டுமானால், ஆறோ, குளமோ, இது தான் சரி. குளத்தில் நம் மனம் போனபடி நீந்தலாம். ஆனால் ஆற்றிலோ, அதன் மனப்போக்கின் படி நீந்தி விளையாட வேண்டும். குளிர்ந்த தண்ணீரில், முங்கி மூழ்கி, குதித்து ஓடியாடி, தொட்டுப் பிடித்து, குட்டிக் கரணங்கள் போட்டு விளையாடலாம். அரைக் கால் இஞ்சு குழாயடியில் எங்கே விளையாடுகிறது? எங்கிருந்து குதிக்கிறது? விளையாட்டாவது, மண்ணுங் கட்டியாவது? ஆற்றிலிறங்கி அழகுபட குளிக்கத் தெரியாத பட்டண வாசிகள் எத்தனை பேரிருக்கிறார்கள்? தண்ணீரிலும் ஆற்றுத் தண்ணீரின் சுகமே அலாதி. அதிலும் எங்களூர் நதி, தாமிரவர்ணி, அடடா, பிரம்மானந்தந்தான். பாரதியின் வாக்குப் படி, தமிழ் கண்ட பொருநை நதி. அந்நதி தீரத்தில் தமிழ் வளத்தைப் போலவே நீர் வளமும் ஓடுகிறது; சாடுகிறது. வளம் என்றதும் மற்ற நதிகளில் வருமே 'வண்டல்' அதைச் சொல்லவில்லை. காசு செலவின்றி காஷாய வஸ்திரமாக்குகிற நதிகளைப் போல் தண்ணீரின் நிறம் இருக்குமோ? அப்படி இருக்காது.

பளிங்கு என்றால் தாமிரவர்ணி சீமையில் தண்ணீருக்குத் தான் சொல்லுவார்கள். நதிக் கரையின் ஓரமாக நின்றால், நம்முக பிம்பத்

தைக் காணலாம். அப்படி பளிங்கு போல் இருக்கும். வாயில் ஊற்றிக் கொண்டால் கறுப்பஞ் சாறுதான், குளிர்ச்சியோ பன்னீர் மாதிரி. குளிக்க குளிக்க இன்னும் குளிக்க வேண்டுமென்று தோன்றும். குழாயடியில் குளிக்கும் போது, நம்மில் எத்தனை பேருக்கு, கூடசிறிதுநேரம் சுகத்திற்காக குளிப்போமெனத் தோன்றுகிறது?

தாமிரவர்ணி ஆற்றில் இறங்கி விட்டால், கீழே தூய வெண் மணல், மிருதுவாக மல்லிகைப் பூப்போல இருக்கும். ஆற்றின் நடுவே, குத்திட்டு நிற்கும் பாறைகள்; பாறைகளுக்கு ஊடாக வெள்ளி உருக்கி ஓடுவது போல், தண்ணீர் பாய்ச்சல். சுழல்களும், குமிழிகளும், கும்மாளமிட்டு, நுங்கு நுரையுமாக, காலை கதிரவன் கிரணங்களின் வர்ண பேதங்களை பிரதிபலிப்பதை நினைக்க நினைக்க என் நெஞ்சம் புளகிதம் அடைகிறது. தண்ணீரிலே, பிறந்து, வளர்ந்து அதனோடு வசிக்கக் கொடுத்து வைக்கக் கூடாதா, என்ற எண்ணம் பிறக்கும்.

ஆனல்...ராம...ராம...குழாயடியில் குளிக்கிறவர்கள்......சிலர் ஸ்நானம் செய்யாமல், முகத்தை மட்டும் கழுவிக் கொள்கிறது. இப்படித் தேக சுத்தம் செய்ய, தண்ணீர் பிடிக்க வந்த குழாயடியில் மன அசுத்தமான பேச்சுகளும், ஏச்சுகளும் நடப்பதை குழாயடியில் காணலாம்.

நதிக் கரைகளில் எத்தகைய அழகிய காட்சிகளை காண்கிறோம்? காலை நேரத்தில், உதய சூரியனோடு குளித்த பெண்கள் கோதிய கூந்தலை எடுத்துச் சொருகியோ, அல்லது துவளத் துவள தொங்க விட்டோ, ஈரப்புடவையைத் தண்ணீர் சொட்டச் சொட்ட உடம்போடு உடம்பாக இறுகச் சுற்றி வலக்கையை வீசி வீசி நடக்கும் காட்சி, காணக் கிடைக்காத காட்சி! பளபளவென மின்னும் குடங்களின் ஒளியும், கால் மெட்டியின் ஓசையும், கை வளையல்களின் கலீரென்ற ஒலியும் பட்டணங்களில் பார்க்கவோ, கேட்கவோ முடியாது.

மாலை நேரத்தில், வானம் தன் சோக நாடகத்தை மலைகளுக்கும், மரங்களுக்கும், அப்பால் நடத்த, குளக்கரையோ, நதிக் கரையோ நோக்கி ஜோடி ஜோடியாகவும், கூட்டம் கூட்டமாகவும், சிரித்து விளையாடி விந்நியாச பேச்சொலியோடு, வர்ண விஸ்தாரமாக நடந்து செல்லும் பெண்களின் ஒயிலும் சாயலும், எந்தக் குழாயடியில் காண முடியும்?

இந்த நினைவெல்லாம் இப்போது, வருவானேன்? ஆமாம் 'குற்றாலத்தில் நல்ல சீசன்' என்ற செய்தி அல்லவா இப்படி ஸ்நானத்தின் பெருமையை நினைப் பூட்டியது. அடாடா! குற்றாலத்தில் — நீர் வீழ்ச்சி... குற்றாலத்தில் நீர் வீழ்ச்சி இல்லை. அருவிதான் இருக்கிறது.

தூரத்திலிருந்து அருவியைப் பார்த்தால், பால் குடங் குடமாக கொட்டுவது போல் இருக்கும். கிட்டே நெருங்கினல் திவலைகள் பன்னீர் துளியாகத் தெளிக்கும். அருவிக்குள் தலையைக் கொடுத்து விட்டால் ... ... அவ்வளவுதான். ஒரே பிரம்மானந்தம். நாம் சிவ பெருமானகி மாறி விடுகிறோம். கங்காதேவியை அவர் சடை முடியில் தாங்கிய மாதிரி நாமும் அருவியைத் தாங்கிக் கொண்டு நிற்கிறோம். விடிய விடிய நின்றாலும், அலுப்போ, களைப்போ தோன்றுவதில்லை.

மனித வாழ்க்கையில் அருவியில் குளிப்பதைவிட உயர்ந்த யோகமோ, போகமோ இல்லையென உணர்வோம். நமக்கு பணம் காசு, இதுவே "தண்ணீர் பட்டபாடாக" இருக்கும் போது அருவித் தண்ணீர் என்ன பாடு படாது. இப்படி அருவியில் முழுகி அதன் உணர்ச்சி பிரவாகத்தில் சொக்கிப் போன சம்பந்தர், மனங்குளிர வாய்குளிர பாடிய அடிகள் எனக்கு ஞாபகம் வருகிறது. அருவியோடு பொன்னும் பன்னிற புஷ்பங்களும் 'சோ' வென விழும் போது, அக்காட்சியைக் காண பதினுயிரம் கண் வேண்டும். அருவியினின்று சிதறி தூவானமாகத் துள்ளி விழும் நீர்த்திவலைகள் எவ்வளவு சுகமாக இருக்கின்றன. இதைத் தான் சம்பந்தர்:

"போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழ கூதல் மாரி நுண் துளி தூங்கும் குற்றாலம்."

இப்படியாகப் பாடினர்.

எனக்கு இந்த ஆனியில் குற்றாலம் போக முடியவில்லை. ஆனல் நினைத்த மாத்திரத்தில் குற்றால மலையின் அழகையும் அம்மலைச் சாரலின் சுகத்தையும் செடி கொடிகளின் பசுமைத் தோற்றத்தையும் காண வேண்டுமென ஆசைபிறந்தால், சம்பந்தரின் குற்றாலம் பதிகத்தை படித்துக் கொள்ளுவேன். மழையோ, பனியோ வெயிலோ, எந்த நேரத்திலும் "குற்றாலக் குறவஞ்சி"யைக் கையில் எடுத்தால் எனக்கு அருவிக்குள் நுழைந்து இன்பமாகக் குளிக்கும் எண்ணம் பிறந்து விடும்.

ஆனல் குழாயடியில் குளிக்கும் சுகத்தை நினைக்க நினைக்க...வேண்டாம். சம்பந்தரின், குற்றாலப் பதிகம் படித்து, இன்று அருவி ஸ்நானம் செய்து கொள்ளப் போகிறேன். இந்தப் பாக்களை விட்டால் குற்றாலத்திற்குப் போக எனக்கு வேறு வழி இல்லையே!



26. சாமி சுடலையாடி

இரவு ஒன்பதரை மணி; ஹோராசாமி, "புறப்படும்; உச்சத்தில் மிதுனம், நல்ல வேளை; கொத்துச் சாவியை எடுத்துக் கொள்ளும்..." என்று தயார் செய்து ஒரு வண்டியில் சிவநேசத்தை அழைத்துச் சென்றான். சிவநேசம் நெல் மண்டியை நன்றாகப் பூட்டி, வேலுவைக் காவல் வைத்துச் சென்றான். கந்தன் அப்போது வெளியே சென்றிருந்தான்; எங்கென்பது பிறகு தெரியும்.

ஹோராசாமி வண்டியை எங்கெங்கோ சந்து பொந்தெல்லாம் சுற்றி யடித்து, முடிவில் சுமார் பத்தரை மணிக்கு ஒரு வீட்டின் முன் நிறுத்தினார்; அக்கம் பக்கம் ஆழ்ந்துறங்கியது. இன்ன தெரு இன்ன வீடென்று தெரியவில்லை. எல்லாம் இருள்! படாரென்று கதவு திறந்தது. முழு நீறு பூசிக் கழுத்தெல்லாம் உத்திராக்ஷம் பூண்ட மூன்று முண்டர் சிவநேசத்தை ஏணிப் படியேற்றி, மாடிக்கு அழைத்துச் சென்றனர். கீழே நான்கு பேர் ஏதோ சாடை செய்து கொண்டனர். மாடியில் சித்தர் கூட்டம் சிவப்பழமாக ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்தது. நம: சிவாய என்று சிவநேசம் வணங்கினார், கப்ஸாபாய் அவர் வாயை மூடிக் காதோரத்தில் "குரு நாதர் நிட்டையிலிருந்து, உள்ளே பூத கணங்களுடன் பேசுகிறார். உனக்கும் ஏதாவது சொல்வார் கேட்போம்" என்றார்.

ஒரு அறைக் கதவு அடைபட்டிருந்தது; உள்ளே ஏதோ மொண மொணப்பு கேட்டது; சுடலையாடிச் சாமி தான் தன் தேவ பாஷையில் பூத கணங்களுடன் பேசுகிறார். பூத கணங்கள் கீச்சுக் குரலில் பதில் சொல்லுகின்றன. கப்ஸாபாய் காகிதத்தில் எல்லாம் தேவ பாஷையில் கோடு போட்டுக் கொண்டிருக்கிறார். சிவநேசம் அடிக்கடி 'சாமி என்ன சொல்லுது' என்று வினவுகிறார். கப்ஸாபாய் இரகசியமாகச் சொல்லுகிறார்.

சுடலை: பூதஹா தஹடங்கரிஸ்வாஹா!

பூத: சங்சுங் ஜகடண்டியாமஹே!

சிவ: சாமி என்ன சொல்லுது?

கப்ஸா: பூத கணங்காள், நீவிர் எல்லா இடங்களிலும் சென்று, நமது கட்டளையைச் செய்வீர்களாக —என்கிறார்— சந்தோஷமாக ஜகத் தெல்லாம் தங்கள் கட்டளையைச் செய்து புகழைப் பரப்புவோம் என்கின்றன பூத கணங்கள்.

சுடலை: ஜம் ஜாம் ஜாஞ் ஜாலாய சிவோ ஹ ஸஞ்ஜாத ஹம்ப டேஸ்வாஹ.

பூத: நமச்சிவாய ஜிலுஜிலுப்பாய ஸ்வாஹ!

சுடலை: ஜக ஜாலடிண்டிமண கண கணயஸ்வாஹ.

பூதக: டங்டங் டணர் டிண்டி மஸ்வாஹா.

சுடலை: டகடக மதுராபுரி ராம நாத மரணந்தரா ஹம்பட்ஹா.

பூதக: ஹரஹர மந்தர எமபட நடுங்கா யஸ்வாஹ!

சிவ: சாமி மதுரை ராமநாதன் என்குதே —

கப்: ஐயோ மதுரையில் ராமநா தன் என்ற அருமையான பையன் இறந்து போனன்.

சிவ: ஐயோ என் கண்மணி ராம நாதனு!

கப்: அழாதே; அவனை மீண்டும் எழுப்ப எமதர்ம ராஜனுக்கு ஒரு பூதகணத்தை அனுப்பினர். அது எமலோகத்திலிருக்கும் உயிரை உடனே இராமநாதன் உடலில் புகுத்துவதாக வாக் களித்துச் சென்றது.

சிவ: பூதகணம் நல்லாயிருக்க வேண்டும்.

சுடலை: தஹ தஹார் நெல்லு மண்டி, படக்படார், கொண்ட லடண்ட வாயதே!

பூத: தஸ்துஸ் பிஸ்கராயா மாஸ— புஸ்புஸ்—உஸ்கராயணம்.

சுடலை: லக்ஷ டிங்டிங் கோடி கல கல கண கண்டாமணி ஹாம்.

பூத: சலசல கலகல — ஹாம் பும் பும் பூம் … …

சிவ: சாமி நெல்லு மண்டிங்குதே

கப்: உனக்கு அதிட்டமப்பா; நெல்லு மண்டி முதலாளி லக்ஷா திபதி அவனைக்கோடீசுவரனுக்க இன்றே ரசவாதம் தொடங்கு. அவன் மண்டியில் குபேரனைக் கொண்டு விடு — என்குதுசாமி. முதலாளிக்கு கணகணவென்று பொன்னும் மணியும் கொட்டப் போகிறது என்று பூதம் சொல் லுகிறது.

சுடலை: கடகண்டாயிங் வாகபட் படார். டம் டம்.

பூத: டும்டும் டுணுக் சங்கர்.

போதும் தேவபாஷை; வாசகர் இனிப் பயப்பட வேண்டாம்; நீந் தமிழே பேசுவோம்: சுடலையாடிச் சாமி முதலில் சொன்னதை கப் ஸாபாய் மொழி பெயர்த்ததும், சிவநேசன் ஆச்சரியத்துடன் பார்த்தார். "இனி நீங்கள் நமது ஆணை புரிய உலகெங்கும் செல்லுங் கள்; அப்படியே செல்கிறோம். சங்கர் பகவானே வணக்கம். டுணுக் என்னும் தேவ பாஷையே வணக்கமானது" என்று கப்ஸா பாய் சரடு திரித்து, வாயாடும் போது மந்திரச்சாமி "உஷ் ஹம் டுணுக்!" என்ருர். படாரென்று கதவு திறந்தது. சித்தரெல்லாரும் அடி சாய்ந்த மரம் போல விழுந் தனர். "ஹர ஹர டுணுக்" என்ற னர். சிவநேசம் சாஷ்டாங்க நமஸ் காரம் பண்ணி எழுந்து, "என்னப் பனே உன்னைக் காணவே நாடி னேன் வாடினேன்; என்னை யாட்கொள்ள எழுந்தருளினய்…" என்று விம்மி விம்மி யழுதார்.

மந்திரச்சாமி, "இன்றெனக்கருளி தரனன்ஞ" என்று திருவாசகம் ஓரடி நீட்டினர். கப்ஸாபாய் அறி யானை — அந்தணர் தம் சிந்தை யானை — காட்டானை, வீட்டானை, மரயானை, கல்லானை தரனனு என்று கண்ட யானைகளை யெல் லாம் சேர்த்து யானைத் திருத்தாண் டகம் ஒரு பிர்கா வாங்கினர்.

நல்ல வேளை கழுதைகளெல்லாம் உறங்கின. இன்றேல் பின் பாட்டிழுக்க வந்திருக்கும்.

சிவ: குருவே, என்னை ஆண்டு கொள்ள வேண்டும். ஆ! இந்தக் கோலத்தைக் காண என்ன தவஞ் செய்தேன், சடாமகுடம்; அதில் பிறை; கொன்றை மலர்; நெற்றியில் நெருப்பு விழி; இரண்டு சுடர் விழிகளில் ஞானக் கனல்! உதட்டில் கருணை நகை; இடையில் புலித்தோல். தீ வண்ணம்! என்னப்பனே என் பிறவி உய்ய ஆட்கொள்ள வேண்டும். நமச்சிவாய.

சுடலை: பக்தா! உன்னை ஆட்கொள்ளத்தான் ஒருமுறை இராமநாதபுரம் வந்தோம். அப்போது நீ மனைவி மக்கள் வீடு பணம் என்ற பாசத்தில் பட்டு, மோசம் போனாய். பக்குவம் வரட்டும் என்றே நாம் உன் மனைவியின் ஆவியைப் பிடித்து வைத்துக் கொண்டோம். அதை இப்போது காரைக்காலம்மையாரிடம் கொடுத்துள்ளோம். அதுவும் சிவனடனம் கண்டு கொண்டிருக்கிறது.

சிவ: குருதேவா எளியேனும் சிவநடனம் காண வேணவா.

சுட: அன்பர் கேட்பதை நாம் அக்கணமே அளிப்போம். பக்தா, கண்ணை மூடிக் கொள்.

சிவநேசர் கண்ணை மூடினார். சுடலைச்சாமி 'தண்ட தண்ட தடக் கணேஸ் வாஹா' என்றார். மந்திரச்சாமி ஏதோ பின்னாலிருந்து வேலை செய்தது. சித்தரில் ஐவர் வெளியே சென்று விட்டனர். மெல்லிய யாழிசைத்தது; முழவொலித்தது- எல்லாம் மெல்ல. சுடலையாடி ததிங்கிணதோம் கிணத்தோம் என்று கூத்தாடினார். சிவநேசர் பூரித்துப் போனார்.

சிவ: தேவரீர் குஞ்சித பாதத்தை அடியேன் சிரத்தில் வைத்தருள வேண்டும்.

சுடலை: அன்பா முதலில் நிர்வாண தீக்ஷை; பிறகு சூலமுத்திரை; பிறகே திருவடி தீக்ஷை தருவோம்.

சிவ: சித்தம்.........

சிவ: சிவனருள் பெற ஒரு மந்திரம் உபதேசிக்க வேண்டும். இனி என்றும் சிவ பூஜையே புரிந்து நான் உய்ய வேண்டும்.

சுடலை: சிவ பூஜையா! நாம் இருக்கும் போது மதியாமல் வேறு வடிவை வணங்குவாயா?

சிவ: சாமி, கடவுளை வணங்குகிறேன்.

சுடலை: கடவுள் யார்?

சிவ: எங்கும் இருக்கும் பொருள்.

சுடலை: அடே அஃதில்லை—இதோ இங்கிருக்கிறதே இந்தக் கட்டைதான் சச்சிதானந்த சிவம். இதைத் தவிர வேறு சிவமுமில்லை சவமும் இல்லை; "அஹம் படஸ்வரீச டுணுக்" தெரியுமா. நாமே கடவுள்.

சிவ: சாமி தாமே கடவுளா? அப்படியானால் படைத்தல், காத்தல் அளித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் தாமே செய்ய முடியுமா?

சுடலை: ஹ ஹா! ஜண் ஜா ஜணக்க புளுக்! அஞ்ஞானியே நாம் தினமும் ஐந்தொழிலைச் செய்கிறோமே. நாம் எத்தனையோ ஜீவர்களை உலகில் படைத்திருக்கிறோம். நமது பூதகணங்களை ஏவி எத்தனையோ பேரைக் காத்தோம். இன்று உன் மகன் மதுரையில் இறந்து போனான்; பாடை கட்டும் வேளையில், நாமே உயிருடன் எழுப்பினோம்;

இதோ மூன்ருவது தொழிலை உன்னிடம் காட்டப் போகிறேம். உன்னை இங்கே இப்படியே சம்ஹாரம் செய்ய வல்லோம். ஹம் ஹம் ஸம் ஹாரகர கரடுர் ஹம்படஸ் வாஹா—ஜக ஜண்டுவாய கடவாஹா — தெரியுமா!

சிவ: ஐயோ சாமி வேண்டாம்; யான் ஒரு பாவமும் செய்யவில்லை.

சுடலை: செய்ய வில்லையா? கூப்பிடட்டுமா சித்திரகுப்தனை. அடே சித்திரகுப்தா ஆகாசத்திலிருந்து உன் பேரேட்டைப் புரட்டி இந்த நெல்லு மண்டி சிவநேசன் கணக்கைச் சொல்லடா. புக்பக் நெல்லு மண்டி சிவநேசபணக், பாபபிண்ட டண்டணக்! தொகையை மட்டும் சொல்லு.

(மேலிருந்து ஒரு சத்தம் ஒரு கோடிப் பாவம். அதைத் தீர்க்க ஆயிரம் பிறவி எடுக்க வேண்டும்.)

சுடலை: கேட்டாயா – பாபபிண்டடண்டணக் பணக் ஹூம்! நினைவிருக்கட்டும். எத்தனை ஏழைகளை கசக்கிப் பிழிந்து நீ பணங் குவித்தாய்? எத்தனை குடும்பங்களைச் கடு வட்டியால் குடி கெடுத்தாய்?

சிவ: சுவாமி நான் வட்டித் தொழிலில் நியாயமாகத் தானே நடந்து கொண்டேன். தரும வட்டி தான் வாங்கினேன். அதையும் விட்டு இப்போது நிலம் வாங்கி விவசாயம் செய்கிறேன்; சுமார் 200 ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் தருகிறேன். விளைந்த நெல்லை நெல் மண்டியில் விற்கிறேன். நிகரலாபத்தில் 15 சதம் தருமம் செய்கிறேன். தினம் சுமார் 50 ஏழை பரதேசிகளுக்கு அன்ன தானம் செய்கிறேன். தங்களைப் போன்ற பெரியார் பணி செய்கிறேன்.

சுடலை: படக் சங்கர் அன்னதானம் புர்புர்கடகட கக்கடாயஸ் வாஹா! அடா உன் அன்னதானம் சுத்த ஏமாற்றம். நீயா செய்கிருய்? உன் கருமம் தொலைய நாமே உன்னைத் தடுத்தாண்டோம். சென்ற மாதம், ஒரு கொலையாளி உன்னைக் குத்திக் கொன்று உன் சொத்தை அள்ளிச் செல்ல வந்தான். நாமே அவனைத் தடுத்தோம். உன் கூட்டாளி முத்தையாவை என்ன பாடு படுத்தினுய்? அவனை நாமே உன்னிடமிருந்து பிரித்து, எல்லா இன்பமும் அளித்தோம் — டிண்டிமி டிண்டிமி டை டக் டக் டக்! தெரியுமா? இனி நானென்று பேசாதே.

சிவ: இல்லை சாமி எல்லாம் சிவன் செயல்

சுடலை: சை பைத்தியமே எல்லாம் நமது செயல். எல்லாம் சுடலையாடி என்று சொல். ஸர்வம் சுடலையாடி மஹர்லோக ஜகஜண யஸ்வாஹா — தெரியுமா? நாமே கடவுள்.

சிவ: சுவாமி, நான் இந்தப் பொய்களை ஒப்புவதில்லை. கடவுளுக்குச் சமானமாக உலகில் எதையும் எவரையும் நான் சொல்ல மாட்டேன். உலகிலுள்ள மகான்களையெல்லாம் ஒன்று சேர்த்தாலும், கடவுளின் ஒரு அணுவாகார். அகண்ட மின்சாரம் ஒவ்வொரு குமிழிலும் இறங்கி ஒளி யளிப்பது போல, அகண்ட சக்திமானுகிய கடவுளின் சைதன்யமே ஒவ்வோர் உடலிலும் ஜீவனுக உலாவுகிறது. அதன் பெருமை கடவுளைச் சேர்ந்தது. உடலைச் சுமந்து, மும்மலம் பிடித்த பாசஜீவன், தானே கடவுள் என்பது சுத்த அகம் பாவம். இந்த அகம் பாவமே உலகில் பல சாதி மதத் தொல்லைகளுக்குக் காரணம்.

நானே கடவுள் என்று ஒருவன் அறியா மக்களைக் காலில் விழுந்து வணங்கச் செய்கிறான். அவர் பொருளையும் பறித்துக் கொள்கிறான்; அவர்களுக்கு வரம் தருவதாகப் பாசாங்கு செய்கிறான்; தான் சாவையும் வென்றதாகக் கதை கட்டுகிறான். தனக்கொரு மதமும் சிஷ்யக் கூட்டமும் சேர்க்கிறான். பிறகு சிஷ்யக் கூட்டங்கள் மத வெறி பிடித்துத் தமதே உண்மை, பிற மதம் பொய் என்று கூச்சலிட்டு உலகை இன்னும் பிரித்து, அமைதியைக் கெடுக்கின்றன. அவனை நம்பிய பேதை மக்கள் ஏமாற்றமடைகிறார்கள். நாளடைவில் சிஷ்யக் கூட்டங்களே ஒருவரோடொருவர் மனம் பொருந்தாது பிரிகின்றன. மதத்தில் கிளைகள் உண்டாகின்றன கட்சிகள் வலுக்கின்றன. கட்சிகள் கத்தி தீட்டிக் கிளம்புகின்றன. எல்லா மதங்களிலும் இந்தச் சோக நாடகமும் ஏமாற்றமும் காண்கிறோம். அன்பும் அமைதியும் உபதேசித்தார் ஏசுநாதர். அவர் மறைந்து பல்லாண்டுகளுக்குப் பிறகே சில சீடர் கிறிஸ்து மதங் கண்டனர், அதிலும் பல பிரிவினைகள் உண்டாகி, கிறிஸ்து வரே ஒருவரையொருவர் வெட்டி குத்தி தீயிலிட்டுப் பொசுக்கிக் கொடுமை செய்ததைச் சரித்திரம் சொல்லுகிறது.

ஆதலால் மனிதன் என்றும் வணங்கவே பிறந்தான்; அவன் உயிரில் தெய்வ சைதன்யம் கலந்திருப்ப துண்மை. மனிதன் மனச் சுழற்சியை அடக்கித் தன்னுள் உள்ள சைதன்யத்துடன் கலந்து தனக்கு மேல் எங்கும் யாது மாயிருக்கும் பரம்பொருளையே வணங்க வேண்டும், அவன் மயமாகவே உயிர்க் குலங்களைக் கருதிப் பரோபகாரம் செய்ய வேண்டும். சிவ பக்தி ஜீவசேவை, அரனன்பு, ஆருயிர்த் தொண்டு இவையே மனிதன் செய்யத் தக்க சாதனங்கள். மனிதன் ஆணவம் ஒழிந்த அன்பு நிலை பெறும் போது, இறைவன் தானே குருவாக வந்து ஆட்கொள்வான். குருந்தடியில் எழுந்தருளி மாணிக்க வாசகரை ஆண்டு கொண்ட இறைவன் என்னையும் ஆண்டு கொள்வான்.

சுடலை: அட! முட்டாளே இங்கே எத்தனையோ குருந்தடிகள் உண்டு. அவற்றால் ஆட்கொள்ளத்தானே கைலையிலிருந்து இறங்கி வந்து கருணையுடன் உன்னை அழைத்தோம். அடிகண்டல குண்டல குருந்தடி மாணிக்க குணுக்—பணக், பணக்!—தெரியுமா! உன்னையும் பரிபக்குவம் பண்ணப் பார்த்தோம்—பரிபக்குவம் பட கண்டல ஜுண்டலஹா—பரிபக்குவம் எப்படி வரும் என்பதை இந்தத் தேவ வாக்கு சொல்லுகிறது—கஸ்மாத் கடுதண்ட பண்டாரயாமாஸ்—தெரியுமா வேதவிதி. ஒருவன் தன் கையிலுள்ள பொருளையும், பாங்கியிலுள்ள பொருளையும் குருவிற்கே தந்து விட்டால்—கண்ட ஜுண்டலஹா பண்டார யாமாஸ—அவன் கண்டு கேட்டிராத பண்டைப் பரமபதம் அடைகிறான். அங்கே "ஜுண்டலஹா" என்றார்; எல்லாப் பொருளையும் குருவிற்கே தந்து விட்டு அகம் சுண்டி, வற்றி சுத்த சூனியமாய் விடவேண்டும்—சுத்த சூன்ய கஸ்சித் கபால மோக்ஷாய தேஸ்வாஹா—அப்படிப் பட்டவனுக்கே கபாலத்தின் வழியாக கடகாசம் புறப்பட்டுப் பரமாகாசத்தில் கலந்து கொள்ளும்; தெரியுமாடா மடையா? ஆடு திருடின கள்ளன் மாதிரி விழிக்

கிருயே! மாணிக்கவாசக ருக்கு, குறுந்தடியில், தந்த முக்தி யை உமக்கும் குறுந்தடியில், குறுந்தடியால் (என் பெருந் தடியாலேகூட) நாமே தரு வோம். பேசாமல் உன் பொரு ளை யெல்லாம் நம்மிடமே தந்து விடு. நிர்வாணதீக்ஷை பண்ணி, ஹாஹா என்னும்படி திருவடி தீக்ஷையும் தருவோம்.

சிவ: ஐயையோ! சிவனே! இதென்ன சோதனை! இது நான் செய்த தருமத்தின் பயனு தருமத்தின் பயனு! ஐயையோ திருடரிடம் அகப்பட்டேனே! சாமி வேஷம் போட்ட காமி களிடம் சிக்கினேனே — போ தும் திரு அடி தீக்ஷை.

இப்போது பட்டென்று விளக்கணைந்து யாரோ சிவநேசத்தைக் கட்டித் தழுவினர் — ஆம் யாரோ பெண். ஐந்து நிமிஷம் கழித்து பளிச்சென்று விளக்கு! அறை யில் யாருமில்லை. சுடலையாடி, கப்ஸா, வாலே, ஹோரா எவரை யுங் காணும்! ஒரு பெண் மட் டும் சிவநேசத்தின் முன்னே நின்று புன்னகைத்தாள்.

சிவ: இதுதான் நிர்வாண தீக்ஷை யோ. சீ சீ பேயே, போ!

பெண்: துரையே இன்று இரு வரும் ஒருவரானேம் — உன் மனைவியின் ஆவியை நமது சுட லைக்குரு காரைக்காலம்மையிட மிருந்து கொண்டு வந்து என் னுள் வைத்து விட்டார் — நானே விசாலாட்சி — என்னுடன் இனி சந்தோஷமாக வாழலாம். நீரே என் கணவர்.

சதிபதியாக வாழ்குவோம் — பரம சந்தோஷத்தில் மூழ்குவோம்!

ஹா ஹா ஹா! தத்தரனனனு லல்லா (சதிபதி)

எப்படி என் பாட்டு — இதோ அபிநயம்! எப்படி?

சிவ: காமப் பேயே, போ அப்பு றம் — சிவனே காமாரியே, இந் தப் பேய் வலைப்படாமல் என் னைக் காப்பாய். ஐயோ எங்கே ஓடுவேன்.

பெண்: ஓடுவாயா? உன்னை விடு வேனு; என்னைத் தொட்ட ணைந்த பிறகு தப்பிலித்தனமா! கொடு பதினுயிரம்.

சிவ: பேயே உன் முகத்தைக் கண்டதார்?

பெண்: யாபஹா — குறுந்தடிஹல் ஹத்! திருவடிதீக்ஷை ——! உடனே விளக்கணைந்தது. பத் துத் தடியர்கள் தடதடவென்று மாடியிலேறி வந்தனர். இருட் டில் பிடி போக்கிரியை! ஒரு பெண்ணைக் கெடுத்து விட்டு வேதாந்தமா பேசுகிருய்! திரு வடிதீக்ஷாயாமாஸ ஜகஜண்ட லாயதே. தீட்டு நன்ருய் ——" என்று ஆத்திரமாகத் தடியினுல் வீசினர். அடபாவி என்மேல் விழுகுதடா! அடி பாவி என்னை யேன் குத்துகிருய்! அட அவனை வெளுடா! எங்கே அவன்? —

பத்து நிமிஷம்; பளிச்! வெளிச் சம்! சிவனைக் காணும். பத் துப் பதினைந்து தடியர்களும் நான்கு பெண்களுமே ஏமாந்து நிற்கின்றனர். அவருள் நாலைந்து பேருக்கு நல்ல அடி — ஒரு பெண்ணுக்கும் அடி — இருட்டில் சிவநேசத்தை அடிக் கப் புகுந்து, கள் வெறியால் ஒருவரை யொருவர் தீட்டிக் கொண்டனர். எல்லாரும் சிவ நேசத்தைத்தேடினர்; காணும் இதற்குள் ஏழு தடியர் உள்ளே புகுந்து ஏதோ ஜாடை காட்டி னர்.

அச்சமயம் தடதடவென்று வாசற்கதவை யாரோ இடித்

தார்கள் — "திருட்டுப் பசங்கள் — செம்மையாக உதைக்க வேண்டும்—" என்றொரு குரலும் கேட்டது.

"ஹட ஹட ஹார்ந்தர்யா மாடலஸ்வாஹா" என்றொருவன் அலறினான் — விளக்கணைந்து — கூட்டம் சிதறியோடியது

ஐந்து நிமிஷத்தில் வீட்டிற்குள் இன்ஸ்பெக்டர் பராங்குசமும், போலீஸ்காரரும், கந்தனும், வேலுவும் உள்ளே புகுந்தனர். உள்ளே யாருமில்லை. ஒரு சாமானுமில்லை, எல்லாம் டாழ்.

27. பத்திரிகைச் சரடுகள்

மறுநாளே இரங்கோன் பத்திரிகைகளில் நீண்ட சரடுகள் கிளம்பின. செய்தி திரட்டும் நிருபர்கள் சிவநேசத்தின் நெல்லு மண்டிக்கும், சம்பவம் நடந்த தனி வீட்டிற்கும் அலைந்த மணியமாயிருந்தனர்; பாராங்குசம் நாயுடுவையும் கந்தனையும் முற்றுகை போட்டுக் கொண்டு கேள்வி கேட்டனர். தாம் கேட்டதை வைத்துக் கொண்டு விதவிதமான சரடுகள் திரித்தனர்; அந்தச் சரடுகளைக் கொண்டு ஊரார் கதைகள் கட்டி காற்று வாக்கில் ஊதிவிட்டனர். நாம் மூன்று பெரிய பத்திரிகைகளைப் பார்ப்போம் — பர்மா மெஸ்ஸேஜ், இரங்கூன் செய்தி, எங்கள் பர்மா:

பர்மா மெஸ்ஸேஜில் வந்த செய்தி இது:

குடல் நடுங்கும் செய்தி
இரங்கூன் தாசித் தெருவில் படுகொலை!
சிவநேசர் மறைந்த மாயம்

இரங்கோனில் தாசிகள் தொல்லை அதிகமாய் விட்டன. இந்தியாவிலிருந்து சில ஜாதியார் தங்கள் பெண்களைக் கூட்டி வருவதில்லை. மூன்றாண்டுகள் அவர்கள் இரங்கூனில் தனியாக வாழ வேண்டியிருக்கிறது. இவர்களை வலை போட்டிழுக்க வேசியர் கிளம்பியிருக்கின்றனர். இவர்கள், பசையுள்ள வாலிபர்களை வசப்படுத்தித் தனியே சிக்க வைத்து, மிரட்டி ஆயிரம் பதினாயிரம் பறித்துக் கொள்கின்றனர். இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளச் சில பணக்காரர் படும் பாடு சொல்லி முடியாது. சென்ற ஆண்டு ஒருவர் வேசி வீட்டு மாடியிலிருந்து குதித்து மண்டை உடைந்து இறந்ததைக்கண்டோம்.

இப்போது ஒரு பயங்கரச் சம்பவம் நடந்திருக்கிறது. கடைத் தெருக்கோடியில் தனியேயுள்ள ஒரு தாசி வீடு சில நாட்களாகக் காலியாயிருந்தது. அதில் முகமறியாத சில காலிகள் சென்ற இரண்டு நாட்களாக இரண்டு வேசையருடன் வசித்தனர். அந்தக் காலிகள் ஒரு பெரிய செல்வரைத் தமது வேசையிடம் சிக்க வைத்துப் பணம் பறிக்கத் துணிந்து பரதேசி வேஷம் போட்டனர்.

அச் செல்வர் நமது இரங்கோன் நகரில் பிரபல நெல்மண்டி வியாபாரியான சிவநேசமே. சிவநேசம் சாது, தருமவான், ஏழை பரதேசிகளுக்கு உணவளிக்கும் ஈகையாளர் என்பதை எல்லாரும் அறிவர். அவரிடம் சென்ற ஒரு வாரமாக ஒரு பரதேசிக் கூட்டம் வந்து தாம் சித்தரென்றும், கேட்ட வரம் தருவோமென்றும் நடித்தது. அப்பாவி மனிதர் இந்தக் காலித் துறவிகளை நம்பி விட்டார். அவர் மனைவியிழந்தவர்; வயதானவரே; என்றாலும், யாருக்குத்தான் ஆசையில்லை? போலிகள் அவருக்கு ஆசை காட்டி வேசை வீட்டிற்கு

அழைத்துச் சென்று பெண்வலை யில் பலமாகச் சிக்க வைத்தனர்; பிறகு கொடு பதினாயிரம் என்று மிரட்டினர். அவரது பெட்டிச் சாவிகளை இடுப்பிலிருந்து பறித்துச் சில காலிகள் நெல்லு மண்டிக்கு வந்து கொள்ளையடித்தனர். செட்டியார் அலறித் தவித்து முதலில் மாடியிலிருந்து கீழே விழுந்து இறக்கவே துணிந்தாராம்; அச்சமயம் காலிகள் அவரை அடித்துக் கொன்று எங்கேயோ புதைத்து விட்டனராம். ஆளைக் காணவில்லை. செட்டியாரின் வேலையாள் கந்தன் சந்தேகப் பட்டு, போலீஸ் அதிகாரியுடன் நேற்றிரவே குறித்த இடத்திற்குச் சென்றான். பராங்குசம் நாயுடு வீட்டுள் புகுந்த போது எல்லாம் காலி. யாருமில்லை. வேசையரும் காலிக் கூட்டமும் மாயமாக மறைந்தனர். இன்ஸ்பெக்டர் பராங்குசம் நாயுடு ஒற்றருடன் துப்பறிந்து வருகிறார்.

நமது நகரில் வேசையர் அட்டகாசங்களையும் காலிகளின் ஆர்ப்பாட்டங்களையும் அடக்கினாலொழிய இப்படிப்பட்ட சம்பவங்களைத் தடுக்க முடியாது.

*   *   *

இரங்கூன் தூதன்

படுகொலை! படுகொலை!

பிரேதம் எங்கே?

போலிச் சாமிகளின் காலித்தனம்!

(நமது நிருபரிடமிருந்து)

நேற்றிரவு இரங்கூன் கடைத் தெருக் கோடியிலுள்ள வீட்டில் ஒரு பயங்கரமான கொலை நடந்தது. அதைப்பற்றி நமக்கு ஆதாரமான செய்தி கிடைத்திருக்கிறது. அச்செய்தியைச் சொல்லுமுன் நமது நேசப் பத்திரிகையான பர்மா மெஸ்ஸேஜின் சரடுகளைப் பலமாகக் கண்டிருக்கிறோம்.

ஒன்றைப் பத்தாக்கி அடிக்கடி நம்மவர் நடத்தையைப் பழித்து ஒப்பாரி வைக்கும் இந்தப் பத்திரிகை, சிவநேசரைத் தாசி லோலனாக்கியது மன்னிக்க முடியாத கொடுமை, கொடுமை, கொடுமை! சிவநேசர் மனைவி காலஞ்சென்ற பிறகு துறவி போலவே வாழ்ந்தார். அவரது நெல் மண்டி அன்னசத்திரம்போல விளங்கியது. அவர் அதிதி பரதேசிகளுக்குச் செய்து வந்த அன்னதானங்களைப் பற்றி நாம் அடிக்கடி எழுதி வந்திருக்கிறோம். சென்ற வாரம் சில போலித் துறவிகள், தாம் சித்தர்கள் என்றும் தமது குரு சுடலையாடி என்றும் சொல்லி ஆளை மயக்கினர். கடைத் தெருக் கோடியிலுள்ளது. தாசி வீடேயன்று. அது டேட்மியான் என்னும் வியாபாரியின் வீடு. அவர் இப்போது மோல்மீனில் குடியேறியிருக்கிறார், அந்த வீட்டில் அவர் சேவகனே இருந்தான். அவனை இப்போது காணோம். அத்தனி வீட்டை இப்போலித் துறவிகள் பயன் படுத்திக் கொண்டனர். இத்துறவிகள் இரண்டு பெண்களையும் வைத்திருந்தது மட்டும் உண்மை. இவர்கள் உக்காவும் சாராயமும், கஞ்சாவும் குடித்தார்களாம். இவர்கள் இன்னார் எங்கிருந்து வந்தவர் என்பதை யாரும் அறிய முடியவில்லை. இவருள் இரண்டொருவரே தமிழ் பேசினாராம்; மற்றவர் குணுக் புணுக் என்று ஒரு புதிய பாஷை பேசினர். இரண்டொருவர் சங் சுங் என்று சீன — பர்மியப் பாஷையும் பேசினராம்.

இப்போலித் துறவிகளின் தலைவர் சுடலையாடிச்சாமி, சித்தர் வேஷம் போட்ட எத்தர் என்று தெரிகிறது.

இவர்கள் நீண்ட சரடு திரித்து குருவுபதேசம், மோட்சம், கூட்

டோடு கைலாசம், சிவசாயுஜ்யம் என்றெல்லாம் பேசிச் சிவநேசத்தை நேற்றிரவு பத்து மணிக்குத் தமது இரகசிய வீட்டிற்கு அழைத்துச் சென்றனராம். உள்ளே, சாமியார் வரங்கொடுப்பதாக ஆளை மயக்கி, இடுப்புச் சாவியை மெல்லக் கைப்பற்றித் திருட்டுச் சாமியார்களிடம் தந்துவிட்டாராம். திருடர்கள் உடனே நெல்லு மண்டிக்கு வந்து கொள்ளையிட்டார்கள். அங்கே கொடுபதினாயிரம் என்று மிரட்டியிருக்கிறார்கள். பெண்ணைக் காட்டி ஆளை மடக்கப் பார்த்திருக்கிறார்கள். சிவநேசம் நேர்மையானவர். சிறந்த சிவபக்தர். அவர் போலிகளை எதிர்த்து வாதாடியதாகத் தெரிகிறது. உடனே காலிகள் அவரைக்கொன்று உடலை எங்கோ மறைத்து விட்டனர். அவரிடம் நம்பிக்கையாக வேலை பார்த்த கந்தன், போலித் துறவிகளை முன்பே அறிந்து செட்டியாரை எச்சரித்தும், அவர் கேட்கவில்லையாம்.

செய்தி இப்படியிருக்க சாது சிவநேசம் தாசி வீட்டிற்குச் சென்றதாக நமது சகோதரப் பத்திரிகை திரித்து விட்ட குறும்புச் சரடைப் பலமாகக் கண்டிக்கிறோம்.

*　　*　　*

எங்கள் பர்மா

காலிகளின் மோசடி

நெல்மண்டி கொள்ளை !

ஒரு பிரபல வியாபாரியின் கதி !

ஆள் சாகவில்லை !

நேற்று நடந்த சம்பவத்தைப்பற்றி நமது சகோதரப் பத்திரிகை ஒன்று திரித்துவிட்ட பொய்களைக் கண்டு திகைத்துப் போனோம்.

ஒன்று நடக்க இன்னொன்றைப் புகலும் இத்தகைய போலிப் பத்திரிகைகளைப் பலமாகக் கண்டித்துப் பிறகு போலித் துறவிகளைத் தாக்குவோம். நமது சகோதரப் பத்திரிகையின் ஆஷாடபூதித்தனத்தையும் ஒன்றைப் பத்தாக்கும் கைச்சரக்குகளையும் நமது வாசகர் அறிவார்களாதலால் அதிகம் சொல்லத் தேவையில்லை.

நமது பர்மாவில் அன்னியர் வந்து புகுந்து அடிக்கும் கொள்ளையைப் பற்றி அடிக்கடி முறையிட்டிருக்கிறோம். இப்போது காவிக்கள்ளர் சிலர் நமது நாட்டில் புகுந்திருக்கிறார்கள். அவர்கள் பேச்சிலும், வேடத்திலும், பரலோகக் கதைகளிலும் மயங்கச் செய்து தனியே அழைத்துச் சென்று மடியை உருவிக்கொண்டு ஆளை மோசம் செய்து விடுகிறார்கள். இவர்களுக்குத் தாசிதானே விசை என்பதை நாம் மறுக்க முடியாது. தமது பரலோக வலையில் சிக்காதவர்களை இவர்கள் சிற்றின்ப வலையில் சிக்க வைத்து பொருளைப் பறிக்கிறார்கள்.

சிவநேசத்தின் கதையும் இதுதான். அவர் பணந்தேடவே நமது நாட்டிற்கு வந்தவர். நமது சலுகையால் பணமும், நிலமும் செழித்தவர். தானதருமம் செய்வதாகக் காட்டித் தம்மைப் பிரபலப் படுத்திக் கொண்டு கடைக்கு அதிக லாபம் தேடியவர். அந்த லாபத்தைப் பறித்துக்கொள்ளவே போலிகளும் காலிகளும் இந்த வேலை செய்திருக்கிறார்கள்.

இப்போது ஆள் சாகவில்லை. அவரைப் போலிகள் எங்கோ மறைத்து வைத்திருப்பதாகவே தெரிகிறது. போலீஸார் துப்பறிந்து கண்டு பிடிக்க வேண்டும். சம்பவம் நடந்த இடம் சென்ற இரண்டு மாதமாகவே காலியாயிருந்தது. ஒரு வாரமாகத்தான் போலித் துறவிகளின் சூழ்ச்சிப் புதரானது. வீட்டுக்காரர் மேல்

மீனில் இருப்பதுண்மை. தந்தியடித்ததில் தாம் யாரையும் குடிவைத்ததில்லை என்று செய்தி வந்துள்ளது. எல்லாம் மர்மமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் இனி நடக்காமல் தடுக்க வேண்டுமானல் பர்மா எல்லையிலிருந்தே ஆட்சேபகரமான அன்னியருக்குக் கெல்தாக் கொடுக்க வேண்டும். பர்மா பர்மியருக்கேயாகவேண்டும். நம்மை எதிர்த்து கொக்கரிக்கும் பொருமைப் பத்திரிகைகள் ஒழிய வேண்டும்.

* * *

எந்தப் பத்திரிகையை நம்புவது? இவற்றிற்கிடையே நாவுக்கு நாவு பரவி, ஊரில் திரண்டெழுந்த வதந்திகள் விநோதமானவை. மாதிரிக்காகச் சில வதந்திகளைத் தருவோம்.

1. சிவநேசம் போலித் துறவிகளை நம்பி மோசம் போனர். அவர் கடை கொள்ளையுண்டது. அதைக் கேட்டதும் திடுக்கிட்டிறந்தார்.

2. சிவநேசம் நெடு நாளாகவே ஒரு பெண்ணை வைத்திருந்தார். அவள் அவருக்கு இடு மருந்து வைத்துக் கொன்ருள்.

3. சிவநேசம் உலகை வெறுத்துத் துறவிகளுடன் ஓடி மறைந்தார்

4. சிவநேசம் வேசையரைச் சேர்ந்தது உண்மை. குட்டு வெளிப்பட்டதும் எங்கோ சென்று தற்கொலை செய்து கொண்டு இறந்தார்.

5. சிவநேசம் இரவில் ஐராவதி நதியில் விழுந்து வங்காளக் குடாக் கடலுக்குப் போய் விட்டார்.

6. இல்லை உலகை வெறுத்து அவர் வங்காளக்கடலிலேயே நேராக விழுந்து இறந்தார்.

7. சிவநேசம் தமது வேசையுடன் இரவில் கடற்கரை சென்ருர். அவரை ஒரு பூதம் கடலில் தள்ளியதாம். ஒரு திமிங்கிலம் விழுங்கி விட்டதாம்.

8. சிவநேசத்தைச் சிவனடியாரும் பூதகணங்களும் கூட்டோடு திருக்கைலாசத்திற்கு கொண்டு சென்றன, அதில் வியப்பில்லை அவர் அவ்வளவு சிவபுண்ணியம் செய்தவர்.

போதும் சரடுகள்.

இரண்டு நாட்கள் இப்படி இரங்கூன் அமளிபட்டது. சிவநேசம் இறந்துபோனதாகவே ஊருக்குத் தந்தியும் சென்றது. ஆனல் நடந்ததை முன்பே சொன்னேம். சிவநேசத்தின் கதி என்ன? இனிச் சொல்வோம்.

* * *

இச்சமயமே இரங்கோனில் மூன்று தமிழ் மணிகள் தொழில் நடத்தினர். வக்கீல் வ. வே. சு. ஐயர், டாக்டர் ராஜன், டாக்டர் சிங்கம்.

வ. வே. சு ஐயர் திருச்சிக் கடுத்த வரகநேரியில் பிறந்தவர்; திருச்சி யோசேப்பு கல்லூரியில் படித்து பி. ஏ. தேறினவர். பிறகு வக்கீலுக்குப் படித்து, ஐயர் திருச்சி ஜில்லாக் கோர்ட்டில் தொழில் நடத்தினர். அச்சமயம் ரங்கூனில் அவர் மைத்துனர் பசுபதி ஐயர் ஜவுளி வியாபாரம் செய்து செல்வச் செழிப்புடன் விளங்கினர். அவர் அழைப்பின் பேரில் ஐயர் இரங்கூனுக்குச் சென்ருர். அங்கே முகல் தெருவில் ஒரு பாரிஸ்டரின் கீழ் வக்கீல் தொழில் நடத்தினர். அச்சமயமே சிவநேசம் அவரிடம் ஒரு வழக்கிற்காகச் சென்ருர். அன்று முதல் இருவருக்கும் நட்பு அதிகரித்தது. சிவநேசத்தின் சிவபக்தி தூய சன்மார்க்க ஒழுக்கம், பரோபகாரம்,

தொழில் திறமை, தமிழன்பு — இவற்றை ஐயர் போற்றினார். அதே தெருவிலே தான் டாக்டர் சிங்கமும் இருந்தார்.

டாக்டர் சிங்கம் தஞ்சாவூரில் பிறந்து வளர்ந்து, அங்கேயே வைத்தியப் பயிற்சியும் பெற்றவர். அவர் பர்மா வைத்திய ஊழியத்திற்கே படித்ததால் இரங்கூன் வந்து சேர்ந்தார். அவருக்குச் சர்க்கார் ஆஸ்பத்திரியில் முப்பது ரூபாய்ச் சேவகம் கிடைத்தது — கழிச்சலெடுத்த நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பது, அவர்கள் அறைகளைச் சுத்தம் செய்யச் சொல்வது — கழிச்சலில் போன பிணங்களை அப்புறப் படுத்துவது, பிண அறிக்கை கொடுப்பது — இது தான் உத்தியோகம். மற்றபடி அவரை யாரும் கவனிப்பதில்லை. மேலதிகாரிகள் அவரை அடிமை போல நடத்தினார்கள். டாக்டர் சிங்கம், சிங்கமே; நல்ல பயில்வான், அறிவாளி, தைரியவான், தமிழுணர்ச்சி மிக்கவர். அவருக்கு மேலிருந்த வெள்ளைத்துரைகள் மெலுக்காக வந்து மருந்தெழுதி வீசியெறிந்து செல்வதும், தன்னை அடிமை போல நடத்துவதையும் பார்த்து அவர் மனம் கொதித்தது. ஒரு நாள் அதிகாரி கழிச்சல்காரனுக்குப் பேதி மருந்து கொடுத்தார். 'துரையே இது பிசகு' என்றார் சிங்கம். 'டாம்' என்றான் அதிகாரி. இருவருக்கும் பேச்சு வலுத்தது. சிங்கம் துரையின் மருந்தைக் குப்பைத் தொட்டியில் வீசியெறிந்து சரியான மருந்தை நோயாளிக்குத் தந்தான். அதிகாரி இம்பெர்டினென்ட் (அதிகப்பிரசங்கி) என்று குற்றஞ்சாட்டி சிங்கத்தை வெட்டாடுகளுக்கு முத்திரை போட்டுக் கொண்டிரும் என்று அனுப்பினார். "அந்தவேலைக்கு இவ்வளவு படித்திருக்க வேண்டியதில்லையே" என்றார் சிங்கம். "எதிர்த்துப் பேசினால் பிணத் தோட்டிகளுடன் வேலை செய்ய அனுப்புவேன் கவனம்!" என்று அதிகாரி உருமினான். ஐயா தோட்டிக்குத் துணை செய்ய நான் சென்னையிலிருந்து வரவில்லை— உம்மைவிட வைத்திய ஞானத்தில் எள்ளளவும் குறைந்தவனல்லன். சரியான வேலை கொடுந்தால் இருப்பேன்; இன்றேல் இந்தாரும் ராஜினாமா" என்று சத்தம் போட்டான் சிங்கம். சிங்கத்தின் தைரியத்தைப் பார்த்து அதிகாரி கொஞ்சம் தணிந்து போனான். "அதற்கில்லை மிஸ்டர் சிங்கம்; படிப்படியாகத் தான் உயரவேண்டும்" என்றான் — ஆனால் மனதில் கருவைத்துக் கொண்டு, சள்ளை செய்தான். கூட வேலை செய்பவரைத் தூண்டிவிட்டான். அவர்கள் நாளொரு குற்றமும் பொழுதொரு கோளுமாகச் சொல்லி சிங்கத்திற்கு ஆபத்தாக முடிந்தனர். சிங்கம் சட்டென்று வேலையை உதறித்தள்ளினான். முகல் தெருவில் வைத்தியசாலை வைத்தான்; நல்ல வரும்படி வந்தது— மாதம் ஆயிரம். அப்படியே பணம் சேர்த்து வீடு வாங்கினான்! பாங்கில் முப்பதாயிரம் போட்டான்.

இச்சமயந்தான் ஐயர் வந்தார். இருவரும் நண்பரானார். அவர் நட்பை வளர்த்தவன் கம்பனே. கம்பராமாயணம் ஐயருக்கு உயிர். கம்பனின் அனுமானும் ஓமரின் ஒதேசியனுமே அவருக்கு ஆதர்ச புருஷர். ஒவ்வோர் இரவும் டாக்டர் சிங்கம் இனிய குரலெடுத்து இசைநயத்துடன் கம்பனைப் படிப்பார்; ஐயர் பொருள் விளக்குவார். வால்மீகி, மில்தான், ஷேக்ஸ்பியர், விர்ஜில், ஓமர் போன்ற மகா கவிகளின் வாக்குகளையும் இடையிடையே மேற்கோளாக விளக்குவார். பொழுது போவதே தெரியாது. ஒரு நாள் வாலி வதைப் படலம் நடந்தது.

வாய்மையும் மரபும் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே ! நீ
பரதன் முன் தோன்றினுயே !
தீமைதான் பிரரைக் காத்துத்
தான் செய்தால் தீங்கன்
ருமோ ?
தாய்மையும் அன்றி, நட்பும்
தருமமும் தழுவி நின்ருய் ?

என்ற பாட்டை ஐயர் விளக்கும் போது சிவநேசம் செட்டியார் வந்து வணக்கமுடன் அமர்ந்து கேட்டார். இப்பாட்டைக் குறித்து அவர்களிடையே விவாதமும் நடந்தது. விவாதம் அரசியல் எல்லைக்கும் போய்விட்டது. முடிவில் வழக்கம் போலே இராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றது பிசகு தான் என்ருர் சிவநேசம்.

ஐயர் : நண்பரே, உமது இலக்கியத்தில் பகைவனைக் கொல்வது கூடப் பிசகுதான். ஆனல் 'வீரம்' என்ெருரு அரிய தன்மை மனிதனிடம் இருக்கிறது. இராமன் வீராவதாரம். வீரத்தால் அவன் தீமையை அழித்து நன்மையைத் தாங்குகிருன். நம்மைக் கொத்த வரும் பாம்பிடம் அஹிம்சா தர்மம் காட்ட முடியுமா? வாலி மமதை பிடித்து சுக்ரீவன் மனைவியைப் பற்றிக் கொண்டான். தம்பியைக் கொல்லக் கத்தி தீட்டிக் கிளம்பினுன். கிஷ்கிந்தா புரியில் கொடுங்கோல் செலுத்தினுன். கொடுங்கோலைக் குலைப்பது தான் வீரனுக்கழகு. மனிதன், புழுபூச்சி, ஆடு, மாடு போல் இருக்க முடியாது — சிங்கம் போலிருக்க வேண்டும். ஒரு நிலத்தை உழுது பயிர் செய்யவும் வேண்டும்; களைகளைப் பறித்தெரியவும் வேண்டும். வாலி மனித சுதந்திரத்திற்கே களையாக முளைத்தான். அவனை இராமர் கொன்றது நியாயந்தான். மேலும் பகைவனை எப்படிக் கொன்ருலென்ன? மறைந்து கொல்வதால் தீமையில்லை— அரசியலில் முன் வந்து எதிர்க்கும் தைரியமும் வேண்டும். பின் மறைந்து தந்திரமாகத் தாக்கும் யுக்தியும் வேண்டும். திராய்ப் போரில் ஒதேசியன் மரக் குதிரையில் தனது வீரருடன் ஒளிந்து, ஊரைத் தாக்கவில்லையா. வீரனுக்கு இராணுவ தந்திரம் (Military tactics) அவசியம் வேண்டும்.

இவ்வாறு நீளப்பேசினுர்.

சிங்கம் : ஐயரே நீர் பேசும் போதே உம்முள் ஒரு ராமன் இருந்து யாரோ ஒரு பகைவனைக் குறி வைப்பது போலிருக்கிறதே.

சிவநேசம் : ஐயர் உடம்பெல்லாம் தரும வீரந்தான்— அவர் படிப்பில் புலி; வீரத்தில் சிங்கம்.

இப்படி பேசி முடிந்தபோது சிவநேசன் தனக்கும் முத்தையாவுக்கும் உள்ள மனத்தாங்கல்களைச் சொல்லி இந்த முன் கோபக்காரனை எப்படி வெல்வது? டாக்டர் அவனுக்கு மருந்து கொடுக்க முடியுமா? வக்கீல் நீதி தரமுடியுமா?

சிங் : சிவநேசம், முந்தையா முன் கோபத்திற்கு ஒரே மருந்து தான்— அவன் பங்கைத் தந்து விரட்டுங்கள்.

ஐயர் : அவன் என்னிடம் வந்து தாறுமாருகப் பேசுகிருன். அவனுக்குச் சில ஊதாரிகளின் சிநேகம் கிடைத்திருக்கிறது. நடத்தை மோசம். பிஜிலியும் குப்பையாவும் ஒரு பொய் வழக்கிற்காக என்னிடம் வந்தார்கள்.

அவர்களுக்குப் பொய்ச் சாட்சி சொல்ல அவனைக் குறித்தனர். எனக்குப் பகீரென்றது. அந்த வழக்கை நான் எடுக்க மாட்டேன் என்று மறுத்து விட்டேன். இந்த அயோக்யன் அடுத்த தெருவில் ஒரு வக்கீலைப் பிடித்து முழுப் பொய் வழக்கு ஜோடித்து விட்டான். நான் பிரதி வாதிக்கு ஆஜராகி இந்த மூன்று மோசக்காரரின் சூழ்ச்சிகளையும் முறியடித்தேன். தாங்களே என்னைத் தூண்டி விட்டு இரகசியங்களைச் சொல்லி விட்டதாக அவன் தங்களிடம் கோபங் கொண்டு சூழ்ச்சி செய்கிறான் — சிவநேசம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும். குப்பையா கைகாரப் போக்கிரி. என்ன வேண்டுமானாலும் செய்வான் — காலிப் படைகள் அவன் பக்கம். அத்துடன் ஆடல் பாடல் அழகு மினுக்கெல்லாம் சேர்ந்திருப்பதால் மனித வியல்பின் மோசத்தை நம்ப முடியாது — பேசாமல் முத்தையாவை ஒதுக்கி விடுங்கள்.

சிவ: அவன் பங்கிற்கு இலட்சம் ரூபாய் உள்ளது. நான் ஆகச் சொல்லக் கூடாது. மதுரை அருணசலம் மனஸ்தாபப்படுவான். காரியம் முற்றட்டும். கேட்கட்டும் உடனே பணத்தைக் கொடுத்து விடுகிறேன்.

சிங்: பணம் தந்தால் பிஜிலிக்கே அர்ப்பணந்தான். அத்துடன் ஆளும் யானைவாய்க் கரும்பு தான். இப்போதே அவனுக்கு எலும்புருக்கி, மூளைக் கோளாறு நரம்புத்தளர்ச்சி — இரகசியமாக ஆளனுப்பி என்னிடமே மருந்து வாங்குகிறான். இன்னும் நாலைந்து மாதங்களில் அறுவைக்கு வந்தால் வியப்பில்லை. அவனது நடத்தை முழு மோசம்.

சிவ: என்ன செய்வது; சிவனே! சொந்தப் பையன் — என் மனைவியுடன் பிறந்தவன் என்று அன்பு பாராட்டினேன். என் மார்பிலேயே முன் கோபாட்டி பாய்ச்சுகிறான். ஹூம் — இதுவும், சிவன் செயல் — உலகம் இவ்வளவுதான் என்றுணர்ந்து வெறுத்துத்தள்ள இதுவும் வேண்டியதே — இந்தத் தொல்லையெல்லாம் ஒழித்து ஏழை யெளியவருக்கும் பொருளை அள்ளிவிட்டு சிவ சிந்தையுடன் இருக்கவே நான் விரும்புகிறேன்.

ஐயர்: நீங்கள் சிவசிந்தையுடன் இருக்கலாம். ஆனல் துஷ்டன் தங்களைச் சும்மா இருக்கவிட மாட்டான். விஷமம் செய்வான். தைரியமாயிருங்கள் — சிங்கம் நான் லண்டனுக்குப் போனாலும் சிவநேசத்தைப் பார்த்துக் கொள்.

சிங்: சிங்கக்கண் இரண்டு பக்கமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கும்.

* * *

இச்சம்பாஷணை நடந்த ஆறு மாதத்திற் கெல்லாம் வ. வே. சு ஐயர் கப்பலேறிச் சீமைக்குச் சென்றார். சிவநேசம் அவர் செலவுக்காக ரூ 1000 தந்தார். டாக்டர் சிங்கம் சிவநேசத்தைப் பாதுகாத்தான். அச்சமயமே டாக்டர் ராஜன் திருச்சியிலிருந்து வந்து ஆஸ்பத்திரியில் சிலமாதங்கள் வேலை பார்த்து அது பிடியாமல் தனியே வைத்தியக்கடை திறந்தார். சிங்கமும் ராஜமும் சிவநேசனுக்கு நல்ல நண்பரானர். ஆனல் டாக்டர் ராஜமும் சீமைப் படிப்பிற்குக் கப்பலேறினர். இப்போது சிங்கம் ஒருவரே சிவநேசனுக்கு நண்பர்.

(தொடரும்)

இதய தாகம்

(கே. விஜயராகவன்)

ஊரடங்கி எங்கும் நிசப்தம் நிலவி இருந்தது. குடியானவர்கள் பகலெல்லாம் வயல்களிலும் தோட்டங்களிலும் வேலை செய்த அலுப்பினால் இராச் சாப்பாட்டுக்குப் பின் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். பட்டிக்குப் பின் காவலுக்குப் போகும் ஒன்றிரண்டு பேர் கம்பளியைப் போர்த்திக் கொண்டு கையில் கழியைத் தாங்கிச் சென்று கொண்டிருந்தார்கள். நிலவு பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது. பெரிய பண்ணாடி கோபாலசாமிக் கவுண்டர் வீட்டில் மட்டும் இன்னும் கலகலப்பாகவே இருந்தது. இன்று வெளியூரிலிருந்து அவருடைய மாப்பிள்ளை வீட்டார்கள் வந்திருந்தார்கள். சாதாரண நாட்களிலேயே பண்ணாடி வீட்டில் எல்லோரும் சாப்பிட்டு கடைசி ஆள் படுக்கப் போகும் போது மணி ஒண்ணு ரண்டு ஆகிவிடும். கோபாலசாமிக் கவுண்டர் சாப்பிட்டான பிறகு வீதித் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அவருக்கு முன் பக்கத்தில் வெற்றிலைத் தட்டம் வைத்திருந்தது. கவுண்டருக்கு வயது அறுபதுக்கு மேலிருக்கும். பார்வைக்கு நாற்பதுக்குக் குறைந்த வயதுள்ளவராகவே மதிக்கலாம். ஊரிலும் சுற்றுப் பக்கத்திலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். ஊரிலிருந்து வந்த அவருடைய மாப்பிள்ளை தங்கவேலுக் கவுண்டர் திண்ணையின் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து வெற்றிலை மடித்துப் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது நடுவளவு நாச்சியப்ப கவுண்டர் அங்கு வந்து சேர்ந்தார். அவ ரோடு பக்கத்து வீட்டுப் பழனிக் கவுண்டரும், செல்லப்ப கவுண்டரும் வந்து திண்ணையில் உட்கார்ந்தார்கள். "என்னுங்க, அண்ணு சோறு உண்டு ஆச்சுதுங்களா? சாவகாசமா உக்காந்திட்டீங்கோ?"

"வா. அப்புனு வா. எல்லாம் ஆச்சு. இண்ணக்கி கொஞ்ச நேரந்தா ஆயிட்டது. ஊரிலே இருந்து அவுங்கெல்லாம் வந்தாங்கோ........."

"யாரு? (அந்தப் பக்கம் பார்த்து) அடடே! மாப்புள்ளையா வாங்க. வாங்க... நாம் பாக்கிலையா......... போங்கப்புனு இந்த கண்ணு ரண்டும் கொஞ்சம் மங்கலாத் தெரியுதுங்க. வயசு ஆயுருச்சு பாருங்க...... மாப்புளே எப்ப வந்தாப்புலே"

"வாரனுங்கோ மாமா. பொழுது சாய வந்தமுங்கோ"

"சொகந்தானுங்க மாமா!"

"என்னுங்கோ மாப்புளே...... நீங்க படிச்ச வங்கோ. அடிக்கடி ஊருசேரி போறவங்க—வாறவங்கோ. காயித்திலே படிப்பீங்களே. சண்டைச் சங்கதியெல்லாம் எப்படியாச்சுதுங்கோ?"

"சண்டை ஒரு பக்கத்திலே நடந்து கிட்டுத்தான் இருக்குதுங்கோ. அது எவடத்தெ தீந்தாப்புலே இருக்குதுங்கோ?" என்றார் எதையோ நினைத்துக் கொண்டவர் போல.

மாப்பிள்ளை, "அது எங்கெ தீந்தாப்புலே இருக்குதுங்க?" என்று வெளிப்படையாகச் சொன்னாலும் அதே கேள்வி அவர் உள்ளத்திலும் எதிரொலித்தது. தங்கவேலு, டவுன்பள்ளிக்கூடத்திலே ஒன்பதாவது வகுப்பு வரை படித்தவர். அவருக்கு அதற்கு மேலே படிப்பில் ருசியில்லாததால் அதோடு படிப்பை நிறுத்திக் கொண்டார். சமீபத்தில் தான் கோபாலசாமிக் கவுண்டரின் ஒரே பெண்ணான பவளாத்தாளை மணம் செய்து கொண்டார். அவர் ஏராளமான நாவல்களும், நவீனங்களும், கதைகளும் படித்ததன் பயனாகத் தன் இளம் மனைவியோடு உல்லாசமாக இருக்க ஆசைப்படுபவர். புதுமலர் ஒன்று வாசத் தென்றலில் மகிழ்ந்தாட விரும்புவது போல் அவரும் தன் புது மனைவியோடு மகிழ்ந்திட ஆசை கொண்டவர். ஆனால் தன் சொந்த ஊரில் வீட்டில் கூட்டம் அதிகம். அவருடன் பிறந்தவர்கள் எழெட்டுப் பேருக்குக் குறைவில்லாமல் இருந்தார்கள். அதோடு அவருடைய தாய் தகப்பன், பாட்டன் பாட்டி எல்லோருமாகச் சேர்ந்து ஒரு பெரிய குடும்பம். மனைவியோடு கொஞ்சி விளையாட அங்கு இடமில்லை.

வீட்டில் தங்கினால் தகப்பனார் சண்டை போடுவார். 'என்னடா, நாங்கெல்லாம் உன்னைப்போல கலியாணம் பண்ணிக்கிலையா! எந் நேரமும் வீட்டைச் சுத்திக் கிட்டே திரியரே. போடா போ, வேலையைப் போய் பாரு" என்று கண்டிப்பார். பவளாத்தாளும் அதிகமாகத் தன் தந்தை வீட்டிலேயே இருப்பாள். தங்கவேலுக் கவுண்டர் இங்கு அடிக்கடி வரவும் சம்மதியார். ஆகையால் வந்ததும் நாலைந்து நாளில் திரும்பி விடுவார். இன்றும் இரண்டொரு நாளில் திரும்ப வேண்டும் என்ற கண்டிப்பான உத்திரவோடு வந்திருந்தார். ஊரிலிருந்து வண்டியில் வரும்போது அவர் என்னென்னவோ கற்பனையெல்லாம் செய்து கொண்டு வந்தார். அன்று இரவு தன் மனைவியோடு அவர் எவ்வளவோ விஷயங்கள் பேசவேண்டி இருந்தது! அவருடைய உள்ளத்தை அறிந்தன போலவே வண்டிக் காளைகளும் வெகு துரிதமாக அவரைக் கொண்டு வந்து சேர்த்தன.

பவளாயும் அவருக்கிசைந்த நல்ல பெண். தன் கணவன் குறிப்பறிந்து நடப்பதில் கெட்டிக்காரி. தன் புருஷனைக் கண்டவுடனே அவன் உள்ளத்துடிப்பையெல்லாம் உணர்ந்து விட்டாள். அவளும் கொஞ்சம் படித்திருக்கிருள். அவ்வப்போது புருஷன் வாங்கிக் கொடுத்த நாவல்களைப் படித்திருக்கிருள். அவளுடைய கணவனே அவளுக்கு உயிர். அன்று ராத்திரி தன் கணவனுக்குப் பிரியமான உணவு வகைகளை எல்லாம் தானே தன் கைப்பட வெகு சீக்கிரத்தில் தயாரித்து விட்டாள். அவளாகவே பக்கத்திலிருந்து வேண்டிய உபசரணைகளைச் செய்தாள். அவனுக்கு மற்றவர்கள் எதிரில் இல்லாவிட்டாலும் அக்கம் பக்கத்தில் இருந்தாலே மனைவியோடு பேச சங்கோசம். சொந்த வீட்டில் ஏற்பட்ட பழக்கம் அது. மாமனார் வீட்டில் அந்தத் தொந்தரவுகள் இல்லாவிட்டாலும் வீட்டு ஞாபகமே ஊறிப் போயிருந்த அவனுக்கு அடிக்கடி அந்த எண்ணம் வந்துவிடும்.

கோபால்சாமிக் கவுண்டருக்கு ஊரடுத்து ஒரு தோட்டம் உண்டு. அங்கு கிணற்றோரம் நந்தவனமும் அதைச் சேர்ந்து அழகான பங்களாவும் கட்டியிருந்தார். பங்களா இக்காலத்துக்கு ஏற்ற வசதிகளோடு அமைந்திருந்தது. கிணற்றிற்கு

எலெக்டிரிக் மோட்டார் வைத்திருந்ததால், அதிலிருந்தே பங்களாவுக்கும் மின்சார விளக்குகள் அமைத்திருந்தார். பகல் நேரத்தில் கவுண்டர் அதிகமாக அந்தப் பங்களாவில் தான் இருப்பார். இரவில் வீட்டிலேயே தங்கி விடுவார். பந்துக்கள் யாராவது வந்தால் அங்கு வசதியாக இருப்பார்கள். தங்கவேலு வந்தபோதெல்லாம் அந்த பங்களாவில் தான் அதிகமாகத் தங்கியிருப்பார்.

'அகத்தின் அழகு முகத்தில்' என்பார்கள். ராத்திரிச் சாப்பாடு ஆனவுடன் பவளக்காள் காய்ச்சியெடுத்த மதுரமான பால் கூஜாவோடு அந்த பங்களாவுக்குச் சென்று விட்டாள்.

மாப்பிள்ளை எதோ உபசாரத்திற்கு ஒன்றிரண்டு வார்த்தைகள் மாமனாரோடு பேசி விட்டுப் போகலாம் என்று திண்ணைக்கு வந்தார். ஆனால் எதிர் பாராத விதமாக நாச்சியப்ப கவுண்டர் வந்து சேர்ந்தார். அவர் எதாவது 'நச் நச்' சென்று ஓயாமல் கேட்டு வாயைப் பிடுங்குவார். ஆளையும் விடமாட்டார். மாப்பிள்ளை மனதுக்குள்ளாகவே அவரைச் சபித்துக் கொண்டார். நாலு பேருக்கு மத்தியில் திடீரென்று எழுந்து போவதும் மரியாதையல்ல. தர்ம சங்கடமாக இருந்தது அவருக்கு. நாச்சியப்ப கவுண்டரும் விட்டவரல்ல. அவர் உடனே கேள்வி மேல் கேள்வி போட ஆரம்பித்து விட்டார்.

"என்னங்க, நம்ப ராசா சயிப்பானுங்களா?"

"நம்ப ராசாவுக்கு இப்பொ கொஞ்சம் நல்ல காலம் பொறந்திருக்கு துங்க"

"அதென்ன சேதி?"

"இந்தச் சர்மனிக்காரன் இவ்வளவு நாளும் கொஞ்சம் ஆட்டம் காட்டினானுங்க. எத்தனை நாளைக்கி அது நடக்குமுங்கோ. இப்போ ரசியாக்காரன் அவனை ஒதைக்கிறான். அதை வாங்கிக்கிட்டு குந்தி யிருக்கானுங்க."

"அட யெளவே!"

"அதோடே அந்தச் சர்மனிக்கு ஒத்தாசை பண்ணிக்கிட்டு இருந்தான இட்டாலிக்காரன். அவன் நம்ம ராசாவுக்குக் கூளக் கும்பிடு போட்டானுங்க. இனிச் சர்மனிக்காரன் பாடு கொஞ்சம் திண்டாட்டந்தான்."

"அதென்னுங்க மாப்புளே இட்டலி இட்லின்னு சொல்றீங்களே. அது என்ன பேருங்க?"

"இட்டலி கடையிலே விக்குதே அது அல்லங்க. இடாலி, இதாலிங்கறது ஒரு தேசம். சொர்மனிக்கு சிநேகமாக இருந்ததுங்க."

"அப்படியா சமாச்சாரம். ஓராளுக்கு ஒருபுறம் இடியின்னா தவுலுக்கு ரண்டு பக்கமும் இடியின்னு சொல்லுவாங்களே. அப்படியல்லங்க இருக்குது கதை."

"நல்லாச் சொன்னீங்க பேரங்க. அப்படித்தா ஆச்சு, அவன் ரசியாக்காரனோடும் சண்டை போட்டுக்க வேணும். நம்ம ராசாவையும் கவனிச்சுக்க வேணும். ஆனா அவன் போட்ட ஆட்டத்துலே அவனுக்கு இடுப்பெல்லாம் ஒடுஞ்சு போச்சுங்க.

"அட எளவே அப்பறம்?"

"அப்பற மென்னுங்க. நம்ம ராசாவுக்கு பக்க பலமா அமெரிக்கா வேறே."

"அடேயப்பா, அமரிக்காவா, என்னுங்க மாப்பிளே நம்ப ராசா பாடு கொண்டாட்டந்தான்."

"அப்படித்தான் இருக்குதுங்க."

"ஆமா், இந்தச் சப்பான்காரன் என்ன பண்ணரானுங்கோ?"

"அவன் என்னத்தைப் பண்ணுவானுங்க. அவனும் சர்மனிக்காரனே நம்பிக்கிட்டு இருந்தானுங்கோ. இப்போ இத்தாலிக்காரன் கதியைப் பாத்திட்டு அவனும் முழியா முழிக்கிருனுங்கோ!"

"இனிமே அவம்பாடும் திண்டாட்டமுண்ணு வையுங்கோ. ஆமாங்கோ இந்த விலைவாசியெல்லாம் இப்படி ஏறிட்டே போவுதுங்களே, இதுக்கு ஒரு முடிவு இல்லையிங்களா!"

"சண்டை நடக்கிற வரைக்கும் விலைவாசிங்களெல்லாம் இப்படித்தானுங்க இருக்கும். ரம்ப அதிகமாப் போகாமே சர்க்காருலேயும் கட்டுப்பாடு பண்ணிகிட்டு இருக்காங்க."

"என்னுங்க போங்க! சனங்களெல்லாம் சாப்பாடு இல்லாமே மடியுது. நாமெல்லா எப்படிப் பொழைக்கிற துங்கோ."

இந்தச் சந்தர்ப்பத்தில் கோபாலசாமிக்கவுண்டர் மனைவி அங்கு வந்து கதவுப் பக்கம் நின்று எட்டிப் பார்த்தாள். கொஞ்சம் தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். கொஞ்சம் இருமினுள். பெண்ணைப் பெற்றவளுக்கல்லவா தெரியும், பெண்ணின் வருத்தம். பவளாத்தாள் பாவம் அங்கு அவர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கிருள். 'ஏதோ ஒரு நாளைக்கு வந்த ஆசாமியை இப்படிப் புடுச்சு உட்கார வைச்சுக்கிட்டாங்களே' நல்ல வேலை" என்று நினைத்துக் கொண்டே எச்சரிக்கை செய்ய ஆரம்பித்தாள்.

ஆகையினலே கோபாலசாமிக் கவுண்டர் மாப்பிள்ளையினுடைய உதவிக்கு இப்போது கைகொடுக்க வந்தார். மனைவியினுடைய எச்சரிக்கையை உணர்ந்து குறிப்பாக ஆரம்பித்தார். அவருக்கு உலகவிவகாரங்கள் அவ்வளவாகத் தெரியாவிட்டாலும் பொதுவில் நல்ல சூட்டிப்புள்ளவர். சாமர்த்தியமாகப் பேசக்கூடியவர்.

'தம்பி நானு ஒண்ணு கேக்கறே சொல்லு?" என்று நாச்சியப்பனைப் பார்த்துக் கேட்டார்.

"கேளுங்க."

"சண்டை மூணு வருசமா நடக்குதா இல்லியா?"

"நடக்குதுங்க."

இதுதான் சமயமென்று மாப்பிள்ளை மெதுவாக எழுந்து நழுவப் பார்த்தார். நாச்சியப்ப கவுண்டர் அவர் கையைப் பிடித்துக் கொண்டு, "சித்தே இருங்கோ மாப்பிளே, போவலாம், உங்க கிட்டே இன்னம் சில சங்கதி கேக்க வேணும். எப்பவோ ஒரு நாளைக்கி வாறிங்க. இப்படி அவசரப் படறீங்களே" என்று உட்கார வைத்து விட்டார். சாக்குப் போக்குச் சொல்லி தப்பித்துக் கொள்ள மாப்பிள்ளைக்குத் தைரியமும் வரவில்லை. அப்பாவி அப்படியே உட்கார்ந்து விட்டார்.

பவளாயா பங்களாவின் மாடியிலே மாப்பிள்ளைக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். கண்ணனின் வருகைக்காகக் காத்திருந்த ராதையைப் போலவும், அர்ஜுனன் வருகைக்காக ஏங்கி நின்ற சுபத்திரையைப் போலவும் அவளுடைய உள்ளம் தவித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு விநாடியும் அவளுக்கு யுகமாகப் பட்டது. ஒரு இடத்திலும் அமைதியாக இருக்க அவளால் முடியவில்லை. அங்கும் இங்கும் பரபரப்பாக நடந்து பார்த்தாள். அங்குகிடந்த ஒரு

நாவலை எடுத்துப் படித்துப் பார்த்தாள். ஒன்றிலும் அவள் மனம் நிலை கொள்ளவில்லை. பால் போன்ற வெண்ணிலாவைக் காணவும் அவளுக்குச் சகிக்க வில்லை. "உன்னுடைய இந்த ஒளி எதற்கு உபயோகம். என்னைப் போன்ற பெண்களை வருத்துவதற்காகவா? பெண்களின் உள்ளத்தைச் சோதிக்கவா உனக்கு இந்தப் பிரகாசம் கொடுக்கப் பட்டிருக்கிறது." என்றெல்லாம் கடிந்து கொள்ள ஆரம்பித்தாள். நந்தவனத்திலிருந்து அழகிய மலர்களின் வாசனையோடு கூடிய இனிமையான காற்றும் அவளுக்குச் சற்றும் பிடிக்க வில்லை. ஒரு பைத்தியக்காரியைப் போல ஆகி விட்டாள். கூஜாவிலிருந்த பாலை எடுத்து ஒரு வாய் குடித்தாள். அதுவும் கசந்து விட்டதோ? என்னவோ! உமிழ்ந்து விட்டாள். ஓடிப்போய்த் தன் புருஷனுடைய கையைப் பற்றி இழுத்து வரலாமா என்று ஒருகணம் நினைத்தாள். அம்மாவோடு சொல்லி விட்டு வந்தோமே! அவளுக்குப் புத்தியில்லை. என்னைப் போல அவள் இருந்திருந்தால் அல்லவா அவளுக்குத் தெரிய. அடடா! இந்த நிலவுங்கூட நான் நிஜமாகவே திட்டுவதாக நினைத்துக் கொண்டு ஓடுகிறதே. என்ன அவசரமோ. அவசரமாக வர வேண்டியவரே இன்னும் வர வில்லையே! விடிந்தால் வண்டியைப் பூட்டிக் கொண்டு கிளம்பி விடுவாரே? இந்த ஒரு நாளே இப்படியாச்சே? இன்னும் எத்தனைநாள் காத்துக்கிடக்க என்று அவள் அங்கு புலம்பிக் கொண்டிருந்தாள்.

பேச்சு இங்கே நடக்கிறது:

"இது வரைக்கும் என்ன கொறைச்சல் சொல்லு பாக்கலாம்."

"நானு வந்து எனக்கா இப்போ சொல்லரே. ஏழை எழிய வங்க எப்படி பொளைக்கறது அதைப் பத்தி........."

"ஆடு நனையுதுண்ணு ஓனாயி விக்கி விக்கி அழுத மாதிரியல்லவா இருக்குது சமாச்சாரம்."

"எப்படியுங்க என்னமோ கதையா மூடுமந்தரமா பேசறீங்க' தப்பு நம்ம கிட்ட இருக்குது."

"அது என்னுங்க தப்பு."

"இப்போ நாம எல்லாம் குடியானவங்க ஏதோ பூமி, காணி நெறைய இருக்குது. நெலத்திலே விளையுது. சாப்பிடறோம் நாலு பேரு ஏழைங்களும் நம்மை யண்டி பொளைக்குது. முன்னைப் போல நாம்ப எல்லாரும் தவச தானியம் வெள்ளாமை பண்ணறது இல்லை. வேர்க்கடலை, வாழை, கரும்பு, பருத்தி இந்த மாதிரி எல்லாருமே வெச்சு பண வெள்ளாமை ஆக்கிப் போட்டோம். தானிய வெள்ளாமை கொறைஞ்சு போச்சு."

"அதனலே என்னுங்க. அந்தப் பணத்துக்குத் தானியம் வாங்கிக்கலாமே."

"இதுதா இருக்கறதை விட்டு பறக்கிறதைப் புடிக்கிற சமாச்சாரம். எல்லாருமே இந்த மாதிரி செஞ்சாக்க தானியம் கிடைக்க வேணுமே."

"பின்னே என்னதான் பண்ணரது சொல்லுங்க."

"கால்காணி, அரைக்காணி இருக்கிரவனும் சரி, நெறைய நிலத்தை வெச்சிருக்கிறவனும் சரி, எல்லாருமே முடிஞ்ச மட்டும் தவசதானியம் வெள்ளாமை செஞ்சா இப்போ இந்தக்கதி வருமா?"

"தானியம் மட்டும் இருந்தாப் போதுமா?"

"வேறே என்ன வேணும். பருப்பு, மிளகாய், காய்கறி எல்லாம் இங்கியே உண்டு பண்ணலாமே."

"சக்கரை, எண்ணே!"

"நம்ப பாட்டனெல்லாம் சக்கரையும் சீமை எண்ணெயும் கண்டுதா பொளேச்சாங்களா?"

"இந்த மனசு கேக்குதுங்களா? கேக்குது காப்பியும் சக்கரையும். எல்லாம் பழக்க வழக்கந்தானுங்கோ. கிராமமெல்லாம் இப்போ நல்ல நெலமையிலே இருந்தா இப்போ இந்த அரிசிப் பஞ்சம் காணுமா? கிராமத்துலே விளஞ்சுதுலே கொஞ்சம் டவுனுக்கும் அனுப்பலாமே. நமக்கு வேணுமுங்கற ரெண்டொரு முக்கியமான சாமானே டவுனுலே இருந்தும் வாங்கிக்கலாம். முன்னே எல்லாம் பண்டமாத்து நடந்ததே. அதெல்லாம் கேட்டு இருக்கறமே. தெரியாதா."

"நீங்க சொல்லறது செரி தானுங்கோ?"

"சிறுசிலே இருந்துதா பெரிசு. கிராமம், தாலூகா, சில்லா இப்படி பெரிசாப் போகுதே முதல்லே எது இருக்குது பாரு."

"ஆமாங்க என்னென்னமோ புதுசு புதுசா சட்டமெல்லாம் போடறுங்களாமே?"

"சட்டம், விட்டம் எல்லாம் போட்டுத்தான் ஆகவேணும். காரியம் நடக்க வேண்டாமா? சொல்லறது பெரிசு இல்லே அப்புனு. எல்லாம் காரியத்துலே பண்ணிப் பாக்கவேணும். உலகத்துக்கு ஆனது உனக்கும் ஆகுதுண்னு குந்தியிட்டு இருந்தா நடக்குமா காரியம்! உலகத்தை ஆளரதும் சும்மா உக்காந்திட்டு அழுகரதும் ஒண்ணு தம்பி. என்னங்க மாப்புளே, அண்ணஞ் சொன்னதை நீங்களும் கேட்டிங்களே உங்க மனுசுக்கு எப்படிப் படுது" என்று மாப்பிள்ளையைத் திரும்பிப் பார்த்தார்- மாப்பிள்ளை தூங்கி விழுந்து கொண்டிருந்தார்.

"அடப் பாவமே. மாப்புளே தூங்கறுரு."

"ஆமா, தம்பி அவரு ஊருலே இருந்து சலிச்சு வந்திருப்பாரு. பாவம் அவரை எதுக்கு தொந்தரவு பண்ண வேணும். போயித் தூங்கு போங்க" என்று கோபாலசாமிக் கவுண்டர் எழுந்தார்.

நாச்சியப்ப கவுண்டரும் அரை மனசோடு, "மாப்புளே, போயிட்டு வாரனுங்க" என்று கிளம்பினர்.

மாப்பிள்ளை தங்கவேலுக் கவுண்டருக்கு உண்மையான தூக்கம் இருந்தால்தானே.? அவருடைய மனமெல்லாம் பவளக்காளேப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தது. இதுவரை அவர்கள் என்ன பேசினர்கள் என்பதே அவருக்குத் தெரியாது. "போயிட்டு வாரனுங்கோ" என்ற வார்த்தைகள் மட்டும் காதில் விழுந்தன. அப்போதுதான் மாப்பிள்ளைக்கு உணர்ச்சி வந்தது. அடுத்த கணம் அவர் பவளத்தின் எதிரில் வந்து நின்ருர். அவளுக்கு வந்த துக்கமும், கோபமும் சொல்லி முடியாது. "பொழுதுவிடியப்போகுது போயி வண்டியெப் பூட்டுங்க ஊருக்குப் போக" என்ருள் ஆத்திரத்தோடு.

"அப்புறம் என்ன?"..............

"அநியாயமா, நெலாக் காஞ்ச ஒரு நல்ல ராத்திரி போச்சே?"

"வீணப் போகுலே பொழுது சாயட்டும்!"

வாஸ்தவம். அன்றைய இரவு நம்மால் வர்ணிக்க முடியாத வனப்புடன் திகழ்ந்தது. பெண்ணுக்காக இயற்கைப் பெண்ணே இரங்கினள் போலும்!

கிராமியக் காட்சி

குருவிக்காரி

சின்னக் குழந்தைக்குப் புதுப் பொருள்களைக் கண்டால் ஒரே ஆனந்தம். ஆசை நிறைந்த கண்களோடு உற்றுப் பார்த்துக்கொண்டே குழந்தைகள் நிற்கிறதல்லவா? அந்த மாதிரி ஊருக்குப் புதிதாக ஏதாவது கூட்டம் வந்து விட்டால் எனக்குப் பரவசம் உண்டாவது வழக்கம். கூட்டம் என்றால், கிராமப் புறங்களுக்கு வரும், டொம்பர்கள், நரி பிடிக்கிறவர்கள், பச்சைக்காரர், மலையர்கள் கோடங்கிகள் குருவிக்காரர் இந்தக் கூட்டத்தைத் தான் சொல்கிறேன். குருவிக் காரர்கள் வந்தால் அவர்களோடு பல நிறங்களுள்ள குருவிகளும் கூடுகளுடன் வந்து விடுகின்றன. ஆகா! பயம் நிறைந்த கண்களோடு பல நிறத்தில் இறக்கைகளை விரித்துப் பறக்க மாட்டாமல் அடை பட்டுக்கிடக்கும் அந்தப் பட்சிகளைப் பார்த்தால் ஒரு விதத்தில் ஏக்கம் பொங்கும். ஆனால், மறுகணம் மனம் வேறு வழியில் இந்தக் கூட்டத்தைப் பின் தொடர்ந்து சென்று விடும்.

காட்டுக் குருவி போல் அவர்கள் கட்டற்றவர்கள். கிராமத்துக்கு அடுத்தாற்போல் காட்டுப் புறங்களில் கூடார மடித்துத் தங்கியிருப்பார்கள்.

மாலை நேரத்தில் காலாற நடந்து போய் அவர்கள் செய்கையைக் கவனிப்பதில் எனக்கு ரொம்ப ஆனந்தம். அந்த வேளையில், ஏற்று நிறுத்தி விட்டுச் செல்லும் ஓசையும், வீடு திரும்பும் பண்டம் பாடியின் சத்தமும், தூரத்திலே வேலி யோரமுள்ள பண்ட மேய்க்கும் பையன்களிடமிருந்து வரும் தெம்மாங்கும், ஏதோ ஒரு கனவு லோகத்தையே கண்ணுக்கு எதிரே கொண்டு வந்துநிறுத்தி விடும். இயற்கை தன் அழகோடு பூரித்துநிற்கும் அந்த நேரத்தில் குருவிக்கார தம்பதிகள் பாடிக்கொண்டே தங்கள் இருப்பிடத்திற்கு வருவார்கள். குருவிக்காரி, தன் கணவனிடமே வேடிக்கையாகக் கேள்வி போடுவாள்:

காடைக் கூடு கக்கத்திலே
  கருத்த சாமி பக்கத்திலே
மாடப் புருக் குஞ்சடுக்க
  மையுண்டோ உன்னிடத்தில்?

அந்தக் கூட்டத்தாரிடம் உள்ள 'கலகல'ப்பும், மகிழ்ச்சியும் தேடினாலும் கிடைப்பது அரிது. துன்பமே இன்னது என அறியாதவர்கள் போல

உல்லாசத்திலே அவர்கள் மூழ்கியிருப்பார்கள். அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு வந்தால், வெகு நாளைக்கு அதை மறக்க முடியாது.

ஒரு நாள் மாலை வேளையில் வீட்டுத் தாழ்வாரத்தில் குருவிக்காரர் வாழ்க்கையைப் பற்றி நினைத்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தேன்.

என் வீட்டுத் தாழ்வாரத்திலே வெகு காலமாக குடியிருக்கும் ஜோடிக் குருவிகள் 'ஜிவ்' வென்று பறந்து வந்தன. வீட்டுக்கும், மரத்துக்கும் மாறி மாறிப் பறப்பதும், தாழ்வாரத்திலும், கூரையிலும் உட்காருவதுமாக கொஞ்சம் கூட அவை நேரத்தை வீணாக்குவதில்லை! என்னவாவது இந்தக் குருவிகள் பண்ணிக் கொண்டே இருக்கின்றன. அழகான அந்தக் குருவிகளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரு பழம் பாட்டு ஞாபகத்துக்கு வரும். நாயகனைப் பிரிந்த ஒரு காதலி தனித்திருக்கிறாள். தோழிகூட பக்கத்தில் துணைக்கு இல்லை போல் இருக்கிறது! தாழ்வாரத்தில் வாழும் சிட்டுக் குருவியிடம் தன் மன ஏக்கத்தைச் சொல்லுகிறாள்; தன் நிலையை நாதனிடம் எடுத்துப் பேச வேணும் என்றும் பரிவுடன் வேண்டிக் கொள்கிறாள்:

தண்ணுமை மனிதர்
தாழ்வாரத்திலிருந்து
தழைத்திடும் அடைக்கலக் குருவி
சின்ன நாள் பருவம்
போகுதென் செய்வேன்
என் சேமனை நீ வரச் சொல்வாய்
பொன்னணி பூணேன்
பூ மலர் சூடேன்
பொருந்திய அசனமும் மறந்தேன்
குன்னுதென் சீவன்
குலையுதென் சேலை
கொழுநனுக் கெடுத்துரைப்பாயே.

நாயகி தூதனுப்பும் குருவி, நல்ல வேளையாக, குருவிக்காரர் கையில் சிக்காமல் போய்ச் சேர வேணும்!

புத்தக ஆராய்ச்சி

[தமிழ் இசைப் பாட்டுக்கள்: தொகுத்தவர்: அ. லெ. நடராஜன். இசைப் படுத்தியவர்: சங்கீத வித்வான், கீவளூர் எஸ். மீனுட்சி சுந்தரம் பிள்ளை. பிரசுரம்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி.]

"இந்தத் தெய்வகானத்திற்கு நாம் தகுதி யுள்ளவர்களா என்று எண்ணத் தோன்றுகிறது — நம்முடைய இசையைக் கேட்கும் போது. ராகங்கள் கிளை கிளையாய்க் கிளைத்து இதயத்துக்குள் புகுந்து எத்தகைய ஆனந்தங்களை உண்டாக்குகின்றன!"

இந்த இனிய கானம்போன்ற வாசகங்களைச் சொல்லியது யார்? பொன் எழுத்தில் பொறித்து வைக்கப் பட வேண்டிய இந்த அமுத மொழிகள் எங்கே காணப் படுகிறது? இத்தகைய ஆவல் எல்லாருக்கும் ஏற்படுவது சகஜம் தான்.

புதுமைம் பதிப்பக தமிழ் இசைப் பாட்டுக்கள் முகவுரையில் டி. கே. சி அவர்கள் இவ்விதம் அருமையாக குறிப்பிட்டிருக்கிருர்கள். அந்த முன்னுரையை அனுபவிக்க அனுபவிக்க, சங்கீத ஞானம் இன்னது, பரவ மயமான சங்கீதம் இன்னது, என்பதையெல்லாம் தெளிவாக உணர்ந்து கொள்கிறேம்.

இப்பேர்ப்பட்ட அரிய புத்தகத்தை அனுபவிக்கக் கொடுத்துவைப்பதற்கு எத்தனையோ ஜென்மங்களில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். "பாடல்களில் இருந்த பிழைகளைத் திருத்தியும், பாட்டுக்களுக்கு முன் உள்ள குறிப்புகளும் புத்தகத்துக்கு முகவுரையும் எழுதித் தந்ததிற்கு நாங்கள் திரு டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேம். அவர்களுடைய உதவியும் ஒத்தாசையும் இல்லாவிட்டால், இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்க முடியாது" என்று பதிப்பகத்தார் பதிப்புரையில் சொல்லுகிருர்கள்.

நமக்கு டி. கே. சி ஒரு அற்புதமான காரியத்தைச் சாதித்துத் தந்து விட்டார்கள். பதங்கள், பாடல்களிலுள்ள பிழைகளையும் நீக்கி தெளிவு பண்ணிக் கொடுத்து விட்டார்கள்:

பாவ சங்கீதமாகவே பாடப் பயிலலாம். "பதங்களில்த்தான் ராகங்களின் மூர்ச்சைகளைத் தெளிவாய்த் தெரியக் காணலாம். இந்த முறையில் உபயோகிப்பதற்காகவே புஸ்தகம் ஏற்பட்டது. அப்படியே நம்மவர்கள் சங்கீதத்தைப் பயிலு வார்களானல் உலகத்தில் எங்குமில்லாத பாவ மயமான சங்கீதத்தை தமிழ் நாடெங்கும் மறுபடியும் ஒலிக்கக் கேட்கலாம்"

[காந்தி மலர் முதற்புத்தகம், மாணவருக்கு: மகர்த்மா காந்தி எழுதியதும் பேசியதும். மொழி பெயர்த்தோர்: வெ. ராமசாமி, அ. லெ. நடராஜன், பிரசுரம்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ 7—8—0]

மகாத்மாவின் தத்துவங்களும் நீதி நெறிகளும் நிறைந்த இந்தப்

புத்தகம் மற்றப் பாஷைகளில் வெளி வந்திருக்கிறது. இப்படிப் புத்தகம் தமிழிலும் வரவேண்டும் என்பதற்காக மொழி பெயர்த்துள்ளதாக முன்னுரையிலிருந்து தெரிய வருகிறது.

வாழ்வின் பலதுறைகளைப் பற்றியும் மகாத்மாவின் உபதேசத்தை இதில் காணலாம். அழகிய தோற்றத்தோடு, நல்ல அமைப்பில், சிறப்புடன் வெளியிடப் பட்டிருக்கிறது.

[கற்பு அல்லது நாகரிகப் பெண்: (நாடகம்) ஆசிரியர்: ரா. வெங்கடாசலம். கிடைக்குமிடம்: சச்சிதானந்தம் பிள்ளை சந்து, யானைக்கல் தெரு. மதுரை. விலை ரூ 1.]

கற்பு நிலை என்று சொல்ல வந்தால், அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைக்க வேண்டும் என பாரதியார் சொல்லிப் போன உறுதியான கொள்கையை ஆசிரியர் அப்படியே பின் பற்றி உயிரும் உணர்ச்சியும் நிறைந்த ஒரு அற்புதச் சித்திரத்தை அழகாகத் தீட்டி நமக்கு அளித்துள்ளார். நடையழகும் கருத்தழகும் கொண்ட நாடகங்களைப் பார்ப்பது அரிது. ஆனல் இச்சிறப்பு மிக்க நாடகம் நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகிறது. கதைக் கவர்ச்சியோடு, தீப் பொறி பறக்கும் சிந்தனைகளையும் தூவியிருக்கிறர். ஆண் பெண் இரு பாலாரும் படித்துப் பயனடைய வேண்டுமென சிபார்சு செய்கிறேம்.

[அமெரிக்காவைப் பார்: (தற்காலப் பிரச்னைச் சுடர் 3) ஆசிரியர்: கும்பகோணம் எஸ். எ. ரஹீம் விலை ரூ 0—8—0

சுதந்திர முழக்கம்: ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா. விலை ரூ 1—4—0

அச்சமில்லை: ஆசிரியர்: சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் விலை அணு எட்டு]

மேலே கண்ட மூன்று புத்தகங்களும் தமிழ்ப் பண்ணை பிரசுரங்களாக வெளி வந்திருக்கின்றன. "அமெரிக்காவைப் பார்" என்னும் சிறு புத்தகத்தில் அமெரிக்க விவரங்கள் அடங்கியிருக்கின்றன. ஆசிரியர் விஷயங்களை ரசமாகச் சொல்ல பிரயத்தனப் பட்டிருக்கிறர்.

சுதந்திர முழக்கம் புத்தகம் வீறு கொண்ட நடையில் பிரவகித்து ஓடுகிறது. உலகத்து பல அறிஞர்கள் சுதந்திரப் பொன் மொழிகளைக் கண்டும் சுதந்திர ஞானம் கொள்ளா விட்டால் அது ஆச்சரியப் படவேண்டிய விஷயம் தான். எங்கே பார்த்தாலும் தட்டி எழுப்பும் கனல் கக்கும் சிந்தனைகளே காணக் கிடக்கின்றன. "தமிழ் நாடே! இச்சிறிய நூலிலுள்ள சிந்தனை மலர்களை ஏற்றுக் கொள்" என்று வலியுறுத்திக் கூறும் ஆசிரியரின் மொழிகளை நாடு ஏற்றுக் கொள்ளும் என்றே நம்புகிறேம்.

ராஜாஜியின் அச்சமில்லை என்னும் நூல் வேதாந்த உண்மைகள் பொதிந்தது. இந்தக் காலத்தில் இதைப் பிரசுரிப்பதின் நோக்கம் சமயத்துக்குச் செய்யும் தொண்டு என்பதாக தமிழ்ப்பண்ணையார்கள் கருதியிருப்பதை பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் நோக்கம் சித்திக்க வேண்டும் என்பதே நமது பிரார்த்தனை.

[முத்துத்தாண்டவர் தமிழிசைப் பாடல்கள்: இசை அமைத்தவர்: சங்கீத வித்துவான் திருப்பாம்புரம் டி. என். சுவாமிநாதப் பிள்ளை. பிரசுரம்: அண்ணமலைப் பல்கலைக் கழகம். விலை ரூ. 2]

முத்துத்தாண்டவர் கீர்த்தனைகளுக்கு பெருமதிப்பு உண்டு. அவருடைய இசைப் பாடல்களின் இனிமையை எல்லோரும் போற்றுகிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைத் தமிழ் வெளியீடாக வெளிவந்திருக்கும் முத்துத் தாண்டவர் தமிழிசைப் பாடல்கள் எனும் புத்தகத்தில் அறுபது கீர்த்தனைகள் அடங்கி இருக்கின்றன. இந்த அறுபது கீர்த்தனைகளுக்கும் மெட்டுக்கள் அமைத்து ஒரு அரிய முன்னுரையையும் எழுதியுள்ளார் திரு சுவாமிநாதப் பிள்ளை அவர்கள். இசைக் கலையில் பண்பட்டுக் கனிந்த திரு பிள்ளையவர்கள் புரிந்த பணியானது, திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பதிப் புரையில் கூறும் வண்ணம், "......வகுத்துள்ள நன்னிற அமைப்பினால் செல்விதிற் றிகழ்ந்து தமிழிசையுலகத்திற்குப் பெரும்பயன் தருமென்பது திண்ணம்." முத்துத் தாண்டவர் வரலாறும் இந்நூலில் தமிழ் ஆசிரியர் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் தந்திருக்கிறார்கள் இசை உலகுக்கு திரு சுவாமிநாதப்பிள்ளை அவர்கள் இதன் மூலம் ஒரு பெரும் தொண்டு செய்திருக்கின்றார் என்றால் அது மிகையாகாது.

* * *

[எனது ராஜிநாமா: ஆசிரியர்: டி. எஸ். சொக்கலிங்கம். பிரசுரம்: கமலா பிரசுராலயம்- பிராட்வே ஜி. டி. சென்னை. விலை ரூ 0—10—0]

ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் 'தினமணி' பத்திரிகையிலிருந்து தாம் ராஜினாமாச் செய்த காரணத்தை விளக்கியிருக்கிறார். அத்துடன் தமிழ்ப் பத்திரிகைகள் சம்பந்தமான குறிப்புகளும் காணப் படுகின்றன. எழுத்து உலகில் ஒரு கட்டுப்பாடு வேண்டுமென்கிறார் ஆசிரியர். வேண்டியது தான். தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் இல்லாததே ஒரு பெரிய குறைதான். ஆனால், ஆசிரியர் தாம் பதவியில் உள்ள போது இதற்காக நன்கு பாடுபட்டிருக்கலாம். இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. முயற்சி தொடங்குவாராக.

* * *

[ஜய பேரிகை (கட்டுரைத் தொகுதி) பிரசுரம்: இளைஞர் சங்கம், ஆழ்வார் திரு நகரி. திருநெல்வேலி ஜில்லா]

ஆர்வத்தின் பயனாக பூத்தது இம்மலர். நல்ல முயற்சியின் விளைவு இந்தக் கட்டுரைத் தொகுப்பு. இதைத் தயாரித்த உற்சாகம் மிக்க இளைஞர்களைப் பாராட்டுகிறோம். பல பெரியார்கள் விஷய தானம் புரிந்திருக்கிறார்கள். மின்னல்க் கொடிகள் போல் கவிதைகள் அங்கங்கே மலரில் விளையாடுகின்றன. முக்கியமாக 'ஆதித்தன்' கவிதையைக் குறிப்பிட வேண்டும். ஒரு இளம் பெண், 'வண்ண மணி விரலால் மாவிரைத்துக் கோலமிடுவதை' வைத்துக் கொண்டு, 'அத்தனையும் கோலம்' என அகிலத்தையே கண் முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். இளைஞர்கள் ஆசை ஓங்கித் தழைத்து வெற்றியளிக்க வேண்டும் என்பதே நம்முடைய ஆசை.

[நகா தூதன்: விலை அணா 2. தெப்பக்குளம். திருச்சி]

கொஞ்ச காலமாக பிரசுரமாகாதிருந்த "நகர தூதன்" பத்திரிகை மீண்டும் பிரசுரமாக ஆரம்பித்திருக்கிறது. குறிப்புகள் வெகு ஜோர்; ஏஜண்டுகள் பாக்கித் தொகை அனுப்பி வைக்காததும் பத்திரிகை நின்றதற்கு காரணம் என ஆசிரியர் குறித்துள்ளார். என்றைக்கு நம் மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்கிறார்களோ?

(எம். எஸ். சத்திவேலு)

ஆனந்தகரமான சந்திரோதயத்தில் இந்தக் கதை ஆரம்பமாகிறது. ஆம், பூரண சந்திரிகையில் தான் இந்தக் கதை நடக்கிறது. இதே மாதிரி பால் நிலா பொங்கி வழிந்து கொண்டிருந்த ஒரு இனிய இரவில் தான் இந்தக் கதை சம்பந்தப் பட்ட பயங்கரமான புயல், பேரிடி , பெரு வெள்ளம் என் நாடக முடிவு எல்லாமே நிகழ்ந்தது. அப்படியானால் அதை இனிய இரவு, ஆனந்தகரமான முழுமதி பொங்கி வழிந்த அருமையான இரவு என்றெல்லாம் எப்படிச் சொல்வது? அது ஒரு புறமிருக்க, ரோஜாவில் முள்ளைப் போல அந்த ஆனந்தத்தில் துக்கமும் கலந்து தானிருந்தது.

கலைஞனுடைய கண்களுக்கு உலகமே ஒரு அதிசயமாகத் தோன்றுகிறது.

“படித் துறையும்,” “அரச மரமும்” கதை சொல்ல ஆரம்பித்து விடுகிறது. இந்தமாதிரி ஒரு அற்புதம் நம்முடைய வாழ்க்கையிலும் நேராதா? நமக்கும் அப்படி ஒரு பாக்கியம் கிடைக்காதா என்றெல்லாம் என் உள்ளத்தில் ஆசைக் கனல் எழுந்தது. என் ஆசை நிராசை ஆக வில்லை. கேளுங்கள்.

அன்று வெண் மதி தன்னுடைய முழுச் சக்தியையும் செலுத்தி பூவுலகத்தையே ஆட்கொண்டு விட்டது. மலையிலிருந்து வழியும் தேனருவிகள், சல சல வென்றோடும் கானாறுகள், மரம் செடி கொடிகளின் மேல் தங்கி யிருக்கும் வெண் கதிர்கள் — எல்லாமே நம் உள்ளத்தை எங்கோ அறிவுக்கும் சிந்தனைக்கும் எட்டாத ஓரிடத்துக்கு அழைத்துச் சென்று விட்டன. நானும் என் நண்பனும் இந்த அதிசயத்தில் மூழ்கி மெய் மறந்து ஏதோ கனவில் நடப்பவர்களைப் போல அந்தப் பிரமாண்டமான கோட்டையைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தோம். கோட்டை என்றால் அது சாமானியக் கோட்டையா? கற்பனைக் கோட்டையைக் காட்டிலும் அற்புதமாயிருந்தது. ஒரு இடத்தில் வானளாவ மரம் ஒன்று ஓங்கி நின்றது. அந்த மரத்தின் மலர்கள் தங்கமும் வெள்ளியுமாக இந்திர ஜாலம் புரிந்து கொண்டிருந்தது. மலரின் மணம் இதயத்தை நிரப்பியது. “ஆகா! ‘இதைத் தான் கற்பக விருட்ச மென்பதோ!” என்றான் நண்பன்.

‘இருக்கலாம். அதையும் விட உயர்ந்ததாகவும் இருக்கலாம். இப்போது கந்தர்வ உலகில் அல்லவா திரிந்து கொண்டிருக்கிறோம்’ என்றேன் நான்.

வேடிக்கை யாகப் பேசிக் கொண்டே அங்கே சின்னா பின்னமாக உடைந்து போய்க் கிடந்த சிலைகளையும், தூண்களையும், பளிங்குக் கற்களையும் இன்னும் மற்ற விந்தைப் பொருள்களையும் கண்

கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தோம். ஒரு பெரிய கருங்கல்லில் எழுதி யிருந்த எழுத்துக்கள் எங்கள் கவனத்தைகவர்ந்தது. அதிலே 'ஸ்ரீ ராஜ ராஜ ரகுவீர ரவி குல தளவாய்' என்ற அரசனின் உருவமும், புரியாத எழுத்துக்களும் காணப் பட்டன. "என்னடா இது!" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

நண்பனும், "காரண மில்லாமல் இருக்குமா," என்று திகைப்புடன் நின்றான். அப்போது ஒரு பயங்கரச் சிரிப் பொலி கேட்டது.

"ஹா, ஹா, ஹா" என்ற அந்த ஒலி வந்த திக்கில் திரும்பினோம். மனம் நடுங்கிக் கொண்டிருந்த தென்றாலும் அங்கே இருந்து போகத் துணிவு ஏற்படவில்லை. "பயப் படாதீர்கள்" என்று எதிரே யிருந்த கல் ஸ்தூபி சொல்லிற்று! 'கல்லும் சொல்லாதோ கவி' என்பார்கள். ஆனால் அந்த ஸ்தூபி கவி சொல்ல வில்லை. கதை சொல்லிற்று.

ஸ்தூபி சொல்லுகிறது: "எங்கே பார்த்தாலும் இயற்கை யெழில் நெஞ்சை அள்ளிக் கொள்கிறது. இன்றைக்குப் போல் இருக்கிறது, ஆம், அன்று நடந்தது இன்று போலத்தான் இருக்கிறது. எங்கள் அரசர் மகா ரசிகர். ஆடுதல், பாடுதல், சித்திரம் முதலிய அருங் கலைகளில் நெஞ்சைப் பறி கொடுத்தவர். நாட்டியம் சங்கீதம் முதலிய விமரிசைகளால் சபைஎப்போதும் நிறைந்திருக்கும். நான் தான் ஆஸ்தான மண்டபத்தின் நடு ஸ்தூபி. நடு நாயகமாக விளங்கினேன், நாட்டின் எட்டுத் திக்குகளிலிருந்தும் எத்தனையோ விற்பன்னர்கள் அங்கு வந்து கூடுவார்கள். அந்த மகா மேதைகளைப் பார்த்த கண்களுக்கு இன்று கண்ணைக் கட்டி காட்டில் விட்டதைப் போல இருக்கிறது. இருந்தாலும் இந்த இயற்கைத் தேவியின் அற்புதங்களைக் கண்டு கொஞ்சம் ஆறுதலடைகிறேன். இங்கே நான் சொல்ல வந்த விஷயம் வேறு— என் கதை யல்ல. கல்லைப் பற்றிய என் கதை உங்களுக்கு ருசிப் படாமல் போகலாம். ஆனால் எங்கள் மன்னனைப் பற்றிய கதை மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறேன். அவர் ரொம்பவும் உல்லாசப் பிரியர் என்று சொன்னேன் அல்லவா! அதோடு அவர் புகழ் வளர் பிறை போல் நாளுக்கு நாள் வளர்ந் தோங்கி வந்ததால் சிற்றரசர்களுக்கும், பேரரசர்களுக்கும் அவர் மீது பொறாமை உண்டாயிற்று. பொறாமைப் புயல் எழுந்த தென்றால் அது விரைவில் பெரு நெருப்பைப் போல் பரவி விடு மென்பது உலக நியதி அல்லவா! வேற்றரசர்கள் படை எடுத்து வந்தார்கள். ஆனால் முடிவு? வெற்றி நமதே! பின் வாங்கி ஓடியவர்களில் எப்படியோ மாருதி என்பவன் தங்கி விட்டான். மாருதிக்கும் மன்னனுக்கும் நட்பு பலப் பட்டது. அவனும் அருங்கலை ரசிகனதலால் இவர்கள் உறவு நிழலும் ஒளியும் போல் பின்னிக் கொண்டது. ஒளியைப் போல் பச்சை உள்ளங் கொண்ட மன்னன் அவனை நம்பினான். ஆனால் நிழல் கைக்குச் சிக்குமா? நிழலைப் போல மாருதி மனசும் இருண்டிருந்தது. மாருதிக்கு எல்லா வசதியும் செய்து கொடுக்கப் பட்டது.

அவன் அரண்மனையில் எங்கே வேண்டுமானாலும் போகலாம். அரசியுடனும் தனித்துப் பேசலாம். பேசுவதென்ன? மன்னனைப் போலவே உரிமை பாராட்டி அரசியை தன் அன்புக்கு பாத்திர மாக்கிக் கொண்டான். அரசியோ கள்ளங் கபடற்ற வெள்ளை உள்ளம் படைத்தவள். தன் சொந்த சகோதரனாகவே மாருதியைப் பாவித்து வந்தாள்.

ஆனல் இந்த உலகுக்கு என்ன தெரிகிறது? வீண் பொழுது போக்குக்கு ஏதாவது வம்புப் பேச்சு வேண்டுமல்லவா! அப்படிப் பேசுவதிலே நியாய அனியாயத்திற்கோ தர்ம அதர்மத்துக்கோ கட்டுப் படவேண்டும் என்ற எல்லையை மீறிவிடுவது சகஜமாயிருக்கிறதல்லவா? அதிகம் எதற்கு? அந்த மாதிரிப் பேச்சுக்களில் வாதப் பிரதிவாதத்திற்கு இடமிராது. யாரே ஒருவர் ஏதோ அபத்தமான ஒன்றைச் சொல்வார். மற்றவர் அதை அப்படியே ஆமோதிப்பார். மூன்ருமவர், "பேஷ்! பலே!" என்று சொல்லிக்கொண்டே ஊரெல்லாம் தண்டோராப் போடக் கிளம்பி விடுவார். அரசியைப் பற்றிய பேச்சு ஓயவில்லை. அரசன் காதுக்கும் செய்தி எட்டியது. ஆனல் இதை நம்ப அவனுக்கு பைத்தியமா பிடித்திருக்கிறது. கொஞ்ச நாளில் பைத்தியமும் பிடிக்கும்படி செய்துவிட்டார்கள். ஆனல் அது நிஜப் பைத்தியமல்ல. அப்படியிருந்தால் கூட அரசியின் மனம் ஆறுதல் அடைந்திருக்கும். என்ன நடந்தது என்பதை ஊகித்துச் சொல்லுகிறேன். எப்படியோ ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்ததுபோல் தூய உள்ளத்தில் ஒரு துளி கறை பற்றிக் கொண்டது. அந்த உள்ளம் அரசனுடைய தாயிருந்தாலென்ன, அரசியினுடைய தாயிருந்தால் தான் என்ன? இனித் தான் முக்கியமான கட்டத்திற்கு வருகிறேம்.

அன்றைய இரவு, ஆகா! இதே மாதிரி தான் மிகவும் மனேகரமாக இருந்தது. உப்பரிகையின் மேல் மாடியில் சாளரத்தின் வழியாக நிலவுக் காற்று மலர்மணத்துடன் ஜம்மென்று அறையில் புகுந்த போது அது யாரையும் கவர்ந்ததாகத் தெரியவில்லை. மன்னன் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தான். அரசி அயர்ந்த படி பஞ்சணையில் படுத்திருந்தாள். ஒரு சிறு சத்தம் கேட்டது. அரசன் திரும்பிப் பார்த்தான். யார் அங்கே?

நண்பன் மாருதி!

உடம்பெல்லாம் கரும் கம்பளியால் மறைத்துக் கொண்டிருந்தான். ஆனலும் வெளிச்சத்தில் முகம் பளிச்சென்று தெரிந்தது. மன்னன் மனம் துணுக்குற்றது. நினைத்தது நிஜமோ என நெஞ்சம் கலங்கினன். கண்கள் அனலைச் சிந்த அரசியை நோக்கினன். திடுக்கிட்டு அவளும் எழுந்தாள். மாருதி ஒரு நிமிஷத்தில் தன் வேலையைத் தொடங்கினன். பின்னல் வந்த பத்து பனிரண்டு ஆட்கள் அரசனைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள். வேந்தன் சந்தேகம் தீருமுன் மாருதியின் கைவாள் அவன் தலையைப் பதம் பார்த்து விட்டது. துடிதுடித்துக் கொண்டு விழுந்தது அரசனது உடல். அரசி பதறிப்போய் விட்டாள், நிலை கலங்கி "ஹே! ராஜன்" என்ருள்.

அவள் வாயிலிருந்து தான் அந்த வார்த்தைகள் வந்தனவா அல்லது யாராவது, வனதேவதை, கந்தர்வ கன்னிகைகள் அவளுக்காகப் பேசினவா? மாருதியின் நெஞ்சத்தைத் தான் கேட்க வேண்டும்! வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்று சொல்லுகிருர்கள். அரசி சொல்லுகிருள்: "உன் நோக்கம் ஈடேறப் போவதில்லை." மேலும் அவள் என்னென்னவோ சொல்ல விரும்பினுள். அதற்குள் இரும்புச் சங்கிலிகள் அவள் கரத்தில் அணியப் பட்டு சிறைக்கூடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டாள். மாருதி கூடவே தன் மனக் கோட்டைகளை எடுத்துச் சொல்ல முயன்ருன்

அவள் ஒரு பயங்கரச் சிரிப்பைச் சிரித்தாள். "மண்ணிற்காகவும் பெண்ணிற்காகவும் மதி இழந்தாய் நீ. நண்பனை நய வஞ்சகமாக மலரை விட்டு மணத்தைப் பிரிப்பது போல என்னை விட்டுப் பிரித்து விட்டாய். உன் கனவு உருக்குலையப் போகிறது" என்று சொல்லிக் கொண்டே ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினாள்.

மேலே அமுதம் பொழிந்த அமுதனும் அஞ்சினான் போலும்! நிலவு மேகத்திரைக்குள் மறைந்தது. பதறிக் கொண்டிருந்த ராணியின் சொற்கள் இன்னும் என் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது: "இயற்கைத்தேவி! என் அழிவைக் கண்டு புன்னகை கொள்கிறாயா நீ. பெண்ணுக்குத் தீவினை செய்தவனைக் கண்டு இன்புறுகிறாயா நீ? நீ இருப்பது உண்மையானால் ஏ! காற்றே! வானமே! பெரு மழையே! கொட்டுங்கள்! கொட்டுங்கள், கொட்டுங்கள்." என்ன ஆச்சரியம்; என்ன அற்புதம்; மறு கணம் உலகமே அந்தகாரத்தில் ஆழ்ந்ததைப் போலிருந்தது. வெண்ணிலா எங்கே? விந்தை மணம் எங்கே? அந்த மாருதி எங்கே? எங்கள் அரசி தான் எங்கே?

அப்பனே இது இயற்கையின் கூற்று; புயலும் பெருமழையும் பேரிடியும் கோட்டையை மண்ணோடு மண்ணாக்கி விட்டன. மறு கணத்தில் ஆஸ்தான மண்டபம் அடியோடு உருக்குலைந்தது. நான் ஏதோ அரை உயிருடன் தப்பிப் பிழைத்தேன். இன்னும் கொஞ்சம் உள்ளத்தில் பசையிருப்பதால் இவ்வளவாவது சொல்ல முடிகிறது." ஸ்தூபி சொல்லிய கதை முடிந்தது.

நாங்கள் வீடு திரும்புகையில் ஒருவரோடொருவர் அதிகம் பேசவில்லை. ஞானிகள் சொல்லுகிற படி 'காண்பது மறையும். தோன்றுவது அழியும்' என்ற வார்த்தைகள் எங்கள் உள்ளங்களில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
19991
சென்னை-600 008



ஆசிரியர்
சரத்சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்.

சுரபாலாவின் தந்தை வியாபாரத்தில் நிறையச் சம்பாதித்து விட்டு இப்போது சுகமாக வீட்டில் காலங்கழித்து வந்தார். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள்; சுரபாலா மூத்தவள்; சசி இளையவள். இன்னும் சசிக்குக் கலியாணமாக வில்லை. அவள் பிறந்த ஊரில் சுரபாலாவைச் சனங்கள், 'பசுராஜ்' என்று அழைப்பார்கள். இது அவளுடைய தாத்தா வைத்த அன்புப் பெயர். தெருவில் திரியும், கூன் குருடுகள், நாய், பூனை, வெண் முயல், புரு முதலியவைகள் எல்லாம் இவளிடம் வளர்ந்து வந்தன. யாரையும் இவள் அநாதரவு செய்ததில்லை. இன்றும் அவள் சசியை வளர்த்திக் கொண்டு ஆனந்தமாக வாழ்ந்து வருகிறாள். சுரபாலாவின் பெயர் ரகசியம் மகேஸ்வரிக்குத் தெரியும். ஆகையால் இங்கும் அவள் பெயர் பிரசித்தி அடைந்து விட்டது. வயதிற்கு மூத்தவர்கள் 'பசு' என்றுதான் அழைப்பார்கள். வேலைக்காரிகள் 'பசுராஜ்' என்றோ, சின்ன மருமகள் என்றோ அழைத்து வந்தார்கள்.

சுரபாலா வீட்டுக் காரியங்களை எல்லாம் முடித்துக் கொண்டு இரவு படுக்கை அறைக்கு வந்ததும் உபேந்திரன், "பசு, உன் அப்பா, சசிக்கு ஒரு வரன் அவசியம் பார்க்கும்படி மறுபடியும் கடிதமெழுதியிருக்கிறார். உன்னை விட சசி எத்தனை வயது இளையவள் என்பது உனக்குத் தெரியுமா?" என்றான்.

"நன்றாகக் கேட்டீர்கள்! இது கூடவா தெரியாது? எனக்குப் பின் ஒரு பையன் பிறந்தான். அவன் ஒரு வருஷத்திலேயே போய் விட்டான். அதற்கப்புறம் சசி பிறந்தாள். அவள் என்னை விட ஆறு, ஏழு வயது இளையவள்"

"இந்தக் கணக்குப் படி அவளுக்கு பனிரண்டு, பதின்மூன்று வயதாகிறது."

"இருக்கும். உடம்புக்குச் சரியில்லாததால் கலியாணமாகாதிருந்தது. என்னைப் போல பெரிய பெரிய கையும் காலும் உடையவளாக இருந்தால் கஷ்டந்தான்."

உபேந்திரன் சிரித்துக் கொண்டு, "கஷ்டம் என்னத்திற்கு வருகிறது. உன் அப்பாவுக்குப் பணத்திற்கு ஒன்றும் குறைச்சலில்லையே. பணமிருந்தால் எல்லாக் காரியங்களும் சுலபத்தில்

முடிந்து விடுகிறது. உன் விஷயத்தில் நான் சிக்கிக்கொண்டது போல, சிக்கிக் கொள்வதற்கு உலகத்தில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் ''

"நீங்கள் அப்பா பணத்தைக் கண்டு தான் சிக்கிக் கொண்டீர்களா ?"

"உன் எதிரில் ஆமாம் என்று சொல்லப் போவதில்லை. இருந்தாலும் எப்படிப் பொய் பேசுவது?',

"நீங்கள் கூறுவது முழுப் பொய்."

"எப்படி ?"

"எப்படி என்ன ? பொய் பேசுவதற்கும் பிரமாணம் வேண்டுமா? இப்படிப் பேசுகிறவர், உண்மையில் நீங்கள் அப்பாவின் பணத்திற்கு ஆசைப்பட்டு வரவில்லை. அப்பாவிடம் பணமிருந்தாலும், இல்லாதிருந்தாலும் நீங்கள் வந்து தானிருப்பீர்கள். நான் எங்கே, யார் வீட்டில் பிறந்திருந்தாலும் நீங்கள் வந்திருப்பீர்கள். ஓஹோ, தெரிந்ததா ?''

உபேந்திரன் ரொம்பக் கம்பீரமாக, "கொஞ்சம் கொஞ்சம் தெரிந்தது. ஆனால் நீ வேறு சாதியில் பிறந்திருந்தால்?" என்றான்.

சுரபாலா கல கலவெனச் சிரித்துக் கொண்டு, "அடே! ரொம்ப அழகுதான் நீங்கள் பேசுவது! எங்கேயாவது பிராமணன் வீட்டில் பிறப்பவள், வேறு சாதி வீட்டில் பிறப்பாளா? இந்த மூளையைக் கொண்டுதான் வக்காலத்து வாங்குகிறீர்களா ?" என்றாள்.

"நீ கூறுவது என்னவோ உண்மைதான். இதனால் தான் எனது வக்காலத்து நன்கு நடைபெறுவதில்லை என்று தெரிகிறது."

சுரபாலா தான் பேசிய பேச்சுக்களால் மிகுந்த வருத்த மடைந்தாள். "நடைபெறாமல் என்ன, நன்கு நடைபெறும். கொஞ்ச நாளாகலாம். ஆமாம், இன்னொரு விஷயம். நீங்கள் எதற்காக அதிகக் கேசுகளுக்கு அலைய வேண்டும்?" பிறகு சிரித்துக் கொண்டு, "நாலு மணி வரையிலும் என் முன் ஆஜராகி வந்தால் ஒரு ஐந்நூறு ரூபாய்க்கு ஏற்பாடு செய்கிறேன். அப்பா மாதாமாதம் இரு நூற்றைம்பது ரூபாய் கொடுத்து வருகிறார். அதோடு இன்னும் இரு நூற்றைம்பது ரூபாய் வாங்கி விடுகிறேன்" என்றாள்.

"சரி, நான் சம்மதித்து விட்டேன். ஆனால் நான் என்ன செய்ய வேண்டும்? நாலு மணி வரையிலும் உன் எதிரில் நின்று கொண்டிருக்க வேண்டியது தானே ?"

"பின் வேறு என்ன ? ஆமாம், நின்று நின்று களைத்துப் போனால் பிறகு உட்காருவதற்கு உத்தரவு கிடைக்கும்."

"உட்கார்ந்து உட்கார்ந்து களைத்துப் போனால் தூங்குவதற்கு உத்தரவு கிடைக்குமா ?"

சுரபாலா புன்முறுவலுடன், "கிடைக்காது. தூங்க முடியாது. உட்கார்ந்து களைத்துப் போனால் மறுபடியும் நிற்க வேண்டும். எஜமானுக்கு கோபம் வந்தால் அபராதம் தான் கிடைக்கும்" என்றாள்.

"அபராதம் கொடுக்காவிட்டால் ?"

"சிறை வாசம் தான். நாலு மணிக்கு மேலும் வெளியே போக அனுமதி கிடைக்காது தெரியுமா ?"

"தெரிந்து கொண்டேன். எஜமான் குணத்தில் கொஞ்சம் கொடியவர் தான். ஆனால் வேலை

போகாதிருந்தால் கொண்டாட்டம் தான்.''

சூரபாலா தனது கோமளமான கரங்களால் அவனை அணைத்துக் கொண்டு, "எஜமான் கொடிய சுபாவம் உடையவரல்ல. வேலை போகாது. சந்தேகமிருந்தால் ஒரு நாளைக்காவது வேலை செய்து பாருங்களேன். இதில் என்ன தடை?'' பிறகு தன்னை விடுவித்துக் கொண்டு, "அப்பாவுக்கு, என்ன பதில் எழுதுவீர்கள்?'' என்றாள்.

"எங்கும் தேட வேண்டியதில்லை. மாப்பிள்ளை தானே வரும் என்று எழுதுவேன்.''

"ராம, ராம! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அவரிடம் விளையாடலாமா?''

"இந்நேர வரையிலும் என்னிடம் நீ விளையாட வில்லையா?''

சூரபாலா வெட்கத்துடன், "பாருங்கள், நான் வேடிக்கைக்குக் கூறவில்லை. அப்பாவுக்கு அப்படி எழுதாதீர்கள். சசிக்கு மாப்பிள்ளை தயாராக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் இல்லை. ஆனால் நீங்கள் இப்படி எழுதினால் அப்பா கோபித்துக் கொள்வார்'' என்றாள்.

உபேந்திரன் சிரித்துக்கொண்டு, "சசிக்கு மாப்பிள்ளை இருப்பது எனக்குக் கூடத் தெரியும். அவனை உனக்கும் தெரியும், எனக்கும் தெரியும்'' என்றான்.

"சரி, அவன் யார் சொல்லுங்கள் பார்ப்போம்?''

"இப்போது சொல்ல மாட்டேன். எல்லா விஷயங்களையும் முடிவு செய்து கொண்டு உன்னிடம் சொல்வேன்.''

சூரபாலா சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "சரி, ஒரு விஷயம் உங்களிடம் சொல்லி விடுகிறேன். சசியிடம் ஒரு குறை இருக்கிறது. அதை மறைத்துக் கொண்டு மாப்பிள்ளை தேடக் கூடாது. பின்னால் அது நன்மையை விளைவிக்காது'' என்றாள்.

"என்ன குறை?''

"சொல்கிறேன். அப்பா அதை மறைத்து வைக்க விரும்புவார் போலிருக்கிறது. இல்லாதிருந்தால் அவரே உங்களிடம் சொல்லியிருப்பார். சசி, பார்ப்பதற்கு நன்றாகத்தானிருக்கிறாள். அப்பாவிடமும் பணம் இருக்கிறது. என்ன, நீங்கள் சசியை நன்றாகப் பார்த்ததில்லையா?''

"பார்த்திருக்கிறேன். ஆனால் நன்றாகப் பார்ப்பதற்குத் துணிவு.........''

"உங்கள் காலைப் பிடிக்கிறேன். முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். பிறகு வாயில் வந்ததெல்லாம் பேசலாம். குழந்தையிலிருந்தே சசி ஒரு நோயாளி என்பது தங்களுக்குத் தெரியும். இரண்டு மூன்று தரம் செத்துப் பிழைத்திருக்கிறாள். ஒரு தரம் குணமாயிற்று, இருந்தாலும் இடது காலில் கட்டி புறப்பட்டு பழுத்து விட்டது. டாக்டர் அதை அறுத்துக் குணப்படுத்தி அவளைக் காப்பாற்றினர். இருந்தாலும் அந்தக் கால் சரியாக வில்லை. அப்போதிருந்து சிறிது நொண்டிக் கொண்டுதான் நடப்பாள். பெரியவளானால் அது சரிப்பட்டு விடும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் யார் அதை நம்பிக் கலியாணம் செய்ய வருவார்கள்? நல்ல மாப்பிள்ளைக்கு நல்ல பெண் கிடைத்து விடுகிறது. மனதறிந்து அவன் சசியைப் போன்ற பெண்ணைக்

கலியாணம் செய்து கொள்ள மாட்டான். பணத்தாசை பிடித்து கலியாணத்திற்குச் சம்மதிப்பவன் தகுதியற்றவனாகத் தானிருப்பான்.''

உபேந்திரன் கவனமாகக் கேட்டு விட்டு, "நான் அநேகம் தடவை சசியைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவள் நொண்டியதைப் பார்த்ததில்லை'' என்றான்.

"ஆண் பிள்ளைகள் கண்ணில் படாது. ஆனால் பெண்கள் கண்ணில் படாமல் போகாது. கண்மூடி முழிப்பதற்குள் குற்றத்தைக் கண்டு பிடித்து விடுவார்கள்.''

"பெண்கள் கண்ணைப் பற்றிப் பயப்படுவதற்கு, அவள் பெண்ணையா கட்டிக் கொள்ளப் போகிறாள்?''

"இதென்ன பேச்சு! ஏமாற்றிக் கலியாணம் செய்து கொடுப்பதானால் குருட்டுப் பெண்ணைக் கூட கட்டிக் கொடுத்து விடலாம். ஆனால் பின்னால்?''

உபேந்திரன் பேசாமல் என்னவோ யோசித்துக் கொண்டிருந்தான்.

"போன தடவை துர்க்கா பூஜையின் போது இங்கு இப்படித் தான் பேச்சு எழுந்தது. அத்தையும், அம்மாவும் கலியாணத்திற்கு முன் இந்த ஆலோசனைகளெல்லாம் வேண்டாமென்று சொல்லி விட்டார்கள். பின்னால் மாப்பிள்ளைக்குச் சொல்லிச் சரிப்படுத்தி விடலாம் என்றார்கள்.''

"நல்ல யோசனை.''

"நல்ல யோசனையா? இது சரியல்ல. மாமி, மன்னி முதலியவர்களைப் பொருட் படுத்தாமல், மாப்பிள்ளையைப் பொருட்படுத்துவது சரியல்ல. சசிக்குக் கணவனாக வருபவன் நிச்சயம் அவளை நேசிப்பான். ஆனால் இந்தச் சின்னக் குறை ஆரம்பத்திலேயே மாமியார் முதலிய வீட்டுப் பெண்கள் கண்ணைக் கரிக்கத் தொடங்கி விட்டால், பிறகு குடும்பத்தைச் சந்தோஷமாக நடத்திக் கொண்டு போக முடியாது. இந்த விஷயம் எனக்கு நன்கு தெரியும்.''

உபேந்திரன் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "மாமியார் முதலியவர்கள் இல்லாத வீடாகப் பார்த்து சசியைக் கலியாணம் செய்து கொடுக்கலாமென்று இருக்கிறாயா?'' என்றான்.

"ஐயையோ! இது ரொம்ப மோசம். நான் அப்படி விரும்புவேனா?''

"ஆனால் நீ விரும்புவது தான் என்ன? மாமியார் முதலியவர்கள் இருக்க வேண்டும்; தெரிந்தே நொண்டிப் பெண்ணைக் கட்டிக் கொள்ள வேண்டும்; பிரியமாகவும் இருக்கவேண்டும். அப்படியானால் ரொம்ப நல்லதாகப் போச்சு. ஆனால் நீயே சொல்லு; எந்த முட்டாளாவது தன் மகனுக்கு ஒரு அங்க ஹீனப் பெண்ணைக் கலியாணம் செய்து வைப்பானா?''

சுரபாலா பேசாமலிருந்தாள். சிறிது பொறுத்து மெதுவாக, "மாப்பிள்ளை பார்த்து வைத்திருக்கிறேன் என்று நீங்கள் தானே சொன்னீர்கள்?'' என்றாள்.

"ஆமாம்!''

"அவனுக்கு இந்த விஷயம் தெரியாதா?''

"தெரியாவிட்டாலும் ஒன்றும் கெடுதல் இல்லை.''

"கடைசியில் சண்டைக்கு நின்று கொண்டால்?''

"அப்படி ஒன்றும் நேராது. திவாகர் உனது தங்கையின் குறை

ஙயை அலட்சியம் செய்து விடுவான். நீயும் அக்காளும் சசியை நல்ல கண்ணோடு தான் பார்ப்பீர்கள்.''

இதைக் கேட்டு சுரபாலா திடுக்கிட்டாள். சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "அவனுக்கா கலியாணம் செய்து கொடுப்பது?'' என்றாள்.

"ஆமாம்.''

"ஆனால் அப்பா, சம்மதிக்க மாட்டார்.''

"ஏன்?''

"தாய் தந்தை கிடையாது, வீடு வாசல் கிடையாது, ஒன்றுமே கிடையாதே.''

"எல்லாமிருக்கிறது. எல்லாவற்றிற்கும் தான் நான் இருக்கிறேனே.''

"இருந்தாலும், அப்பா சம்மதிக்க மாட்டார்.''

"உனக்குச் சம்மதமில்லை என்று சொல்லு; அதுதானே உண்மை?''

சுரபாலா மௌனமாக இருந்தாள்.

உபேந்திரனும் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு மறுபடியும் திரும்பிப் படுத்துக் கொண்டு, "சரி, நேரமாகி விட்டது; இனித் தூங்கு'' என்றான்.

அன்று இரவு சுரபாலா ரொம்ப நேரம் வரையிலும் விழித்துக் கொண்டிருந்தாள். கணவன் நிச்சயமாகத் தெரிந்த பிறகு அவள் கண்களில் நீர் நிறைந்தது. கணவனது அன்பிலே அவளுக்குச் சந்தேகமில்லை. இருந்தாலும் ஏழு, எட்டு வருஷக் கூட்டுறவுக்குப் பின்னும் அவனைத் தெரிந்து கொள்ள வில்லையே! முதலில் அவனை முன் கோபக்காரன் என்று எண்ணி வந்தாள். எதைக் கண்டு கோபித்துக் கொள்வார் என்று சொல்லவே முடியாது.

இவரைப் பூராவாகத் தெரிந்து கொள்ள முடியுமோ முடியாதோ; ஆனால் இவர் சாதாரண மனிதக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல என்று தீர்மானித்தாள். இதனால் அவள் பயம் அதிகரித்தது. அவள் துக்கமடைந்த போதெல்லாம், "ஆண்டவா! இம்மாதிரி பாக்கியத்தைக் கொடுத்து விட்டுப் பின் அவர் மனதறிந்து நடந்து கொள்ளும் புத்தியை ஏன் கொடுக்கவில்லை?'' என்று கேட்பாள். இன்றும் அதைத் தான் நினைத்துக் கொண்டு யோசனை செய்து கொண்டிருந்தாள். ஒரு குற்றமும் காணமல் வேதனைப் பட்டாள். சகோதரியின் விஷயமாக இவ்விதம் எண்ணுவது எவ்விதத்தில் தப்பாகும் என்று அவளுக்குப் புலப்பட வில்லை.

குளிர்கால இரவு நீண்டு கொண்டே சென்றது. அவளைப் போலவே இரவைத் 'துண்டு துண்டாக்கு' வதற்காக தூரத்துக் கச்சேரியில் மணி வரிசைக் கிரமமாக அடிக்கத் தொடங்கியது.

(6)

அடுத்த நாள் மத்தியானம் மகேஸ்வரி சாப்பிடுவதற்கு உட்கார்ந்தாள். அப்போது உபேந்திரநாத் அங்கு வந்து அவளருகில் உட்கார்ந்தான். மகேஸ்வரி அவனைப் பார்த்ததும், "அம்மா, உட்காருவதற்கு ஏதாவது கொண்டு வந்து போடு'' என்றாள்.

உபேந்திரன், "ஒன்றும் வேண்டாம் அக்கா. உன்னிடம் ஒரு விஷயம் கேட்கலா மென்று வந்திருக்கிறேன்'' என்றான்.

விஷயத்தைத் தெரிவதற்காக அவள் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நேற்று சசிக்கு வரன் தேடும்படி மாமனாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவர்களைப் பற்றி உன்னைப் போல வேறு யாருக்கும் தெரியாது. ஆகையால் சசியின் தேகத்தில் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்று உன்னைக் கேட்டுப் போகலாமென்று வந்தேன்."

மகேஸ்வரியின் கணவன் தேகாரோக்கியத்திற்காக கடைசி காலத்தில்நாலைந்து வருஷம் பக்சரிலே தான் தொழில் செய்து கொண்டிருந்தார். அங்கிருந்தபோது சுரபாலாவின் தந்தை வீட்டில் தான் வாடகைக்கு இருந்தார்கள். அது அவர்கள் வீட்டுக்கு அருகாமையில் தானிருந்தது. இதனால் இரண்டு குடும்பங்களும் நெருங்கிப் பழகுவதற்கு சந்தர்ப்ப மேற்பட்டது. சுரபாலாவின் விவாக ஏற்பாடு செய்தவள் மகேஸ்வரி தான். மகேஸ்வரி சிறிது நேரம் உபேந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, "பசு, என்ன சொல்கிறாள்?" என்றாள்.

"அவள்— சசி நொண்டி என்று சொல்கிறாள்."

மகேஸ்வரி சிரித்துக் கொண்டு, "நொண்டியல்ல. குழந்தையாயிருக்கும் போது இடது காலில் ஆபரேஷன் செய்திருக்கிறார்கள். அதனால் அந்தக் காலைக் கொஞ்சம் ஊன்றி நடக்கிறாள். இதற்குள் அது கூடக் குணமாகி யிருக்குமென்று நினைக்கிறேன்" என்றாள்.

"வேறு ஒரு குறையும் கிடையாதா?"

"கிடையாது."

"மாமனாரிடம் நிறையச் சொத்து இருக்கிறதாம். உனக்குத் தெரியுமா அக்கா?"

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்."

உபேந்திரன் சற்று அவளருகில் நகர்ந்து உட்கார்ந்து மெதுவான குரலில், "அக்கா, உன்னிடம் ஒரு விஷயம் சொல்லுகிறேன் கேளு. பின்னால் இந்த இரண்டு பெண்களும் தான் சொத்துக்கு வார்சாக வரப்போகிறார்கள். நாம் இந்தச் சந்தர்ப்பத்தை கை நழுவ விடலாமா?" என்றான்.

மகேஸ்வரி சிரித்துக் கொண்டு, "ஆம், வாஸ்தவந்தான். இதற்கு வழி என்ன?" என்றாள்.

உபேந்திரனும் சிரித்துக் கொண்டு, "அக்கா, இது சும்மா சிரிக்கிற விஷயம் அல்ல. பசுவுக்குக் கோப மூட்டுவதற்காக இதை நான் சொல்ல வரவில்லை. நான் திவாகரைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டதும் அவளுடைய முகம் சுண்டிப்போய் விட்டது. திவாகர் அவளுக்கு வெறுப்பை யளித்தான். உபேந்திரன் அவளுடைய மனோபாவத்தை ஒருவாறு தெரிந்து கொண்டு, "சரி, சொல்லு; உனது அபிப்பிராயம் என்ன?" என்றான்.

மகேஸ்வரி யோசிப்பவள் போல தலையைக் கீழே குனிந்து கொண்டு சோற்றைப் பிசைந்து கொண்டிருந்தாள். பிறகு தலைநிமிர்ந்து சிரித்துக் கொண்டு, "நன்றாகத்தான் தெரிகிறது" என்றாள்.

"சரி, என்று சொல்லி விடுவதால் மட்டும் காரியமாகி விடாது, அக்கா! இந்தக் காரியம் உன்னால் தான் ஆகும். பசுவுக்கு கலியாணம் நீ தான் செய்து வைத்தாய்.

எல்லோரும் என்னைப் போலவே பாக்யவதியாக இருக்க வேண்டும் என்று இப்போது அவளே சொல்கிறாள். நீ மண்ணைத் தொட்டாலும் பொன்னாக விளையுமென்ற நம்பிக்கை எனக்குண்டு'' என்றான்.

மகேஸ்வரி கவலையுடன், "ஆனால் சசியிடம் உள்ள குறைபாட்டிற்கு என்ன செய்வது?'' என்றாள்.

"அந்தக் குறை பாட்டிற்காகத் தானே நீ வேண்டும் என்று சொல்லுகிறேன். உன்னுடைய புண்ணியத்தால் எல்லாக் குறைகளும் நிவர்த்தியாகி விடும்.''

உபேந்திரனுடைய பேச்சுக்களால் அவள் திருப்தியடைந்தாள். "உபேந்திரா, எனக்குத் திவாகர் குணம் பிடிக்க வில்லையே. நம்மைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அன்னியன் போலத்தான் எனக்குப் படுகிறது. அந்தச் சின்ன குறைக்காக அவன் கடைசியில் எங்கு அதிருப்திப் பட்டு விடுவானோ என்று பயமாயிருக்கிறது. இரண்டாவது, அவன் இந்தக் கலியாணத்திற்கு இணங்குவானா?'' என்றாள்.

"இணங்காமல்போவதற்குக் காரணம்? இந்த உலகத்தில் அவனுக்கு வேறு யாருமே கிடையாதே. தனக்குத்தானே எல்லாக் காரியங்களும் செய்யவேண்டி யிருக்கிறது. வேறு ஒருவழியும் இல்லாதவன் இதைக் கை விடுவது பைத்தியக்காரத்தனம் மாத்திரம் அல்ல; பாபமுமாகும்.''

மகேஸ்வரி சிரிக்கத் தொடங்கினாள். "உனக்கு நீயே வக்காலத்து வாங்கிக் கொண்டு பணத்தை அடைவது உனது தொழில் முறைக்கு அழகல்ல. நாலு பேருக்கு முன்னால் போக வேண்டாம்! இஷ்டப்படுவது வேறு ஒன்றிருக்கிறதல்லவா?'' என்றாள்.

"இருக்கட்டுமே. இந்த விஷயத்தைத் திரித்துக் கூறிக் கொண்டு அலைபவர்கள் அலையட்டும். நாம் இஷ்டப் படுகிறோமா இல்லையா என்பது தானே விஷயம்? அதைத் தவிர்த்து சசியைப் பிடிக்காதவனுக்குக் கலியாணம் செய்து வைக்க முடியுமா?''

உபேந்திரனுடைய கவலை மகேஸ்வரிக்கு ஆச்சரியமாக இருந்தது. "இன்று அவன் காலேஜுக்குப் போகவில்லைப் போலிருக்கிறது. அவன் அபிப்பிராயம் என்னவென்று ஒருதரம் கேட்டுப் பார்? அவன் அறையில் தானிருக்கிறான்'' என்றாள்.

"இருக்கிறானா? அடே, புத்து! திபுபாபுவை அக்கா கூப்பிடுகிறாளென்று கூட்டி வா.''

திவாகர் வந்தவுடன் உபேந்திரன், "திபு, உன் விவாகம் நிச்சயமாகி விட்டது. பரிட்சை முடிந்ததும் நாள் பார்த்து விடலாம். அக்கா! பண்டிதரைக் கூப்பிட்டு நாள் பார்க்கச் சொல்லு; அதோடு அப்பாவையும் ஒரு பேச்சுக் கேட்டு விடு. சசிதான் கலியாணப் பெண் என்று கேட்டால் அவர் ரொம்ப சந்தோஷமடைவார். நீ என்டா முகத்தை 'உம்' மென வைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்கிறாய்? உனது சிறிய மன்னி தங்கை சசிதான். அவளைப் பார்த்திருக்கிறாயா? இல்லையா? பார்த்ததில்லை! அது சரி, அவளைப் பார்க்கக்கூட வேண்டிய தில்லை. அந்தப் பெண்ணைப் பழிப்பவனுக்குக் கலியாணமே ஆகாது என்று இப்போது அக்காளிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். குழந்தையில் என்னவோ கட்டி வந்ததைக் கீறியதால் இடது காலைக் கொஞ்சம் ஊன்றி நடக்கிறாள். இந்தத் துளியுண்டு குறையை நம்மைச் சேர்ந்த திவாகர் ஏற்றுக் கொள்ளாமல் யார் ஏற்றுக்

கொள்ளப் போகிறார்கள் என்று இப்போது அக்காளிடம் சொல்லலாமென்றிருந்தேன். இதைத் தவிர இத்தனையுண்டு அத்தனையுண்டு குறைகளை எல்லாம் கவனிப்பது உயர்தரப் படிப்புக்கு அழகல்ல. அது ரொம்ப அற்பத்தனம். உலகத்திலே எந்த வஸ்துவும் குற்றங் குறையின்றிக் கிடைப்பதில்லை. அதை நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது பைத்தியக்காரத்தனம். திபுவுக்கு இது தெரியும். அக்கா, உன்னிடம் வேறு என்ன சொல்வது? திவாகருக்கும் சசிக்கும் கலியாணமென்று கேட்டால் சுரபாலா அளவு கடந்த மகிழ்ச்சி அடைவாள். உனக்கு ஏதாவது வேறு வேலையிருக்கிறதா திபு? சரி, நீ போ, நான் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதி விடுகிறேன்'' என்று உபேந்திரன் கூறிவிட்டு அவனைச் சம்மதிக்கச் செய்யும்படி மகேஸ்வரியிடம் கண்ணால் சைகை செய்து விட்டுப் போய் விட்டான்.

மகேஸ்வரி கீழே குனிந்து கொண்டே எழுந்திருக்க முயன்றாள். திவாகர் ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்தான். புயல் எழுந்து சகலத்தையும் அடித்துக் கொண்டு போவது போல் உபேந்திரனும் தடைகளையும் தடுங்கல்களையும் தன் இச்சைப்படி அடித்துக் கொண்டு போய் விட்டான். இருவரும் மௌனமாக இதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தார்கள். ரொம்ப நேர வரையிலும் யாருமே பேசவில்லை. பிறகு திவாகர் மெதுவாக, "அக்கா, இதென்ன சங்கதி?'' என்றான்.

மகேஸ்வரி அவனைத் திரும்பிப் பாராமலே "எல்லாவற்றையும் தான் கேட்டுக் கொண்டிருந்தாயே!'' என்றாள்.

"இவ்வளவு அவசரம் என்ன?''

"சசிக்குக் கலியாண வயதும் வந்து விட்டது. அடுத்த வருஷம் நல்ல முகூர்த்தமே கிடையாதாம்.''

இதற்கப்புறம் திவாகருக்கு வேறு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. 'இப்போது உபேந்திரன் கடிதம் எழுதிக் கொண்டிருப்பான். இன்னும் சிறிது நேரத்தில் இந்த முக்கியமான கடிதத்தை யாரோ ஒரு வேலைக்காரன் தபால் ஆபீசுக்குத் தூக்கிக்கொண்டு ஓடுவான்' என்று நினைத்தான். அவன் எப்போதும் கலியாணம் செய்து கொள்வதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டிருந்தான். இந்த சங்கல்பம் ஒரு நொடியில் வீணாகி விடுவதா என்று நினைக்கவும் அவன் மனம் வேதனைப் பட்டது. உடனே அவன் உபேந்திரன் அறைக்குச் சென்றான். அறைக்குள் நுழைந்ததும் சுரபாலா தனது கவலையடைந்த முகத்தின் மேல் முக்காட்டைப் போட்டுக் கொண்டு அலமாரிப் பக்கம் ஒதுங்கினாள்.

உபேந்திரநாத் பேனைக் காகிதத்தோடு மேசை எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவன் தலையை உயர்த்தி, "என்ன?'' என்றான்.

திவாகர் ஏதோ சொல்ல வந்ததை நன்கு யோசித்துக் கொண்டும் வரவில்லை. அதோடு அலமாரிக் கருகில் சேலைத் தலைப்பும் தெரிந்தது. அவன் பேசாமல் நின்று கொண்டான்.

"ஏனப்பா, என்ன?'' என்றான் உபேந்திரன். திவாகர் ஒன்றும் பேசவில்லை. அவன் பார்வை அலமாரிக் கருகில் சென்றது. உபேந்திரன் அதை அறிந்தும் கூட அறியாதவன் போல, "திபு! சொல்ல வேண்டியதை உடனே சொல்லி விடு'' என்றான்.

திவாகர் அருகில் வந்து மெதுவாக, "இதற்கு இத்தனை அவசரம் என்ன வந்தது?" என்றான்.

"இல்லையே; அவசரம் ஒன்றுமில்லையே! இன்னும் குறைந்தது இரண்டு மாத மிருக்கின்றது. உன்னுடைய பரிட்சை முடிந்த பிறகு..........."

"அப்படியானால் இன்றைக்கே ஏன் கடிதம் எழுத வேண்டும்? கொஞ்ச நாளைக் கப்புறம் எழுதினால் போகிறது."

"அப்படியும் எழுதலாம். ஆனால் கொஞ்ச நாள் கழித்து எழுதுவதால் ஏதாவது லாபமிருக்கிறதா சொல்லு?"

திவாகர் மெதுவாக, "ஆர அமர யோசனை செய்து ஒரு காரியம் செய்வது நல்லது" என்றான்.

"அதற்கென்ன சந்தேகம்? ஆனால் நீ விவாக விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தால், பரிட்சையைப் பற்றி யார் நானா யோசித்துக் கொண்டிருப்பது?"

"இவ்வளவு பெரிய பொறுப்பையும் ஏற்பதற்கு முன்னால் ...."

"புத்திசாலியைப் போல ஏதாவது பேச வேண்டு மென்று நினைக்கிறாயா? சரி, அந்த நாற்காலியில் உட்காரு. என்ன யோசிக்க வேண்டு மென்கிறாய், சொல்லு கேட்கிறேன்?"

திவாகருக்கு என்ன கூறுவது என்று தெரியவில்லை.

"திவாகர், இங்கே பாரு! எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, முடிவு வரையிலும் யோசனை செய்து பார்ப்ப தென்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். யார் எவ்வளவு பெரிய புத்திமானாக இருந்தாலும் கடைசி முடிவு ஆண்டவன் கையில் தானிருக்கிறது. முதலில் யோசனை செய்து பார்த்த தெல்லாம் வீண் எனத் தெரிகிறது. நீ எதற்காகக் கொஞ்ச நாள் வேண்டு மென்கிறாய்?"

திவாகர் தலை நிமிர்ந்து, "எல்லோராலும் இவ்வளவு சீக்கிரமாக யோசிக்க முடியுமா?" என்றான்.

"யோசிக்க முடியும். ஆனால் யோசிப்பது போல பாவனை செய்வதற்கு முடிவே ஏற்படாது என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும். நாலைந்து நாளைய விஷயத்தை நாலைந்து வருஷமானால் கூட யோசித்து முடிகட்ட முடியாதே. ஆனால் இந்த விஷயத்தில் சனங்கள் மேலெழுந்த வாரியாக யோசிப்ப தென்ன? காப்பாற்ற முடியுமா, முடியாதா என்பது தான். ஆனால் சசியை கலியாணம் செய்து கொண்டால் நீ இதைப் பற்றி யோசிக்க வேண்டியதே இல்லை. அடுத்தது பெண் அழகைப் பற்றியது. ஆனால் அதைப் பற்றி யாராலும் வர்ணிக்க முடியாது. என்ன, நீ இவைகளைத் தானே யோசிக்கிறாய்?"

சசியின் அழகைப் பற்றிக் குறிப்பிட்டதால் திவாகர் வெட்கமடைந்தான். அவன் உடனே, "இல்லை, இல்லை; அதெல்லாமில்லை" என்றான்.

"அப்படியானால் ரொம்ப சரி: இந்தக் கேள்வி எவ்வளவு சாரமற்றதாகப் பட்டாலும் கேட்காமல் விட்டு விடக்கூடாது. இந்த அழகு விஷயம் இருக்கிறதே இதை ஆரம்பத்திலே முடிவு செய்து விடவேண்டும். இது மனிதனை உள்ளும் புறமும் மாற்றி விடும். அவளைப் பற்றி ஒருவித முடிவுக்கு வருவதற்கு இதுதான் அளவுகோல்" என்றான்.

(தொடரும்)

என்ன கடிதம்

"ராணி"

ராதாவும், மீனாட்சியும் ரொம்ப ரசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வீட்டு வேலைக்காரி, சமையல் அறையிலிருந்து நாலைந்து தடவை எஜமானியோடு பேசுவதற்காக வந்து எட்டிப் பார்த்தாள். ஆனால் ராதா கண் எடுத்தும் பார்க்கவில்லை. மீனாட்சி அப்படி ஒன்றும் ராதாவுக்கு புதியவள் அல்ல. எதிர் வீட்டுப் பெண் தான். இருந்தாலும் அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த நட்பானது இந்த உலகத்தையே மறந்து அவர்களுடைய தனி உலகில் சஞ்சரிக்கும் படி செய்தது. அவர்கள் அப்படி என்னதான் பேசுவார்களோ? காரில் போகும் பெண்கள் தலைக்குப் பூ வைத்துக் கொள்வதிலிருந்து புதுப் புடவை, நவீன நகை (நடை) முதலியவைகளைப் பற்றி இருவரும் ஒரே வித அபிப்பிராயம் வைத்திருந்தார்கள். இப்படி ஒற்றுமை இருந்தும் இவர்கள் 'சள சள' வென்று பேசிக் கொண்டிருப்பது மட்டும் ஓய்வதாயில்லை. அதுவும் இன்றைக்கு அவர்கள் தங்களுடைய சிங்காரிப்புகளைப் பற்றியே இடைவிடாது பேசிக் கொண்டிருந்தார்கள். ராதாவின் முகத்தில் புன்னகை விளையாடிக் கொண்டிருந்தது. மீனாட்சியின் முகத்திலும் அப்படியே தான்.

வெளியே ஒரு ஆள் வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் சலித்துப் போய் விட்டது. கடைசியாய் கதவை மெதுவாகத் தட்டிப் பார்த்தான். சத்தத்தைக் காணோம். பிறகு இன்னும் கொஞ்சம் சத்தமாகத் தட்டிப் பார்த்தான். அதற்கும் பதில் இல்லாததால், கொஞ்சம் பலமாகவே கதவை இடிக்கலானான்! ஆனால் ராதா இந்த ஆசாமியைக் கவனிக்காமல் இல்லை! பார்க்கத்தான் பார்த்தாள். அவன் கதவருகே வரும்போதே பார்த்து விட்டாள். ஆனால் அவனைக் கண்டதுமே என்னவோ போல இருந்தது. இத்தனைக்கும் அவன் பாவம் ஒரு சாது போலத் தான் இருந்தான். ஆனால் என்னவோ முதல் பார்வையிலேயே அந்த ஆசாமியிடம் அவளுக்கு ஒருவிதமான அசிரத்தை எண்ணம், கதவைத்திறக்கக் கூடாது நிற்கட்டுமே, பிறகு சாவகாசமாகக் கேட்டுக் கொள்ளலாம் என்றெல்லாம் எண்ணி விட்டாள். அது தவிர, அவளுடைய கணவன் சீக்கிரம் வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்தான். கணவன்தான் வந்து விட்டானே என்று காலடி ஓசை கேட்டுப் பார்க்கையில் இந்த ஆசாமியின் முகம் தெரிந்ததால், சற்று, வெறுப்பு

மாதிரி அபிப்பிராயம் என்றே சொல்லி விடலாம், அவனிடம் அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

ராதாவும். மீனாட்சியும் தங்கள் பேச்சிலேயே மூழ்கியிருந்தார்கள். அன்று மாலை சிநேகிதைகளை வேறு அழைத்திருந்தார்கள். வருகிறவர்கள் என்ன மாதிரி அலங்கரித்துக் கொண்டு வருவார்கள், தாங்கள் எப்படி வரவேற்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரேயடியாகச் சிந்தனையில் மூழ்கி விட்டார்கள்.

"ராதா, கொஞ்சம் நம்ம கமலத்துக்கு 'டெலிபோன்' செய்யேன். அவள் வீட்டுக்காரன் பட்டணத்திலிருந்து யிலிருந்து அஞ்சாறு சிநேகிதைகளுக்கு 'போன்' செய்ய வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறேன். டெலிபோன் தான் கெட்டுப் போய் இருக்கிறதே. இதை 'ரிப்பேர்' பண்ண வேண்டும். அவர் வரும்போது 'ரிப்பேர்' காரனையும் கூட்டிக் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார். இதோ வந்து விடுவார். நீயும் சாப்பிட்டு விட்டே போய்விடலாம்" என்றாள் ராதா.

மீனாட்சி சிரித்துக் கொண்டே, "சரி, நீதான் என்னோடு வாயேன். எங்கள் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு விட்டு வந்துவிடலாம்" என்றாள். அந்தச் சமயம் ஏதோ இருமல் சத்தம் கேட்கவே தன் கண

ஒரு குங்குமக் கலர் புடவை வாங்கிக் கொண்டு வருதாக அவள் சொல்லியிருந்தாளே என்றாள் மீனாட்சி.

ராதாவின் முகம் இன்னும் கொஞ்சம் சிவந்தது. "காலை வன்தான் வந்து விட்டானோ என்று ராதா எழுந்து பார்த்தாள். ஆனால் அந்த 'அசடு' தான் நின்று கொண்டிருந்தான். 'சை' என்று முனகிக் கொண்டு சோர்வோடு ராதா உட்கார்ந்தாள். வேலைக்காரி

ஏதோ கேட்க வந்தவள், இருவரும் மீண்டும் பேச்சு உலகில் ஆழ்ந்து விட்டதைக் கண்டு அப்படியே மெய்மறந்து ஆச்சரியத்தில் மூழ்கியவளாய் "இந்தப் பேச்சுக்கு முடிவில்லையா?" என்று நினைத்தபடி நின்று விட்டாள். வேலைக்காரியின் முகம் வெளியே நிற்கிற ஆளுக்குத் தெரிந்தது. அவள் கண் எடுத்துப் பார்க்க மாட்டாளா என்று அவன் நினைத்துக் கொண்டு பார்க்கையிலே இவளும் பார்த்தாள். "இங்கே வா" என்பதற்கு அடையாளமாக கை காட்டினுன். பாவம், அந்த மனிதன் முகத்தோற்றத்திலிருந்து அவன் சைகை பண்ணுவதற்கு 'செவி' சாய்த்தே தீர வேண்டும் என்று பட்டு விட்டது அவளுக்கு. வெளியே வந்தாள். அவன் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு "இந்த வீட்டிலே யாருமே இல்லையா?" என்ருன். 'கலகல' வென்று பேச் சொலியும், சிரிப்பொலியும் உள்ளேயிருந்து கணீரென்று வந்தது.

"என்ன, சுத்தமாக ஒன்றும் தெரியாதவர்களாக இருக்காங்களே" என்ருன் அவன். ராதா மீனுட்சி இருவர் காதிலும் அந்தப் பேச்சு நன்ருக விழுந்தது.

"என்ன நமக்கா ஒன்றும் தெரியாது! சுத்த அசடு" என்றே இருவரும் முடிவுக்கு வந்தார்கள். இந்த அப்பாவிக்கு நாம் ரொம்பப் படித்தவர்கள் என்பதைக் காட்ட வேண்டாமா? இருவர் மனசும் வேலை செய்தது. உடனே ராதா ரேடியோவைத் திருப்பினுள். மீனுட்சி ஆங்கிலப் பத்திரிகையை உரக்கப் படிக்க ஆரம்பித்தாள். ராதா ரேடியோ வைத்து விட்டு அது பற்றி விமர்சனமும் செய்ய ஆரம்பித்தாள். இன்னும் அந்த ஆசாமிக்கு நம்மைப் பற்றித் தெரியாது தான் போலிருக்கிறது. வெளியே ஒரு கண் பார்த்தபடியே டெலிபோனை எடுத்தாள். இது 'ரிப்பேர்' பண்ணுது கெட்டுக் கிடந்தால்தான் என்ன? "ஹலோ இது செவன் எய்ட்டா? ஓ! டாக்டரா? குட்மார்னிங் சார். சார் உங்க வீட்டிலே மிஸ் கமலம் இருந்தா நான் டெலிபோன்லே கூப்பிடுகிறதா சொல்லுங்கோ......" இன்னும் மளமள வென்று பேசிக் கொண்டே போனுள்.

இந்த கலாட்டாவைக் கண்டு வெளியே நின்ற ஆசாமி அலண்டு விட்டான் போல இருக்கிறது. பக்கத்திலிருந்த வேலைக்காரியிடம் ஒரு சிறு துண்டுக் கடிதத்தை எழுதிக் கொடுத்து விட்டு மெதுவாக அங்கிருந்து நழுவி விட்டான். வேலைக்காரி உள்ளே வந்தாள். அந்த ஆசாமி நடந்து போவதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, அந்தத் துண்டுக் கடிதத்தை வாங்கி ராதா உரக்கப் படித்தாள்.

"அம்மா, உங்கள் வீட்டு டெலிபோன் ரிப்பேர் பண்ணத்தான் வந்தேன். அது சரியாயிருக்கக்கண்டு திரும்பி போகிறேன்."

மீனுட்சியின் முகத்திலும் சேர்ந்து அசடு வழிந்தது!

ஜகன்மோகினி

[தி. நா. சுப்பிரமணியன்]

அவன் தன் காதுகளையே நம்ப வில்லை. ஒருகால் தான் கனவு காண்கிருனே என்று கொஞ்ச நேரம் திகைத்தான். ஆனுல் அது இல்லை. தன் சுய உணர்வோடு தான் இருந்தான் என்பதை அவன் நன்கு அறிந்து கொண்டான்.

நிசப்தமான அந்த இரவில் அவளது குரல் கணீர் என்று கேட்டது. அவள் கானத்திலே அலாதியான வசீகரம் ஒன்று இருந்தது. அது எங்கே தன்னை ஆட்கொண்டு விடுமோ என்றே அவன் பயந்தான். அதனுல் அவன் தன் உணர்ச்சிகளை வெளியிடாமல், மனத்தைக் கட்டுப்படுத்தி, ஒரு வழியில் நிலை நிறுத்தி அவள் பாடுவதைக் கேட்காமல் இருக்க முயன்ருன்.

அது சுலபமான காரியம் அல்ல. அந்தப் பாழும் உள்ளம் திரும்பத் திரும்ப அவள் கானத்தையே நாடிச் சென்றது. அவன் மன அமைதியை இழந்தான்.

அந்த நிலையில் அவன் உள்ளே செல்ல விரும்ப வில்லை. அவனுக்குத் தன் மீதே நம்பிக்கை போய் விட்டது. பிறர் படும் துயரத்தைக் கண்டு பொறுக்காத மனம் படைத்த அவன், எங்கே தன் கடமையினின்றும், முன்னர் செய்து கொண்ட உறுதியினின்றும் தளர்ந்து உயிருக்கே அபாயத்தை விளைவித்துக் கொண்டு விடுவோமோ என்றும் பயந்தான்.

கால்கள் முன்னே இழுக்க உள்ளம் பின்னே இழுக்க அவன் என்ன செய்வது என்பதை யறியாமல் தத்தளித்து நின்ருன். எவ்வளவு நேரம் தான் அவ்விதம் இருந்தான் என்பது அவனுக்கே தெரியாது. ஆனுல் அவன் சிந்தனை கலைந்த போது தான் ஜகன்மோகினியைத் தேடி உள்ளே சென்று கொண்டிருப்பதை உணர்ந்தான். கால்கள் தாமாகவே அவனை உள்ளே இழுத்துச் சென்றன.

அவன் ஜகன்மோகினியைப் பார்க்க விரும்ப வில்லை. அப்படியே ஒரு வேளை தான் அவளைக் காண நேரிட்டாலும், தன்னை அவளிடம் காட்டிக் கொள்ள அவன் இஷ்டப்பட வில்லை. அதனுல் அவன் உள்ளே செல்லும் போது மெல்ல அடிமேல் அடி வைத்துப் பூனைபோல சந்தடி செய்யாமல் நடந்தான். அவனுடைய சுபாவமான வீர நடை மறைந்து விட்டது.

மாளிகையின் உட்புறத்திலே விசாலமான முன் அறையில் அவன் கண்ட காட்சியோ அவனைத் திடுக்கிடச் செய்தது.

எங்கும் இருள் சூழ்ந்த அந்த நள்ளிரவில் அவ்வறை ஒரு தனி சோபையுடன் விளங்கியது. எரிந்து கொண்டிருந்த நெய் விளக்கு மங்கலாகவே இருந்தாலும், அறைக்கு நல்ல பிரகாசத்தைக் கொடுத்து வந்தது.

பூரி க்ஷேத்திரத்திலே கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஜகந்நாதப் பெருமாளுடைய திருவுருவத்தைப் பூஜித்து வழிபட்டு நின்ருள் அவள்.—சுற்றிலும் நடப்பவற்றை அறியாத அவள் கரம் குவித்துக் கண்களை மூடி, எதிரில் எழுந்தருளியிருந்த எம்பெருமான் திருமேனியை உள்ளத்தில் நிறுத்தி

ஏகாக்கிர சிந்தையுடன் தியானித்துத் தன் வேண்டுகோளை முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுடைய தோற்றத்தைக் கண்டு அவன் பிரமித்து விட்டான். அவன் அவளைப் பார்த்து நீண்ட காலம் ஆகி விட்டது, உண்மைதான். ஆயினும் அவளை அவன் எப்படி மறக்க முடியும்? ஆனால் இப்போதோ தான் யாரையோ பார்ப்பதாகவே அவன் நினைத்தான்.

ஒரு காலத்தில், தளதளவென்று சரீரசம்பத்துடன் உண்மை ஜகன் மோகினியாகவே விளங்கிய அவள் இப்போது உடல் மெலிந்து சந்நியாசினி போலக் காணப் பட்டாள். அவள் தன் மேனியில் நகைகள் ஒன்றும் இல்லாமல் ஒரு சாதாரணப் புடவையையே உடுத்திருந்தாள். வெளேரென்று அவள் வெளுத்திருந்தாலும் முகத்தில் மட்டும் அலாதியான பிரகாசம், தேஜஸ் தாண்டவம் ஆடியது.

முன் ஒரு சமயம் ஜகன்மோகினி தன் உடைவாளால் அவனைக் குத்திக் கொல்ல இருந்தாள். ஆனால் அவளே இப்போது அவனுக்கு நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், கிடைத்தற்கரிய வெற்றியையும் அருளுமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறாள் என்றால் அதைக் கிருஷ்ணதேவன் எவ்விதம் கொள்வான்? 'என்னே உலக சிருஷ்டியின் மாயை' என்று வியந்து நின்றான்.

* * *

கிருஷ்ணதேவன் கைப் பிடித்து மணந்து கொண்ட தேவியே ஜகன் மோகினி. ஆனால் அவர்கள் ஒரு நாள் கூடச் சேர்ந்து இல்லறம் நடத்தவில்லை. அவன் அவளைத் தன் முழுமனதுடன் வெறுத்து வந்தான், அவள் முகாலோபனமும் செய்வதில்லை என்ற திட சங்கல்பத்தோடு இருந்தான்.

பெண் உருக்கொண்டு உலகத்தில் நடமாடும் பேய் என்றே அவன் அவளை மதித்து வந்தான். இல்லா விட்டால் எந்தப் பெண்ணும் செய்வதற்குக் கனவிலும் கருதாத குற்றத்தைச் செய்து முடிக்க அவள் துணிவாளா? கல்யாண தினத்தன்று, தன் புருஷனையே குத்திக் கொல்ல விருந்த அவளை அவன் எவ்விதம் கொள்வது!

அவளுடைய பாதகச் செயலைக் கண்டு உலகம் தூற்றாது இருப்பதற்காகவே பிரமன், யாவரும் கண்டு மயங்கக் கூடிய அழகை அவளுக்குக் கொடுத்திருந்தான் போலும்.

அவள் உயிரோடிருப்பது அரச குலத்துக்கே இழைக்கப்பட்ட அவமதிப்பும் அநீதியும் ஆகும். கைப் பிடியாகப் பிடித்த அவளை அப்பொழுதே கொன்றிருக்க வேண்டும். அவனும் அதைச் செய்வதற்காகவே தன் உடைவாளை உருவி விட்டான்.

ஆனால் மஹா மந்திரியான சாளுவதிம்மாஜி (அப்பாஜி) அவனைத் தடுத்து விட்டார்.

"சக்ரவர்த்தி, என்ன காரியம் செய்யப் பார்க்கிறீர்கள்? தாங்கள் மேற்கொண்டுள்ள தர்மத்திற்கு இது ஒழுங்காகுமா? ராஜகுமாரியான ஜகன்மோகினி தங்கள் தேவியார். தவிர, ஒரு பெண். அவள் என்னதான் கொடிய தீங்கிழைத்தாலும், உலகம் அதை மறந்து விடும்; ஆனால் தாங்கள் செய்யப் போகும் காரியத்தை ஒரு நாளும் மறக்காது: அபலையான ஒரு பெண்ணை, அதுவும் தங்கள் தேவியைக் கல்யாண தினத் தன்றைக்கே கொன்ற மகா பாபி என்று தங்களை ஆயுள் உள்ள

வரையிலும், ஏன் அதற்கப்பாலும், தூற்றும். இது ஒன்றை மட்டும் செய்ய வேண்டாம்.''

இவ்விதம் அப்பாஜி மிக்கப் பணிவுடன் கூறினரே யாயினும் அவர் குரலில் நடுக்கமோ, தயக்கமோ காணவில்லை. சற்றே திடமான குரலில் அவருடைய தீர்மானம் தொனிக்கும் விதமாகவே சொன்னர். தாம் கூறுவதைக் கேட்காமல் சக்கரவர்த்தி நடந்தால், தம் உயிரைக் கொடுத்தாகிலும் அதைத் தடுப்பதற்கு அவர் தயாராக இருந்தார் என்பதை எடுத்துக் காட்டியது அவர் குரல்.

கிருஷ்ணதேவன் அப்பாஜியை நன்ருக அறிவான். அவனை எடுத்து வளர்த்தவரும் அவரே. அவன் அப்போது வகித்து வந்த சக்ரவர்த்திப் பதவியும் அவர் அளித்ததே. தவிர முன்பின் யோசியாமலும், தக்க காரணம் இல்லாமலும் அவர் ஒன்றையும் செய்யத் துணியமாட்டார். அதனுல் கிருஷ்ணதேவன் வாய் பேசாமல் அவர் இஷ்டப்படியே ஜகன்மோகினியை விடுவித்து விட்டான்.

படபடப்பு நீங்கி மனத்திலே கொஞ்சம் அமைதி ஏற்பட்ட பிறகு யோசித்துப் பார்த்தபோது அப்பாஜி கூறியது நிரம்பவும் சரி என்றே பட்டது அவனுக்கு. ஆனுல் குற்றவாளிக்கு ஏற்ற தண்டனை வழங்காமல் விட்டு விடலாமா?

தர்மசங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொண்டான் அரசன். அவள் தன் புருஷனைக் கொல்ல முயற்சித்தாள் என்ற சாதாரணக் குற்றமுமில்லாமல் அது மகத்தான ராஜத்துரோகமும் ஆகும். ஆனுல் அவள் ஒரு பெண் என்பதைத் தவிர, சக்ரவர்த்தியின் தேவியும் ஆவள். அவளுக்கு ஏற்ற தண்டனை எது. அதை எப்படி விதிப்பது என்பவற்றை அறியாமல் திகைத்தான் அவன்.

அந்தச் சிடுக்கையும் அப்பாஜியே நீக்கி வைத்தார். "அவள் தன் புருஷனைக் கொல்ல முயற்சித்தாளே யாயினும் அவளுடைய புருஷன் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிருன். அவள் புருஷனைக் கொன்ற பிறகு என்ன செய்ய நினைத்திருந்தாள் என்பதை நாம் அறியோம். ஒருகால் அவளும் தற்கொலை செய்து கொள்ள இருந்திருக்கலாம். அவ்விதம் இல்லாவிட்டால், யாவரும் ஏச, நடைபிணமாக விதவைக் கோலத்தோடுதானே உயிர் வாழ வேண்டும். அத்தகைய வாழ்க்கையையே ஏன் நாம் அவளுக்கு அளிக்கலாகாது?''

அப்பாஜி உரைத்ததைக் கிருஷ்ணதேவனும் ஒருவிதத்தில் ஆமோதித்தான். ஆனுல் அவனுக்கு வேருெரு கவலை ஏற்பட்டு விட்டது.

இந்த நிகழ்ச்சி, அதிலே சம்பந்தப்பட்ட மூவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இதைப் பகிரங்கப் படுத்த விரும்பவில்லை அவன். வெளியில் தெரிந்தால் வெட்கக் கேடு. அதனுல் அவன் அந்தச் சம்பவத்தைத் தங்களுக்குள்ளேயே புதைத்து விடத் தீர்மானித்தான். ஆனுல் ஊர்வாயை மூடிவைக்க முடியாது. காலச் சக்கரம் சுழலும்போது எங்கெங்கோ புதைந்து கிடப்பனவும் வெளிப்பட்டு விடும்.

* * *

இந்தச் சம்பந்தத்துக்கு ஆரம்ப முதலே தகராறு. இரு தரத்தாரும் முழுமனதுடன் அதை விரும்பவில்லை. கிருஷ்ணதேவன் வேண்டா வெறுப்பாகவே இருந்

தான். பெண் வீட்டாரோ அதற்குச் சம்மதிக்கவேயில்லை.

ஜகன்மோகினி ஒட்ட தேசத்து அரசனான பிரதாபருத்திரன் புதல்வி. பூரிக்ஷேத்திரத்தில் எம்பெருமான் தேருக்கு முன்னால் தோட்டியாக வீதியைச் சுத்தம் செய்யும் காலத்திலே கஜபதி மன்னனான புருஷோத்தமனை மணந்த பத்மாவதியின் பேத்தி. அதனால் ஜகன்மோகினியும் விஜயநகர ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவளே. அவள் உடம்பிலும் விஜயநகர ராஜ குடும்பத்து ரத்தம் ஓர் அளவு ஓடிக்கொண்டிருந்தது. பிரதாபருத்திரன் தன் குமாரத்தியைக் கிருஷ்ண தேவனுக்குக் கொடுக்க மறுத்து விட்டான். கிருஷ்ணனுக்கு அழகு இல்லை என்றோ, வீரம் இல்லை யென்றோ அவ்விதம் சொல்ல வில்லை.

அவன் பிறப்பையே காரணமாகக் கூறினான் கஜபதி மன்னன்.

"கிருஷ்ணதேவன் சக்கரவர்த்தியாக இருப்பதற்கு மற்ற எல்லா அம்சங்களிலும் தகுதியுள்ளவனாகவே இருக்கிறான். அத்தகைய பதவியிலுள்ளவன் என் குமாரத்தியை மணக்க வேண்டும் என்று விரும்பிக் கேட்பதை நான் ஒரு பாக்கியமாகவே கருதுவேன். ஆனால்...... அவன் பரம்பரையான ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லவே. குலப்பெருமையில்லாத, க்ஷத்திரியன் அல்லாத ஒருவனுக்குக் கஜபதி மன்னன் தன் மகளை ஒருக்காலும் கொடுக்க மாட்டான்."

இவ்விதம் தீர்மானமாகக் கூறி விட்டான் கஜபதி. அவன் சொன்னது பொய்யன்று. உண்மைதான். அதனாலேயே அதைக் கேட்டதும் கிருஷ்ணதேவனுக்கு அளவு மீறிக் கோபம் வந்தது.

கிருஷ்ணனுடைய தந்தையான நரஸ நாயக்கர் விஜயநகர சாம்ராஜ்யத்தில் ஒரு சாதாரண சேனாபதியாக, தண்ட நாயக்கராக இருந்தவர். அதிர்ஷ்டம் கைகூடியது. சந்தர்ப்பமும் கிட்டியது. மகா தண்டநாயக்கராக உயர்ந்து மகா மந்திரிப் பதவியையும் அடைந்து சக்கரவர்த்தியாகவும் ஆனார்.

தாயோ அரண்மனையிலே தீ வெட்டி பிடித்து ஊழியம் செய்து வந்த பணிப் பெண். அவள் பெயரே தீபாலு (தீவெட்டி) நாகம்மா என்று மாறி விட்டது. நகரத்துப் பிரமுகர் வீடுகளுள் ஒன்றைச் சேர்ந்தவள் தான். அப்படிப் பட்டவர்களுக்கே அரண்மனைச் சேவகம் கிடைக்கும். எனினும் அது குலப்பெருமையைக் கொடுக்குமோ? தவிர, நரஸ நாயக்கர் சக்கரவர்த்தியாக இருந்த காலத்திலும் நாகம்மா பட்டமகிஷியாக இல்லை. அந்தப் பதவியையும் அவருடைய மூத்த மனைவி கைப்பற்றி விட்டாள். நாகம்மா வெறும் வெள்ளாட்டியாகவே இருந்து வந்தாள் என்றும் உலகம் கூறியது.

கிருஷ்ணதேவன் என்றைக்கும் தன் பிறப்பைக் குறித்து வருத்தப் பட்டதில்லை. அதை மறைத்துக் கூறவும் முயன்ற தில்லை. தான் வகித்து வந்த பதவிக்கு ஆரம்பத்தில் அது ஒரு சிறிது பாதகமாகவே இருந்தது என்பதை உணர்ந்திருந்தான். ஆயினும் அதை அவன் பொருட்படுத்த வில்லை.

ஆனால் இப்போது கஜபதி அதைக் கூறிக் குத்தியதே அவன் மனத்தைப் புண்படுத்தியது.

கஜபதி கூறியதிலோ தவறு ஏதும் இல்லை. பெண்களைச் சமானமானவர்கள் வீட்டிலேயே கொடுக்க

வில்லை. இல்லையென்றால் தன் நிலைக்கு உயர்ந்தவர்கள் வீட்டில் கொடுக்கலாம். அதே போலப் பெண்களைக் கொள்ளும் போது சமானமான வீட்டிலிருந்தில்லாவிட்டால், தாழ்ந்தவர்களிடமிருந்து கொள்ள வேண்டும். இதுவே நம் நாட்டு வழக்கம். சமூக நிலைக்கும், சதிபதிகளின் பிற்கால வாழ்க்கைக்கும் ஏற்ற சம்பிரதாயம்.

அதைவிட்டுத் தாழ்ந்த இடத்திலே பெண்ணைக் கொண்டு போய்க் கொடுக்க யாரும் சம்மதிக்க மாட்டார்கள். அதுவும் அரச குடும்பத்தவர் அறவே மறுத்து விடுவார்கள். அன்றி, விஜயநகரத்திலே கிருஷ்ணதேவன் பெற்றிருந்த குலப் பெருமை, அந்த சாம்ராஜ்யத்தை இவர்கள் கைப்பற்றுவதற்கு முன் ஆண்டு வந்த வமிசத்தைச் சேர்ந்த பத்மாவதிக்குத் தெரியாதா?

* * *

இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடு எப்போதும் திண்டாட்டம். கிருஷ்ண தேவனும் அவ்விதமே அவதிப்பட்டான். அவன் வெறும் ராஜகுமாரனாக இருந்த காலத்தில் சின்னாதேவி என்னும் தாசியை மணந்திருந்தான். சக்கரவர்த்தியாக வந்த பிறகு, பழைய விஜயநகர ராஜ்யத்தைச் சேர்ந்த திருமலாம்பாளைத் தேவியாகக் கல்யாணம் செய்து கொண்டான்.

ஒருத்தி ஆசை நாயகி; மற்றொருத்தியோ உரிமை பூண்ட பட்டமகிஷி. அதனால் கிருஷ்ணதேவன் இருவரையும் ஒரே விதமாக வேறுபாடு இல்லாமல் நடத்த வேண்டும். யாருக்கும் ஏற்றத் தாழ்வு காட்ட முடியாது.

அரண்மனைக்குள்ளேயே அடுத்தடுத்து இரண்டு அந்தப்புரங்களை அமைத்து ஒன்றுக்கொன்று வித்தியாசம் இல்லாமல் அவற்றை அலங்கரித்து வைத்தான். அங்கே அவன் தேவியர் இருவரையும் தனித்தனியே அமர்த்த ஏற்பாடுகள் செய்தான்.

சந்தோஷம் அதிகமாகிவிட்டால் அதை வேறு யாருக்காவது சொல்லி பாரத்தை நீக்கிக் கொள்ளா விட்டால் மனிதனுக்கு வெடித்து விடும். சின்னாதேவியைக் கிருஷ்ண தேவன் அரண்மனை அந்தப்புரத்துக்கு அழைத்து வந்து விட்டான். எவ்வளவுதான் அவள் தன் உரிமைகளைத் துறந்தாலும் அவளைக் கைவிட அரசன் சம்மதிக்க வில்லை. அவளைச் சமாதானப்படுத்தி, ஊர் வாயையும் மூடுவதற்கு அவன் பட்ட கஷ்டத்தை ஆண்டவனே அறிவான். அத்தகைய முயற்சியில் அவன் வெற்றி கண்டதைப் பிறருக்கு அவன் அறிவிக்க வேண்டாமா? ஆனால் யாரிடம் சொல்வது? வகையறியாமல் அவன் தன் மகிழ்ச்சியைப் பட்டமகிஷியான திருமலாம்பா தேவியிடமே தெரிவித்தான்.

"அழைத்து வந்து விட்டேன்." உணர்ச்சி மிகுதியால் அவனுக்கு அவ்வளவு தான் சொல்ல முடிந்தது.

திருமலாம்பாளோ விஷயம் பூராவையும் அறிவாள். அவளும் சின்னாதேவியைத் தன் சகோதரியாகவே பாவித்து நடத்தி வந்தாள். அதனால் அவளுக்கு இந்த விஷயத்தில் உள்ளூர மகிழ்ச்சியே எனினும், சந்தர்ப்பம் கிட்டிய போது அந்த வேடிக்கையைப் பூராவும் அனுபவிக்கத் தீர்மானித்தாள்.

அதனால் ஒன்றும் தெரியாதவள் போல, "யாரை?" என்று ஒரே வார்த்தையால் அரசனை மடக்கி விட்டாள்.

"சின்னு தேவியைத்தான்."

"இதற்குத்தானு இவ்வளவு பிரமாதம்!"

அவள் கூறிய பதில் கிருஷ்ண தேவன் உள்ளத்தைச் சிறிது வருத்தியது. அவனும் வேறு என்ன என்னவோ எண்ணினன். எல்லாம் க்ஷண நேரத்துக்குள் நடந்து விட்டன. ஆனுலும் அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். திருமலாம்பாள் உள்ளக் கிடக்கையை அறிய ஆவல் கொண்டான். அவள், சின்னுதேவியை யன்றி வேறு யாரையோ எதிர் பார்த்தாள் என்பது அவனுக்கு நன்ருக விளங்கியது.

"நீ வேறு யாரை யென்று எண்ணிஞய்?"

"இல்லை. நீங்கள் பண்ணிய தடபுடலைப் பார்த்து ஜகன்மோகினியைத்தான் அழைத்து வந்து விட்டீர்களோ என்று எண்ணினேன்."

கிருஷ்ணதேவன் ஜகன்மோகினியை மணந்ததற்கு இதுவே மூல காரணம்.

* * *

ஜகன்மோகினிக்கு அவளுடைய தாய் தந்தையர் இட்ட பெயர் லக்ஷ்மி. எனினும், லக்ஷ்மியைத் தன்னிடத்தே ஓர் அம்சமாகக் கொண்ட எம்பெருமான் ஜகந்நாதன் ஒரு காலத்தில் பெண்ணுருவெடுத்து சகல ஜகத்தையும் மயக்கி மோகிக்கச் செய்ததைப் போலவே அந்தக் குழந்தை எல்லோரையும் மயக்கி வந்ததால், அதற்கு ஜகன் மோகினி என்ற பெயர் நிலைத்தது.

கிருஷ்ணதேவன் அவளை அதற்கு முன் பார்த்த தில்லை; கேள்விப் பட்டதுமில்லை. தன் பட்டமகிஷி கூறிய பிறகே அவளைப் பற்றி நினைக்க ஆரம்பித்தான் அவன்.

பருவத்துக் கேற்ற வளர்ச்சி பெற்று மங்கைப் பருவத்தையடைந்து பூர்ண எழிலுடன் விளங்கும் அவளுடைய படத்தைப் பார்த்த பிறகே திருமலாம்பா கூறியது எவ்வளவு தூரம் உண்மை என்பதை உணர்ந்தான். எப்படியாவது அவளை மணந்து விஜய நகரத்துக்கு அழைத்து வரவேண்டும் என்று தீர்மானித்தான்.

அது எளிதில் கூடுவதாக இல்லை. போர்முனையில் வெற்றி கொண்டு அவளைச் சிறைப் பிடித்தாலன்றி, அவள் தனக்கு எளிதில் கிடைக்க மாட்டாள் என்பதை நன்ருகத் தெரிந்து கொண்டான். கஜபதி தனக்கு இழைத்த அவமானத்துக்கு அதுவே தக்க பதிலாகும்.

கஜபதியும் அதற்குத் தயாராக இருந்தான். விஜயநகரம் தன் நாட்டின் மீது படையெடுத்து வரும் என்பதை அவன் எதிர் பார்த்தே இருந்தான். அதனுல் அதை எதிர்க்கத் தக்க ஏற்பாடுகள் யாவற்றையும் செய்து வைத்திருந்தான்.

புது வெள்ளம் போலப் படை திரட்டிச் சென்ருன் கிருஷ்ணதேவன். ராஜ தந்திர நிபுணரான அப்பாஜி இருக்கும்போது அவன் கவலைப் படவேண்டிய அவசியமே இல்லை. கஜபதியின் பெண்ணைக் கேட்டது சக்கரவர்த்தியின் திக்கு விஜயத்துக்கு ஒரு காரணம் வேண்டுமே யென்று அப்பாஜி செய்த சூழ்ச்சியே என்றும் சிலர் பேசிக் கொண்டார்கள்.

நேரடியாக வெற்றி கொள்ள முடியாத இடத்தில் வஞ்சகத்தில் வென்று விடலாம். அப்பாஜியும் அதையே கையாண்டார். ஒட்ட

தேசத்து மந்திரிகளான மஹாபாத்திரர்களுக்கு எழுதியதாகக் காட்டும் கடிதம் ஒன்றை வரைந்தார். 'கஜபதி மன்னனைக் காட்டிக் கொடுக்க நீங்கள் செய்த பேருதவியை நாங்கள் மறக்க மாட்டோம்' என்று எழுதிய ஓலையுடன் ஏராளமான பொன்னும் பரிசும் சேர்த்து அனுப்பினர்.

முன்னேற்பாட்டின் படி அந்த ஓலைகளும் பொன்னும் மஹாபாத்திரர்களிடம் சேர்க்கப் படாமல் கஜபதி மன்னனிடம் கொடுக்கப் பட்டன. அப்பாஜியின் சூழ்ச்சியும் பலித்தது.

கடிதத்தைப் பார்த்த கஜபதி வெகுண்டான்; பயந்தான். தன் மந்திரிகளிடமே அவநம்பிக்கை கொண்டான். அதிகம் கூறுவானேன்! சண்டையில் தோல்வியுற்று, கடைசியில் தன் பெண்ணைக் கிருஷ்ணதேவனுக்கு மணம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டான்.

* * *

அந்தக் கல்யாணமும் சீராக நடக்கவில்லை. சண்டை சச்சரவிலே ஜனித்த சம்பந்தம் இனிது முடிய வேண்டுமே என்று யாவரும் கொண்ட கவலை பொய்த்துப் போகவில்லை.

ஒட்ட தேசத்து அந்தப்புறத்திலே என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது. ஆனல் அவர்கள் 'மானம் பெரிதேயல்லாமல் பிராணன் பெரிதல்ல. அதனல் பிராணன் போனலும் மானத்தைக் காக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்திருக்கிறுர்கள் என்னும் வதந்தி ஊரில் உலவத் தொடங்கியது.

அப்பாஜியும் இந்தச் செய்தியைக் கிருஷ்ண தேவனுக்கு அறிவித்தார்.

"சக்கரவர்த்தி அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. சுவரை வைத்துக் கொண்டு தான் சித்திரம் எழுத வேண்டும். எல்லாம் மர்மமாகவும் சந்தேகமாகவும் இருக்கின்றன. இன்று இரவைத் தாங்கள் ஜாக்கிரதையாகக் கழிக்க வேண்டும். ஒரு கால் தங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம்."

அவர் இவ்விதம் எச்சரித்தது கிருஷ்ண தேவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

அவர்களுக்கு ஒருகால் கல்யாணம் நடப்பதற்கு முன் பொருத்தமாக இருக்கலாம். கல்யாணம் ஆன பிறகு அத்தகைய பயத்துக்குக் காரணமே இல்லை யென்று கிருஷ்ணதேவன் கருதினன். அதுவும் கல்யாணம் நடந்த தினத்தின் இரவிலே அவன் தன் உயிருக்காக ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய காரணம் என்ன வென்பதை அறியாமலே திகைத்தான்.

அந்தச் சமயத்தில் அவன் உடன் இருப்பவள் ஜகன்மோகினி ஒருத்தி தானே: அவளே தன் புருஷனுக்கு விரோதியாகக் கிளம்பி அவனைக் கொன்று விடுவாளா? இது சாதாரணமாக உலகில் நடக்கும் காரியமா?

அப்பாஜி அவ்விதமே எனச் சாதித்தார்.

"அடியேன் கூறுவதில் நம்பிக்கை யில்லா விட்டால் நானே உடன் இருந்து கைப் பிடியாகப் பிடித்துக் கொடுக்கிறேன்" என்றும் நிச்சயமாகக் கூறினர் அவர்.

சக்கரவர்த்தி தன் புது மண அறையிலே மந்திரி அப்பாஜியை அழைத்துச் செல்வதற்குத் தயங்கவில்லை. அவரிடம் அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை. அப்பாஜி

யோ தயங்கித் தயங்கிச் சென்று வெளியிலேயே தங்கி விட்டார்.

உள்ளே ஜகன் மோகினி சர்வா ப்ரண பூஷிதையாக நின்றிருந்தாள். அவள் முக மண்டலத்தின் சோபையைக் கண்ட கிருஷ்ணதேவன் புளகாங்கிதம் அடைந்தான். அவன் மனத்தே இருந்த சந்தேகம் முற்றிலும் மறைந்து விட்டது. அவளுடைய புன் முறுவல் அவனை மயக்கியது.

'குழந்தை யுள்ளம் படைத்த இவளா சதிகாரி நம்மைக் கொன்று விடுவாள்? அவ்விதம் அப்பாஜி நினைப்பதற்குக் காரணமே கிடையாது. ஏதோ பகற் கனவு காண்கிறார் போலும்' என்றே எண்ணினன் அவன்.

ஆனல் அந்த எண்ணம் சடுதியிலே மாறிவிட்டது. 'தடால்' என்ற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கீழே ஓர் உடைவாள் விழுந்து கிடந்தது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அவள் குனிந்து அதை எடுப்பதற்கு முன்னர், கிருஷணதேவன் எடுத்துக் கொண்டான்.

அது ஜகன் மோகினியின் இடையில் செருகியிருந்த உடைவாளே. அதை அவள் தெரிந்து தான் உள்ளே கொண்டுவந்தாள். இல்லாவிட்டால், அவள் அதைக் குனிந்து எடுக்கப் போவானேன்?

அவள் சௌந்தர்யத்தைப் பருகி நின்ற கிருஷ்ணதேவனுக்குப் பிரமாதமான கோபம் உண்டாயிற்று. உதடு துடிக்க மீசை படபடத்தது. கண்கள் உருண்டு திரண்டு வெளி வந்தன. முகமே கோவைப் பழம் போலச் சிவந்து விட்டது.

படுக்கை யறைக்கு வரும் அவள் எதற்காகத் தன் இடையில் உடைவாளைச் சொருகி வரவேண்டும்? அந்தக் கேள்விக்கு ஜகன் மோகினியும் பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறினள்.

அவள் உடலும் பதறியது. பதில் பேச முடியாமல் நாக்குழறியது.

இந்த நிகழ்ச்சியின் முடிவாகவே ஜகன் மோகினி விஜய நகரத்தின் வெளியே ஜன நடமாட்டமில்லாத ஒதுக்குப் புறத்திலே சிறை வாழ்க்கை போன்ற தனி வாழ்வை நடத்தி வந்தாள்.

*　　*　　*

உண்மை இருவருக்கும் தெரியாது. கிருஷ்ணதேவன் வேண்டும் என்றே தன்னை இவ்விதம் அவமானம் செய்ததாகக் கொண்டாள் ஜகன் மோகினி. திடீரென்று அடாத பழியைத் தன் மீது சுமத்தினல் அவள் எவ்விதம் பதில் கூறுவாள். குற்றவாளியானதாலேயே அவள் நேரடியாகப் பதில் சொல்ல முடியாமல் திகைத்தாள் என்று கருதினன் கிருஷ்ண தேவன்.

தன் விவாகத்தைப் பற்றி நடந்த சண்டை சச்சரவுகளைப் பற்றிய முழு விவரமும் ஜகன் மோகினிக்குத் தெரியாது. ஏதோ அரை குறையாகத் தான் அவள் காதில் விழுந்தது. முழுமையும் தெரியாமல் அவள் என்ன செய்ய முடியும்? தவிர அந்த நிலையில் அவளது விருப்பத்தைத் தெரிவித்தால் அதைத் தாய் தந்தையர் எவ்விதம் வரவேற்பார்களோ என்ற பயமும் அவளுக்கு.

விஜய நகரத்தாருடைய விவாகப் பேச்சு ஆரம்பித்த பிறகே அவளுக்குக் கிருஷ்ணதேவராயருடைய குணதிசயங்கள் தெரிய வந்தன. மந்திரி அப்பாஜியால் அவன் பட்டம் எய்தியதையும், சின்ன தேவிக்காக அவன் பதவியைத் துறக்க இருந்ததையும் அறிந்

தாள். அவளுக்குச் சொன்னவர்களோ அவளை ஒரு தாசி லோலன் என்றே கூறினர்.

ஜகன் மோகினி மனதில் எண்ணியது வெளிக்குத் தெரியாது. அவள் தன் உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ள வில்லை. ஒரு யந்திரம் போலவே சொல்லிய வண்ணம் செய்தாள். ஆனல் ஒன்று மட்டும் நிச்சயம். அவள் மீது சுமத்தப் பட்ட பழி மட்டில் அபாண்டமானது; அவள் அத்தகைய எண்ணத்தைக் கனவிலும் கருதவில்லை.

மயிர் நீங்கின் உயிர் வாழாக் கவரிமான் போல அவர்கள் உண்மையான க்ஷத்திரிய தருமத்தைக் கைக் கொண்டு தங்கள் மானத்தைக் காக்க உயிர் துறக்கவும் சித்தமாகவே இருப்பவர்கள். கீழ்க் குலத்தவனுக்கு வாழ்க்கைப் பட்டுத் தன் பிறப்பைக் கெடுத்துக் கொண்ட பிறகு என்ன பயன்? அந்த விதமான எண்ணம் இருந்திருந்தால் அவள் விவாகத்துக்கு முன்னமேயே தன் உயிரை மாய்த்துக் கொண்டிருப்பாள்.

ராஜ குடும்பச் சம்பிரதாயப் படியே அவளை உடுத்துப் பள்ளியறைக்கு அனுப்பி யிருந்தார்கள் அரண்மனை முதியோர்கள். அதன் படியே அவள் இடையில் வைரங்கள் வைத்திழைத்த தங்க வில்ஒட்டியாணத்தை (மேகலையை) போட்டு அதில் உடைவாளைச் சொருகி வைத்திருந்தாள். ராஜகுமாரியான அவளுக்கு அதற்கு உரிமை உண்டு.

கிருஷ்ணதேவனுக்கு இது தெரியாதா? எந்த விதமாகவோ விளைவு விபரீதமாக மாறியது.

* * *

கால வேகத்தின் சுழலே மனப் புண்ணை ஆற்றுவதற்கு தக்க மருந்து. ஒவ்வொரு சமயங்களில் கிருஷ்ணதேவன் தன் நடத்தைக்காகப் பச்சாதாபப் பட்டான். ஆத்திரத்தால் அவசரப்பட்டு ஒரே நிமிஷத்தில் தீர விசாரிக்காமல் உதவியற்ற பெண் ஒருத்தியைக் குற்றவாளியாக்கியது நியாயமா என்று கேட்டு அவன் மனதே உறுத்தியது. 'ஏதோ சொல்வார் பேச்சைக்கேட்டு அவள் தவறியே நடந்திருந்தாலும் அந்தக் குற்றத்தின் முழுப் பொறுப்பும் அவளைச் சார்ந்ததாகுமா? குற்றவாளியாகவே யிருந்தாலும் அவளுக்குக் காட்ட வேண்டிய கருணையைத் தான் பூர்ணமாக அளித்தானா? என்றெல்லாம் யோசித்து வருத்தப் பட்டான்.

அவன் விரும்பியதற்கு மாறுகவே காரியங்களும் நடந்தன. ராஜகுமாரத்தி ஒருத்தியை மணந்து மறு நாளே அவளை நகர்ப் புறத்தே தனியாகத் தள்ளி வைத்து விட்டால் அந்தச் செய்தி ரகசியமாக நின்று விடுமா? ஊரார் வம்பு அளக்க ஆரம்பித்து விட்டார்கள். அரண்மனை நிகழ்ச்சிகள் பகிரங்க ரகசியங்கள் அன்றோ!

அந்த மனோ நிலையில் தான் அவன் ஓர் இரவை ஜகன்மோகினியின் இருப்பிடத்திலே கழிக்கநேர்ந்தது. அஸ்தமித்து நீண்ட நேரம் ஆன பிறகே அவன் அங்கே வந்து சேர்ந்தான். அவன் வரவை அங்கே யாரும் எதிர்பார்த்திருக்க வில்லை.

சக்கரவர்த்தி காலையில் நகரத்தை விட்டுப் புறப்பட்டவன். அந்தரங்கமான வேலையாட்கள் சிலர் உடன் வரப் பகல் முழுதும் எங்கெங்கோ சுற்றியலைந்தான். அஸ்தமனத்துக்கு முன்னதாகவே அரண்மனை திரும்பி விடுவதாக ஏற்பாடு செய்திருந்தான்.

ஆனல் விதி வேறு விதமாக இருந்தது. அந்திப் பொழுதிலே

திடீரென்று வானம் இருண்டு கவிந்து கொண்டு விடா மழை பெய்ய ஆரம்பித்தது. கோடை மழையைப் பற்றிக் கேட்க வேண்டுமா? வானமே இடிந்து விட்டது போலத் தாரை தாரையாகக் கொட்டியது.

நாட்டுப் புறத்திலே மரத்தடியிலும் மண்டபங்களிலும் ஒண்டிப் பெரு மழையைக் கழித்தான் சக்கரவர்த்தி. ஆனல் மழை ஓய்வதற்குள் பகல் பொழுது போய் விட்டது. 'கும்' இருட்டிலே திரும்பவும் நகரத்தை அடைய முடியாததானல் இரவு நேரத்தை எங்கேயாவது தங்கி கழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அந்தச் சமயத்திலும் அவனுக்கு ஜகன் மோகினி அரண்மனையை அடைய இஷ்டமில்லே. தான் நகரத்தினின்றும் வெளிப் பட்டு எங்கேயோ போய் வந்த செய்தியைப் பகிரங்க மாக்க விரும்ப வில்லே. வேறு எங்கேயாவது கிராமத்திலே தங்கினல், தான் யார் என்ற விஷயம் வெளிப்பட்டு விடும். அதனல் கடைசியில் வேறு வழியில்லாமல் அங்கே சென்றான்.

அங்கே போன பிறகும் தன் வரவை ஜகன்மோகினிக்குத் தெரிவிக்கக் கூடாதே என்று திட்டம் செய்திருந்தான்.

தனி வாழ்க்கை நடத்த ஆரம்பித்த பிறகு கொஞ்ச காலத்துக்கு ஜகன்மோகினி மிகவும் கஷ்டப் பட்டாள். ஒன்றியாக இருப்பது அவளுக்கு அவஸ்தை யாகத்தான் இருந்தது, ஆனல் போகப் போக அது சரியாகி விட்டது.

'தலையில் எழுதிய படியே நடக்கும்' என்று வாழ்க்கையை அது சென்ற படியே விட்டு விட்டாள் அவள். உலக இச்சையை முற்றிலும் உதறி வெளி யுலக உறவு சிறிதும் இல்லாமல் அவள் துறவியைப் போன்ற வாழ்க்கையை மேற் கொண்டாள். எம் பெருமான் ஜகந்நாதனைப் போற்றி வழிபடுவதிலேயே தன் காலத்தைக் கழித்தாள்.

கைப் பிடித்த கணவனே தான் கொண்ட தெய்வம் என்னும் நம் தர்மத்தை நன்ருக அவள் அறிந்தவள். அவள் எந்த விதமான குணம் வாய்ந்தவனுயினும் நடத்தை யுடையவனுயினும், அவன் அடிச்சுவடைப் பின் பற்றி நடப்பதே பெண்களுக்கு அழகு என்றே எண்ணினள்.

'எந்தக் காரணத்தாலோ தன்னிடம் மட்டில் அவர் விரோதப் பான்மை கொண்டாரே யன்றி மற்றவர்களே அவர் அன்போடும் ஆதரவோடுமே நடத்தி வருகிருர்' என்பதை உணர்ந்தாள் அவள். தன்னைப் பற்றிய வரையிலே அவள் கிருஷ்ணதேவனேக் குறை கூறலாம். ஆனல் அவன் பிறரை ஆதரிப்பது அவளுக்குத் தெரியாமல் இல்லே.

'என் தனி வாழ்க்கை பாழாகிப் போனலும் அதனல் குற்றமில்லே; அவர் உயிருடன் நீண்ட காலம் இருந்து உலகத்துக்கு நன்மை செய்து வந்தால் அதுவே போதுமானது. அதற்குத் தெய்வம் இரங்கி அனுக்கிரகிக்க வேண்டும்.'

அவள் சதா இதையே பிராத்தித்து வந்தாள். பெண்மக்கள் வேண்டுவது மங்கிலியப் பிச்சையைத்தானே. அதைத்தான் அவளும் வேண்டி நின்ருள்.

என்ன தான் அவள் வாழ்க்கையின்பத்தைத் துறந்து நின்ருலும், சிற்சில சமயங்களில் அந்த எண்ணம் அவளே ஆட்கொண்டு துன்புறுத்தும். அந்தக் காலங்களில் அவள் சக்கரவர்த்தியைக் கண்டு தன் குறையை முறையிட்டு தான்

எத்தகைய குற்றம் செய்திருந்தாலும், தன்னை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்ள எண்ணுவாள்.

ஆனால் அடுத்த சணத்திலே அது மாறி விடும். 'அவர் எங்கே நான் எங்கே' என்று கருதுவாள். அதனோடு சுய மரியாதையும் கௌரவமும் முன் வந்து குறுக்கே நிற்கும். "நிரபராதியான நான் எதற்காகப் போய் மண்டியிட்டு என்னையே சிறுமைப் படுத்திக் கொள்ள வேண்டும். தெய்வத்துக்குக் கண்ணில்லையா? தானே நியாயம் கிடைக்கும். இவ்விதம் அவள் தன்னையே தேற்றிக் கொள்வாள்.

கிருஷ்ணதேவன் அவள் மாளிகைக்கு வந்த அன்றிரவும் ஜகன்மோகனிக்கு அவ்விதமான எண்ணம் உண்டாயிருந்தது. மறுநாள் காலையில் எவ்விதமாக வாயினும் தன் நிலைமையைச் சக்கரவர்த்திக்கு அறிவிக்க வேண்டும் என்று உறுதி கொண்டாள். அது ஈடேற வேண்டும் என்று ஆண்டவனை வேண்டி நின்றாள்.

அதே சமயத்தில் தான் கிருஷ்ணதேவன் உள்ளே நுழைந்தான். இருவருடைய மனோ பாவமும் விட்டுக் கொடுக்கும் தன்மையைப் பெற்றிருந்தது.

ஜகன்மோகினியின் தோற்றத்தைக் கண்ட அவன் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். கால்கள் முன்னும் செல்ல வில்லை; பின்னும் போக வில்லை. "ரூப சுந்தரியான அவள் இவ்விதம் வாடி வதங்கிப் போய் இந்த நிலையை அடைந்ததற்கு நான் அல்லவோ காரணம்" என்று ஏங்கினான் அவன்.

"இவளை இப்படி தனியாக வைத்திருப்பது வெட்கக் கேடானது; அடாத காரியம். அவள் மறுத்தாலும் எவ்விதமாகவாவது சமாதானம் செய்து அவளைத் தன் உடன் அழைத்துச் சென்று விட வேண்டும் என்றே தீர்மானித்தான்.

அவள் அடைந்திருந்த பக்குவ நிலைமை அவனுக்குத் தெரியுமா?

தற்செயலாகத் தலையைத் திருப்பிய ஜகன்மோகினி ஆஜானுபாகுவாக எதிரே தான் வழிபடும் தெய்வம் நிற்பதைக் கண்டாள். அவளால் தன் கண்களை நம்ப முடிய வில்லை.

சக்கரவர்த்தியே நேரில் வந்திருக்கிறார் என்பதை யறிந்த வுடனே அவளுக்கு உணர்ச்சி மேலிட்டு விட்டது. அவருக்கு உரிய மரியாதைகளை அளித்து வரவேற்க வேண்டிய முறைகளை மறந்தாள்.

அவள் சக்கரவர்த்தியை எதிர் கொண்டு வந்தாள். அவர் பாதத்தைத் தொட்டு வணங்கி என்னவோ சொல்ல எண்ணியவள் ஒன்றும் கூற மாட்டாதவளாக, "தங்கள் கிருஹத்துக்குத் தாங்கள் வர வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே அவர் அடியில் சாய்ந்தாள்.

கிருஷ்ணதேவன் முகத்தில் கண்ணீர் ஆறாகப் பெருக குனிந்து அவளை வாரி கட்டித் தூக்கிப் பக்கத்திலே படுக்க வைத்தான். மூர்ச்சை தெளிய வைத்தான்.

"ஜகன்மோகினி, இனி ஒரு நாளும் நான் கை விடமாட்டேன்" என்று வாக்குறுதியும் கொடுத்தான்.

திரும்பவும் அவள் கண் விழித்த போது முகத்திலே குறுநகை தாண்டவமாடியது.

ஆசாபாசம்

என். சிதம்பர சுப்ரமணியம்

தாழ்ப்பாள் போடாமல் சாற்றப் பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்தான் ரகு நாதன். கதவு திறக்கும் சத்தம் கேட்டு, 'அப்பா' என்று கூவிக் கொண்டு ஓடி வந்தாள் அவனு டைய இரண்டு வயதுக் குழந்தை சரோஜா. "அப்பாடா, உங் கப்பா வந்தாச்சா" போதும், கொஞ்ச நாழியாயிடுத்துன்னு 'அப்பா' 'அப்பா'ன்னு கொல்லைக் கும், வாசலுக்கும், ஓடி ஓடிப் பாத்தாறது என்ன அப்பா பைத்ய மோ தெரியவில்லை. ஏன் இவ்வ ளவு நாழியாம் என்றாள் மதுரம்

'ஆபீசிலே ஒரு, தத்தபாதகன் வந்து உட்கார்ந்து கொண்டு, என் பிராணனை வாங்கி விட்டான். அவனைக் கிளப்பிவிட்டு புறப்படு தற்கு இவ்வளவு நேரமாகி விட் டது" என்று சலித்துக் கொண் டான் ரகுநாதன். அதற்குள் சரோஜா, அவன் மேல் வந்து ஒட் டிக் கொண்டு "அப்பா" என்றாள்

"எண்டா பயலே" என்று தூக்கிக் கொண்டு, தன்னுடைய தீராத ஆசையை முத்தத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தான். பெண் குழந் தைகளையும், அடா, என்று ஆண் குழந்தையைப் போல, சல்லாப மாகக் கூப்பிடுவதில் அவனுக்கு அளவிறந்த திருப்தி. கூடத்தில் அவனுடைய இரண்டாவது குழந் தை நீந்திக் கொண்டிருந்தது. அதைக் கவனித்த ரகுநாதன், "என் பொன்னுக்குட்டி, என்ன பண்றது" என்று சொல்லிக் கொண்டே, மூத்த பெண்ணை இறக்கி விட்டு, இரண்டாவது குழந்தை வஸந்தாவைக் கையில் வைத்துக் கொண்டு, திரும்பினன். அவன் பார்வை, சுவரில் மாட் டியிருந்த போட்டோவின் மேல் விழுந்தது. "நான் எவ்வளவு தாரம் சொல்றது மத்யானம் ஒழிந்த வேளையில், ஒட்டடையடி யென்று. போட்டோ மேலெல் லாம், ஒரே ஒட்டடை" என்று போட்டோவை, ஒத்தைக் கையி லேயே எதிரே தொங்கிக் கொண் டிருந்த துணியில் துடைத்தான். துடைத்து விட்டு அதைக் கவன மாகப் பார்த்தான். அது அவன் பெரிய பெண் சரோஜா, நீந்து கிற பருவத்தில் எடுத்த படம். அதைப் பார்த்து விட்டு, கையி லிருக்கும் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தான். "மது ரம் நீ சொன்னதுதான் சரி. வர வர, இதுவும் பெரிசு போலவே, ஆய்க்கொண்டு வருகிறது" என றன்.

"வர வர ஒன்றும் அப்படி ஆகவில்லை. பிறந்தது முதல் இவ ளும் பெரியவள் மாதிரி தான் இருக்காள் என்று சொல்லிக் கொண்டே வருகிறேனே" என் றாள். மூத்த பெண் சரோஜா, அசல் ரகுநாதன் மாதிரி. இரண் டாவது குழந்தை வஸந்தாவைப் பற்றி அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியாமலிருந்தது. ஆனல், மதுரம் மாத்திரம், இந்தக் குழந்தையும் சாயலில், மூத்ததைப் போலவேயிருந்தது என்று சாதித் து வந்தாள். ஆனல், ரகுநாதன் ஒத்துக் கொள்ள வில்லை. ஓரளவு தங்கள் இருவருடைய சாயலும், சமரசத்துடன் இந்தக் குழந்தை யில் இருப்பதாகச் சொல்லி வந்

வந்தான். ஆனால், மூத்த பெண், நீந்திக் கொண்டிருந்த காலத்தில் எடுத்த படத்தையும், வஸந்தாவை யும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவர்களின் உருவ ஒற்றுமை அவ னுக்கு விளங்கியது. தன் கக்ஷி தோற்றாலும், அவனுக்கு உள் ளூர ஒரு பெருமை இருந்தது. தன் மாதிரியே, தன் குழந்தைகள் இருக்கின்றன என்று உவகை கொண்டான்.

"இதுவும், பெரிசு மாதிரி, அப்பா பைத்யமாகத்தான் இருக் கப் போகிறது" என்றாள் மதுரம். ஸரோஜா, தன்னிடம் கொண்டி ருப்பதை விட அப்பாவின் மேல் ஆசை வைத்திருப்பதைச் சுட்டிக் காட்டினாள்.

"எங்காத்துக் குழந்தைகள் எல் லாம் அப்படித்தான் அப்பா மேல் ஆசையாயிருக்கும்" என்றான் பெருமையுடன். அதைக் கேலி செய்யும் பாவனையில் முகத்தைக் கோணிக் கொண்டு, உள்ளே போனாள் மதுரம். "இந்தா இதை வாங்கிக் கொண்டு, போ," என்று குழந்தையை அவளிடம் நீட்டி னான். அவள் கைகளை நீட்டி, குழந்தையை வாங்க வந்தாள். குழந்தை, ரகுநாதனை ஒட்டிக் கொண்டு வர மறுத்து விட்டது. "வரமாட்டாளாமே" என்றாள் மதுரம்.

"நீ வைத்துக் கொள், நான் கூப்பிடறேன் வராளா பார்ப் போம்" என்று குழந்தையை அவள் கையில் பலவந்தமாகத் தந்து விட்டு, கைகளை நீட்டிக் கொண்டு, "வாடா, பயலே" என்றான். ஒரு தாவு தாவிக் கொண்டு, இவன் மேல் பாய்ந் தாள் வஸந்தா.

"இதுக் கென்னத்துக்கு இவ்வ ளவு சூன்யம், இப்பவே முதக் கொண்டு" என்றாள் அங்கலாய்ப் புடன் மதுரம். "நீ குழந்தைக ளிடத்தில் பிரியமாயிருந்தால் தானே உன்னிடம் அதுகள் பிரிய மாயிருக்கப் போகிறது" என்றான். "ஒரு கூடை செங்கல்லும் பிடாரி என்பது போல, உங்கள் குழந் தைகள் எல்லாம், ஒரே அச்சு எல் லாத்திலும். இது உலகத்திலேயே இல்லாத அதிசயமாகத்தானி ருக்கு. எல்லாக்குழந்தைகள் தாயா ரைத்தான், அரவணைத்து நிற்கும். இதுகள் என்னமோ, இருக்கு கள்" என்றாள் அவள்.

"நீ மாத்திரம் என்னடி? மற் றக் குழந்தைகள் போல இது களும் பால் குடிக்கிற வரையில் உன் கிட்ட பிரியமாத்தானிருக்கு உன் அதிர்ஷ்டம் சீக்கிரம் வற்றிப் போகிறது" என்றான்.

"ரகுநாதன்" என்று வாசலில் ஒரு குரல் கேட்டது. தங்களு டைய சல்லாபங்களை நிறுத்திக் கொண்டு, வாசல் பக்கம் வந் தான். அவன் நண்பன் துரையப் பனும், இன்னும் யாரோ கண் ணாடியணிந்த ஒரு பெரியவரும் வந்திருந்தார்கள். "தொரையப் பா" என்று சொல்லிவிட்டு, அந்தப் பெரியவரையும் வர வேற்று உட்கார வைத்தான்.

"இவர்தான் உங்கள் சந்திரு வின் மாமனார். "இவன்தான் ரகு நாதன். உங்கள் மாப்பிள்ளைக்கு அத்யந்த நண்பன்" என்று ஒரு வரை யொருவருக்கு அறிமுகப் படுத்திவைத்தான், துரையப்பன். "ஆமாம், மாப்பிள்ளை சொல்லக் கேட்டிருக்கிறேன். இங்கு வந் திருந்தபோதுகூட உங்களைப் பார் த்துவிட்டு வந்ததாகத்தான் சொன் னான்" என்றார் அவர்.

"ஆமாம், எப்போது வந்தாலும் என்னுடன் தங்காமல் போவ தில்லை." என்று சொல்லிக் கொண்டே, "இவ்வளவு ஜனங்

கள், பர்மாவை விட்டு, புறப் பட்டு வந்து விட்டார்களே இவன் மாத்திரம், வந்து சேர முயற்சிக்காமலேயே, தங்கி விட் டானே! மடையன்! உயிரைவிட, வியாபாரம் பெரிது போல் இருக் கிறது. அவன் குணமே அப்படித் தான். சொன்னாலும் தெரியாது. தனக்கும் தெரியாது. எவ்வளவு பேருக்கு மனக்கவலை. அங்கே எப் படி எப்படியெல்லாம் இருக்கோ? ஒன்றும் செய்வதற்கு முடியாமல் போய்விட்டது. இவ்வளவுலகம் ஜனங்கள், சொத்து வீடுவாசல் களைப் போட்டு விட்டு வந்திருக்கி ருர்களே இவன் மாத்திரம் வர முடியாதுன்னு உட்கார்ந்திருந்தா னுமே. ரெங்கூனிலிருந்து வந்த முருகேசமே என்னிடம் சொல்லி யிருக்கிருர்" என்ருன். "எப் படியாவது, அவர்கள் எல்லோ ரும், உயிரோடு, இருந்தால் போ தும். எனக்கு அதுதான் கவலை யாயிருக்கிறது" என்ருர் பெரிய வர்.

"காலத்திற்கு புத்தி அனுசரணை யாரைச் சொல்லி என்ன பண்றது. நானும் ரொம்ப காலமாக, அங்கே இருக்காமல், இங்கு வந்து விடும் படி சொல்லியும், எழுதியும்தான் வந்தேன். ஆனல், அதையார் கேட் பது கடைசியில் மென்னியைப் 'பிடிப்பது போல் ஆபத்து வந்து விட்டது". இவ்வளவு காலம் வேணுமென்று இப்படி அகப்பட்டுக் கொள்வானு என்று, வருத்தத்தினல், ஏற்பட்ட ஆத்தி ரத்தைக் கொட்டினுன் ரகுநாதன்.

"வாஸ்தவம். வரமுடியாத போனலும், அங்கேயாவது, சௌக்யமாயிருந்தால் யுத்தம் முடிந்தவுடனவது பார்த்துக் கொள்ளலாம்" என்ருன் துரை யப்பன்.

"என்னிக்கு இந்த யுத்தம் முடி யுமோ? என்னக்கி அவர்களைப் பார்க்க முடியுமோ?" என்று சலித்துக் கொண்டான் ரகுநாதன்.

"அவன் தான் அங்கேயிருந் தானே? என் பெண்ணையும் அங் கே கொண்டு போய்விட்டு வந் தேனே. இதுவும் தலை எழுத்து. இரண்டுமாதம் கழித்து அனுப்பு கிறேன் என்ருல் கேட்டானு?" என்ருர் மாமனர்.

"எவ்வளவு தந்திகள் எவ்வளவு கடிதங்கள் போட்டு விட்டா னப்பா" என்ருன் துரையப்பன்.

"அவன் மகா பிடிவாதக் காரன்." என்ருன் ரகுராமன். பிரசவத்திற்குத் தன் மனைவியை பிறந்தகத்திற்குக் கொண்டு போய் விட்டு, தன் சிநேகிதர்கள் பந் துக்களை யெல்லாம் பார்த்துவிட்டு ரங்கூன் போனன் சந்திரு. பிரச வமாகி, ஐந்தாறு மாதங்கள் அவன் மனைவி பிறந்த வீட்டிலே யே இருந்தாள். இன்னும் கொஞ்ச நாள் தன்னருகே வைத் துக் கொள்ள வேண்டுமென்று பார்த்தார் சந்திருவின் மாமனர். ஆனல் சந்திரு தன் மனைவியை அங்கேயே விட்டு வைக்க விரும்ப வில்லை. கடிதங்கள் மூலமும், தந் திகள் மூலமும் மனைவியை, ரெங் கூனுக்கு அனுப்பும் படி எழுதிக் கொண்டேயிருந்தான். "கடைசி யில் என் பையனுடன் அவளை ரங் கூனுக்கு அனுப்பிவிட்டுத் தான் என்னை விட்டான்" என்ருர் சந்தி ருவின் மாமனர்.

"தென்னைமரத்திலே தேள் கொட்டிற்ரும் பனைமரத்தில் நெறிகட்டிற்ரும். இந்த யுத்தம் யாருக்காக நடக்கிறது? எதற் காக நடக்கிறது? நடுவிலே அகப் பட்டுக் கொண்டு நாம் முழிக்க வேண்டியிருக்கிறது" என்ருன் ரகுநாதன்.

அந்த சமயத்தில், அவனுடைய குழந்தை வசந்தா கூடத்து வாசற்

படியைத் தாண்டி நீந்தி வந்து கொண்டிருந்தாள்.

"தங்கள் குழந்தைகளா?" என்றார் வந்தவர்.

"ஆமாம், அதோ மூலையில் நிற்கிறதே அது ஒன்று. வாசற் படியைத் தாண்டி, முட்டிக்கப் பார்க்கிறதே இது ஒன்று" என்று வசந்தாவைத் தூக்கி வந்தான்.

"இந்தா, பாப்பா இதோபார்" என்றார் பெரியவர். ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தார். "என்ன ஆச்சர்யம், என் பேத்தி - உங்கள் நண்பன் சந்திருவின் குழந்தையும்- இந்தக் குழந்தையும் ஒரே அச்சு ஒரே விக்ரஹம் ஒரே வார்ப்பு. என் கண் முன்னாலே அந்தக் குழந்தை நிற்கிறாப் போலேயிருக்கு" என்றார் அவர். தன் உள்ளத்தின் வேகம் கண்களிலிருந்து நீராகப் பெருகிவிடுமோ என்று பயப்படுபவர் போலத் தோன்றினார்.

"அப்படியா" என்றான் ரகு.

"நான் என் பெண்ணை அனுப்பும் போது குழந்தைக்கு கிட்டத் தட்ட இந்த வயசுதான். எல்லாம் இதைப்போலவே யிருந்தது. சதா, அதை வைத்துக் கொண்டே யிருப்பேன். அதை அனுப்பும் போது என் மனம் மிகவும் கஷ்டப் பட்டது. தெய்வாதீனமாக, இந்தக் குழந்தையைக் காணும் போது, அந்தக் குழந்தையைப் பார்ப்பது போலவேயிருக்கிறது" என்று சொல்லிவிட்டு, "அம்மா, இங்கே வா," என்று அன்பே உருவாக குழந்தையை எடுக்க வந்தார். ஆனால் குழந்தை ஒரு தரம் வெறித்துப் பார்த்துவிட்டு, ரகுநாதனை இறுக்கிப் பிடித்துக் கொண்டது.

"போடா பயலெ நம்ம தாத்தான்னா" என்று அவருக்காக சிபார்சு செய்தபடி மறுபடியும் நீட்டினான் குழந்தையை. ஆனால் குழந்தை அவனை விடவில்லை.

"வேற்று முகம் ஜாஸ்தி இதுகளுக்கு" என்று மன்னிப்புக் கோரும் பாவனையில் சொன்னான் ரகுநாதன்.

தான் கொண்டு வந்திருந்த பையை எடுத்து, வீட்டுக்கு வாங்கி வைத்திருந்த ஆரஞ்சுப் பழத்தில் ஒன்றைஎடுத்துக் கொண்டு, "இந்த பாத்தியா, பழம்" என்று ஆசை காட்டினார் கிழவர். குழந்தையிடம் பலிக்குமா? பழத்திற்கு மசியுமா? திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. கிழவருக்கு குழந்தையை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசை பொங்கிக் கொண்டு வந்தது.

"என் அம்மா, கோபம்" என்று பலவந்தமாகக் குழந்தையை வாங்கி ஒரு முத்தம் அதன் கன்னத்தில் கொடுத்தார். சொல்ல முடியாத ஆனந்தத்தைக் கொண்டது போல் அவர் முகம் தோன்றிற்று. ஆனால் அரை நிமிஷம் கூட அதை அனுபவிக்க முடியவில்லை. ஏனென்றால் இவர் தூக்கிய கணமே குழந்தை வீறிட்டுக் கொண்டு சீறி அழக் கிளம்பி விட்டது.

"உங்கள் கண்ணாடியைக் கண்டு பயப்படுகிறது போலிருக்கிறது" என்று நொண்டிச் சாக்குச் சொன்னான் ரகுநாதன். குழந்தையின் பிடிவாதத்தையும், அந்தப் பெரியவரின் மட்டற்ற ஆசையையும் பார்க்கும் பொழுது அவனது மனம் அளவிறந்த துன்பத்தை அடைந்தது. ஒரு நிமிஷமாவது, அவரிடம் குழந்தையை இருக்கும்படி செய்ய பாடுபட்டது. "இந்தா நம்ம தாத்தா, நல்ல தாத்தான்னா?" என்று சொல்லி, அவர் பக்கம் திருப்பினான். ஆனால், கொஞ்சம்

கூட பிரயோசனமில்லை. பழைய படியே, அவரைப் பார்த்து பலமாகக் கத்தத்தொடங்கியது. குழந்தை கையையும் காலையும் உதறிக் கொண்டு கத்த ஆரம்பித்தது. ரகுநாதனுக்கு வேதனையும் அவமானமும் பொறுக்க முடியாமல் பொங்கி வந்தது. "மூதேவிச் சனியன், போனுலென்ன" என்று சொல்லி கோபமாகப் பார்த்தான். குழந்தையின் அலறல் அதிகமாயிற்று.

"குழந்தையை ஒன்னும் சொல்லாதீர்கள். அதுக்கு என்ன தெரியும், என் 'இட்லி'க் கண்ணுடியைப் பார்த்துத்தான் இவ்வளவு பயந்து கொண்டிருக்கும்" என்று சமாதானப் படுத்தினர். ஆசாபங்கத்தின் ரூபத்தை வெளியே காட்டாமல் இருக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்.

"குழந்தையுமாச்சு, கோட்டானுமாச்சு" என்று சொல்லிக் கொண்டே, ஆத்திரத்துடன் குழந்தையை உள்ளே தூக்கிக் கொண்டு போனுன்.

"சரி நாங்கள் வருகிறோம்" என்று புறப்பட்டார்கள். வந்தவர்கள் இன்னும் எவ்வளவு நாள் இருப்பீர்கள்? இங்கு நாளை சாப்பிட வாருங்கள் என்று எவ்வளவோ கேட்கவும் சொல்லவும் எண்ணியிருந்தான். ஆனல் அவனுக்கேற்பட்ட குழப்பத்தில் அதெல்லாம் மறந்துபோய் விட்டது.

'சரி' யென்று தலையசைத்து அனுப்பிவிட்டு உள்ளே வந்தான்.

"குழந்தையை என்ன பண்றியள் ஏன் இப்படி அழ விடுகிறீர்கள்" என்று கேட்டுக் கொண்டே "அடடா, என்னடா தங்கம்" என்று ஆர்வம் பெருகி வரும் கைகளுடன் வாங்குவதற்கு வந்தாள் மதுரம். இப்பொழுது,

ஒரு தாவு தாவிக் கொண்டு, அவ னிடம் பாய்ந்தது குழந்தை.

"பெரிய மனிதர் வந்தவர் என்ன ஆசையாகக் கூப்பிடுகிறார்! இது போகவே மாட்டேனுடுத்து சனி" என்றான்.

"ரொம்ப நன்றாருக்கு குழந்தை யைக் கோவிச்சுக்கிறது. அதற்கு ரொம்பத் தெரியும் போலிருக்கி றது" என்று அழுதுகொண்டிருக் கும் குழந்தையை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள்.

அவனுடைய மூத்த பெண், "அப்பா வா" என்று நாற்கா லிக்கு இழுத்துக் கொண்டு போக வந்தாள். அந்த குழந்தையின் விளையாட்டையும், ரஸிப்பதற்கு அவன் மனம் இடங்கொடுக்க வில்லை. "இந்தா இவளையும் கூட் டிக் கொண்டு போ," என்று சொல்லிவிட்டு, வேகமாக அல மாரிப் பக்கம் வந்தான். "இந்தக் குழந்தையின் உள்ளத்திலேயே, இவ்வளவு விருப்பு வெறுப்புகளை யும் விதைத்திருக்கிறாயே! அட கடவுளே!" என்று சொல்லிக் கொண்டு கீதையை எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

"நாழியாகிவிட்டதே சாப்பிட வருகிறீர்களா" என்று உள்ளி ருந்து குரல் வந்தது.

"இப்பொழுது என்னைத் தொந் தரவு செய்யாதே" என்று சொல்லி விட்டு, பகவத்கீதையை வைத்துக் கொண்டு மௌனத்தில் ஆழ்ந்தான் அவன்.

சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே.சண்முகம் செட்டியார்

அரங்கேற்றுக் காதை

(தொடர்ச்சி)

அரசன் முன்னிலையில் மாதவியின் நாட்டியத்தை அரங்கேற்றுவிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள், கலை ரசிகர்கள். அழகான நாட்டியக் கலையை ஒரு அழகான இடத்தில் நடத்தினால்தான், கலையின் பெருமையும் அழகும் சரியாக விளங்கும். இந்தக் காலத்தில், நாட்டியமோ அல்லது நாடகமோ நடத்த வேண்டுமென்றால், இடத்தைப் பற்றி எவரும் சிரமம் எடுத்துக் கொள்வதில்லை. இடிந்த சுவர், தகரக் கூரை, அழுக்கடைந்த நிலம் இவைகளின் மத்தியில் நாட்டியம் நடைபெறும். பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் இவ்விதம் செய்யவில்லை. நாட்டியத்திற்குப் பொருத்தமான ஒரு இடத்கை முதலில் குறித்து, அதன் பின், அந்த இடத்தில் அழகான மேடையை அமைத்தார்கள். மேடையின் அளவும் அழகும் ஒன்றாகப் பொருந்தி யிருக்க வேண்டும். ஏழு கோல் அகலம், எட்டுக்கோல் நீளம், ஒரு கோல் உயரம் உள்ள மேடை அமைக்கப்பட்ட தென்று நூலில் சொல்லப் பட்டிருக்கிறது.

இப்போதுங்கூட, மலையாள நாட்டில், மரத்தை அளப்பதற்குக் 'கோல்' என்று சொல்லப்பட்ட அளவைத்தான் வைத்திருக்கிறார்கள். இந்தக் கோல், 28 அங்குலம் நீள முள்ளது. சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்திலுங்கூட, கோலின் அளவு இதுவே இருக்கலாம். அப்படியானால், அரங்கின் மேடை 16 அடி 4 அங்குல அகலமும், 18 அடி 8 அங்குல நீளமும், தரையிலிருந்து 2 அடி 4 அங்குல உயரமும் இருந்திருக்க வேண்டும். மேடையின் மேல் உள்ள தூண்மேலே உத்தரமாக இடப் பட்ட பலகைக்கும், மேடையின் மேல் பரப்பப்பட்ட பலகைக்கும் இடையிலே, 4 கோல் அளவு. அதாவது, 9 அடி 4 அங்குலம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த அளவுகளைக் கொண்ட ஒரு மேடை, நாட்டியத்திற்கு மிகவும் பொருத்தமான தென்று நன்றாக வெளிப்படும்.

அளவில் பொருத்தமான மேடையை அமைத்து, அதை அலங்காரம் செய்து நாலுவகைப் பூதங்களைப் படமாக எழுதி மேலிடத்தே வைத்தனர். வெளிச்சத்திற்காக நிலை விளக்குகள் வைத்தபோது தூண்க

ளின் நிழல், மேடையில் விழாமல் இருக்கும்படி அவ்வளவு பொருத்தமான இடத்தில் வைத்தார்கள். திரைச்சீலைகளைத் தொங்கவிட்டார்கள். மேற்கட்டியின் மீது, சித்திரங்கள். முத்துக்களாலும், மலர்களாலும் தொடுக்கப்பட்ட அழகிய மாலைகள் மேடையின் மேற்கட்டியிலிருந்து தொங்கின. இவ்வளவு அரிய வேலைப் பாடுகள் நிறைந்த அழகிய மேடையை மாதவியின் நாட்டியத்திற்கு அமைத்தனர்.

அரங்கின் அமைதி

எண்ணிய நூலோர் இயல்பினின் வழாது,
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு,
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு,
நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல் அளவு, இருபத்துநால் விரலாக,
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத்து உறுப்பின தாகி;
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோலாக;
ஏற்ற வாயில் இரண்டு உடன் பொலியத்,
தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்தப்
பூதரை எழுதி மேல்நிலை வைத்து;
தூண் நிழல் புறப்பட மாண்விளக்கு எடுத்து, ஆங்கு
ஒருமுக எழினியும்; பொருமுக எழினியும்,
கரந்து வரல் எழினியும் புரிந்து உடன்வகுத்து, ஆங்கு
ஓவிய விதானத்து, உரைபெறு நித்திலத்து
மாலைத் தாமம் வளைவுடன் நாற்றி,
விருந்து படக் கிடந்த அருந்தொழில் அரங்கத்து;

பதவுரை

[எண்ணிய நூலோர் — ஆராயப்பட்ட சிற்ப நூலாசிரியர்களின்; இயல்பினின் வழாது — முறையிலிருந்து மாறுபடாமல்; மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு — நிலத்திலே குற்றம் நீங்கின ஓரிடத்தை வகுத்துக் கொண்டு; புண்ணிய நெடுவரை — புண்ணியமுடைய நீண்ட மலையாகிய இமயமலையில்; போகிய — நீண்டு வளர்ந்த; நெடுங்கழை — நெடிய மூங்கிலுள்; கண் இடை ஒரு சாண் வளர்ந்தது கொண்டு — ஒரு கணுவிற்கும் மற்றொரு கணுவிற்கும் இடையில் ஒரு சாண் நீளம் உடையதாய் வளர்ந்த மூங்கிலைக் கொண்டு; நூல் நெறி மரபின் — நூல்களில் கூறப்படும் முறையாலே; அரங்கம் அளக்கும் கோலளவு — நாடகமேடையை அளக்கும் கோலின் அளவு; இருபத்து நால் விரலாக — இருபத்து நான்கு விரல் கொண்ட அளவுடையதாக (நறுக்கி); எழுகோல் அகலத்து — எழு கோல் அகலத்தையும்; எண்கோல் நீளத்து — எட்டுக் கோல் நீளத்தையும்; ஒரு கோல் உயரத்து — ஒரு கோல் உயரத்தையும் கொண்ட; உறுப்பினதாகி — அளவுள்ளதாகி; உத்தரப் பலகையோடு — தூண் மேலே உத்தரமாக இடப்பட்ட பலகைக்கும்; அரங்கின் பலகை — நாடகமேடையின் மேலுள்ள பலகைக்கும்; வைத்த இடைநிலம் — இடையிலே வைத்த இடைவெளி; நாற்கோலாக — நாலுகோல் அளவினதாக இருக்க;

ஏற்ற வாயில் இரண்டுடன் பொலிய — அளவிற்கேற்ற வாயில்கள் இரண்டாக விளங்க ; தோற்றிய அரங்கில் — செய்யப்பட்ட அம்மேடையில் ; தொழுதனர் ஏத்த — எல்லோரும் வணங்கி வாழ்த்தும்படி ; பூதரை எழுதி மேல்நிலை வைத்து — நாலுவகைப் பூதங்களைப் படமாக எழுதி மேலிடத்திலே வைத்து ;

தூண்நிழல் — தூண்களின் நிழல் ; புறப்பட — மேடையிலும், அவைக்களத்திலும் படாமல் வெளியே விழும்படி ; மாண் விளக்கு எடுத்து — மாட்சிமையுடைய நிலைவிளக்கு ஏற்றி ; ஆங்கு —; ஒரு முக எழினியும் — ஒரு திரையாக விடப்படுகின்ற திரைச்சீலையும் ; பொரு முக எழினியும் — இரண்டு பக்கத்தினின்றும் வந்து ஒன்றாகப் பொருந்தும்படி விடப்படுகின்ற இரட்டைத் திரைச்சீலையும் ; கரந்து வரல் எழினியும் — மேலே மறைவாகக் கட்டியிலிருந்து பின் தொங்க விடப் படுகின்ற திரைச்சீலையும் ஆகியவற்றை ; புரிந்து உடன் வகுத்து — அழகுபடச் செய்து வகைவகையாகத் தொங்கவிட்டு ; ஆங்கு — ; ஓவியவிதானத்து — சித்திரம் தீட்டிய மேற்கட்டி மீது ; உரைபெறு நித்திலத்து — புகழ்பெற்ற முத்துக்களால் ; மாலைத் தாமம் வளைவுடன் நாற்றி — பலவித அழகிய மாலைகளை வளைவாகத் தொங்க விட்டு ; விருந்துபடக் கிடந்த — புதுமைத் தோற்றம் தோன்றும்படி விளங்கிய ; அருக் தொழில் அரங்கத்து — அரிய வேலைப் பாடுகள் அமைந்த மேடையிலே ;

* *

மேல் நாடுகளில் பல இசை வாத்தியங்களைப் பலபேர் ஒரே சமயத்தில் வாசிப்பதுண்டு. இதற்கு "ஆர்க்கெஸ்ட்ரா" என்று சொல்வது. வழக்கத்தில் இதை "பாண்டு வாத்தியம்" என்று நாம் சொல்லுகின்றோம். பாண்டு வாத்தியக் கச்சேரியை நடத்தி வைக்க ஒரு தலைவன் உண்டு. அவன் கையில் ஒரு கோலை வைத்துக் கொண்டு, கோலை ஆட்டிச் செய்யும் சைகைகளால், எல்லா வாத்தியக் காரர்களும் பொருத்தமான சமயத்திலும், பொருத்தமான ஓசையிலும் அவரவர்களுடைய வாத்தியங்களை வாசிப்பார்கள். தலைவனுடைய கோல் பாண்டு வாத்தியக் கச்சேரிக்கு மிகவும் முக்கியமானது. இதுபோலவே, நாட்டியத்தை நடத்தும் நட்டுவனுடைய கையில் ஒரு கோல் உண்டு. நாட்டியத்தலைவன், கையில் வைத்திருக்கும் கோலுக்குத் 'தலைக்கோல்' என்று பெயர். இந்தக் கோலால், தாளம் தட்டி, நட்டுவன் நாட்டியப் பெண்ணை ஆட்டி வைக்கின்றான்.

தலைக் கோலுக்கு, முற்காலத்தில் மிகப் பெருமை கொடுத்தார்கள். இந்திர சபையில் ஊர்வசி, அகத்தியன் முன் நடனமாடிய போது, முனிவர் கொடுத்த சாபத்தால், ஊர்வசியும், இந்திரன் மகன் சயந்தனும் மண்ணுலகில் பிறந்தார்கள். ஊர்வசி, ஒரு நாட்டியக் கன்னியாகப் பிறந்தாளென்றும், சயந்தன் மூங்கிலாகப் பிறந்தான் என்றும் கதை. மூங்கிலால் செய்யப்பட்ட தலைக் கோலைச் சயந்தன் என்று வைத்து, அதற்கு வழிபாடு செய்தார்கள். இமயமலையிலிருந்து கொண்டு வரப்பட்ட மூங்கில், அல்லது போர்க் களத்தில் முதுகு காட்டி ஓடிய பகைவர்களிடமிருந்து கைப் பற்றிய வெண் குடைக் காம்பு — இவைகளில் ஒன்றிலிருந்து தலைக் கோலைச் செய்தார்கள். கோலைப் பொன்னாலும், நவமணிகளாலும் வேலைப்பாட்டோடு அழகு செய்து அதை நீராட்டி, மாலையணிந்து, பட்டத்து யானையின் மேல் வைத்து ஊர்வலம் செய்து

அரசனுடைய சபையில், நாட்டியத் தலைவனாகிய நட்டுவன் கையில் கொடுத்தார்கள்.

தலைக்கோல் அமைதி

பேர் இசை மன்னர் பெயர்புறத்து எடுத்த
சீர் இயல் வெண்குடைக் காம்பு நனி கொண்டு,
கண் இடை நவமணி ஒழுக்கி, மண்ணிய
நாவல் அம் பொலம் தகட்டு இடைநிலம் போக்கி,
காவல் வெண்குடை மன்னவன் கோயில்
இந்திர சிறுவன் சயந்தன் ஆகென
வந்தனை செய்து, வழிபடு தலைக்கோல்
புண்ணிய நன்னீர் பொற்குடத்து ஏந்தி
மண்ணிய பின்னர், மாலை அணிந்து,
நலம்தரு நாளால் பொலம்பூண் ஓடை
அரசு உவாத் தடக்கையில் பரசினர் கொண்டு,
முரசு எழுந்து இயம்ப, பல் இயம் ஆர்ப்ப,
அரசொடு பட்ட ஐம்பெருங் குழுவும்
தேர்வலம் செய்து, கவி கை கொடுப்ப,
ஊர்வலம் செய்து புகுந்து, முன்வைத்தாங்கு

பதவுரை

[பேர் இசை மன்னர் — பெரிய புகழையுடைய பகை மன்னர்கள்; பெயர் புறத்து எடுத்த — முதுகு காட்டி ஓடிய போர்க்களத்தில் கைப் பற்றிய; சீர் இயல் வெண் குடைக் காம்பு — சிறப்புக்கள் இயன்ற வெண்கொற்றக் குடையின் காம்பினை; நனி கொண்டு — மிக்க சிறப்போடே கைக் கொண்டு; கண் இடை நவமணி ஒழுக்கி — அக்காம்பின் கணுக்களிலெல்லாம் ஒன்பது மணிகளையும் வைத்துப் பதித்து; மண்ணிய — நன்கு துப்புரவு செய்யப் பட்ட; நாவல் அம் பொலந் தகட்டு — நாவல் என்னும் அழகிய பொன்னின் தகட்டால்; இடை நிலம் போக்கி — கணுக்களின் நடுவாகிய இடத்தை மறையச் செய்து;

• காவல் வெண்குடை மன்னவன் கோயில் — காவல் செய்யும் வெண் கொற்றக் குடையுடைய வேந்தனின் அரண்மனையிலே; இந்திர சிறுவன் சயந்தன் ஆகென — அந்தக் கோல் இந்திரன் மகன் சயந்தன் என்று நினைத்து; வந்தனை செய்து — வணக்கஞ்செய்து; வழிபடு தலைக்கோல் — போற்றத் தகுந்த அத்தலைக்கோலை; புண்ணிய நன்னீர் பொற் குடத்து ஏந்தி மண்ணிய பின்னர் — நல்ல புண்ணிய நீரைப் பொற் குடத்திலே ஏந்திவந்து நீராட்டிய பின்னர்; மாலை அணிந்து —; நலம்தரு நாளால் — நன்மை தருகின்ற நல்ல நாளிலே; பொலம்பூண் ஓடை — பொன்னாலான பூண்களையும் நெற்றிப் பட்டத்தையுமுடைய; அரசு உவாத் தடக்கையில் — பட்டத்து யானையின் பெரிய கையிலே; பரசினர் கொண்டு — வாழ்த்துக்களோடு கொண்டு கொடுத்து; முரசு எழுந்து இயம்ப — முரசம் ஓங்கி முழங்க; பல் இயம் ஆர்ப்ப — பல வகை வாத்தியங்கள் ஆரவாரிக்க; அரசொடு பட்ட ஐம் பெருங் குழுவும் — அரசனோடு கூடிய ஐந்து பகுதியாகவுள்ள அமைச்சர், புரோகிதர், சேனைபதியர், தூதுவர், ஒற்றர் என்னும் கூட்டத்தினரும்; தேர்

வலம் செய்து — தேரோடு வலமாகச் சுற்றி வந்து; கவிகைக் கொடுப்ப — நாடகக் கவியின் கையிலே அத்தலைக் கோலைக் கொடுத்து; ஊர் வலம் செய்து புகுந்து முன் வைத்து — ஊரை வலமாக வந்து அரங்கிலே புகுந்து எதிர்முகமாகத் தலைக்கோலை வைத்து; ஆங்கு — அப்பால்;

* * *

கண்ணுக்கும், மனதிற்கும் இன்பந்தரும்படி அமைக்கப்பட்ட சபையில், மன்னனும் அவனது பரிவாரங்களும், பொது மக்களும் வந்து சேர்ந்தார்கள். மேடையின்மேல் இசைக்கருவியை ஏந்திய வாத்தியக் காரர்கள். அவர்களுடைய இடத்தில் ஒழுங்காக நின்றார்கள். மாதவி தன் வலது காலை முன்னே வைத்து மிதித்து மேடையின் மேல் ஏறி, வலது பக்கத்துத் தூணைச் சேர்ந்து நின்றாள். நாட்டியத்திற்குத் துணை செய்ய ஆடல் பாடலில், தேர்ச்சி பெற்ற மகளிர், இடது தூண் பக்கம் நின்றனர். முதலில், அலாரிப்பு என்று சொல்லும் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியபின், யாழ், குழல், மத்தளம் முதலிய கருவிகள் ஒன்று சேர்ந்து, இன்பமாக இசைத்தன. இந்த வாத்தியக் கருவிகளெல்லாம், ஒன்றோடொன்று தழுவிக் கலந்து இசையெழுப்ப, நாட்டிய நன்னூல் முறையிலிருந்து தவறாமல், எல்லாக் குற்றங்களையும் நீக்கி, மாதவி, தன் நாட்டியத்தை ஆடி முடித்தாள். பொன்னாலான ஒரு பூங்கொடியே ஆடலும் பாடலும் வல்லதாய் வந்து, நடித்தாற் போலிருந்தது அந்தக் காட்சி.

மாதவியின் ஆட்டம்

இயல்பினின் வழாஅ இருக்கை முறைமையின்,
குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப,
வலக்கால் முன்மிதித்து ஏறி, அரங்கத்து,
வலத்தூண் சேர்தல் வழக்கு எனப் பொருந்தி,
இந்நெறி வகையால் இடத்தூண் சேர்ந்த
தொல்நெறி இயற்கைத் தோரிய மகளிரும் :
சீர் இயல் பொலிய, நீர் அல நீங்க,
வாரம் இரண்டும் வரிசையிற் பாடப் ;
பாடிய வாரத்து ஈற்றில் நின்று இசைக்கும்
கூடிய குயிலுவக் கருவிகள் எல்லாம்,
குழல் வழி நின்றது யாழே ; யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே ; தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே ; முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை ;
ஆமந்திரிகையோடு அந்தரம் இன்றிக்
கொட்டு இரண்டு உடையது ஓர் மண்டிலம் ஆக,
கட்டிய மண்டிலம் பதினொன்று போக்கி,
வந்த முறையின் வழிமுறை வழாமல்,
அந்தரக் கொட்டுடன் அடங்கிய பின்னர்,
மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப் பண்மேல்,
நான்கின் ஒரீஇய நன்கனம் அறிந்து ;
மூன்று அளந்து ஒன்று கொட்டி, அதனை
ஐது மண்டிலத்தால் கூடை போக்கி ;
வந்த வாரம் வழி மயங்கிய பின்றை

ஆறும் நாலும் அம்முறை போக்கி
கூறிய ஐந்தின் கொள்கை போலப்
பின்னையும் அம்முறை பேரிய பின்றை ;
பொன் இயல் பூங்கொடி, புரிந்து உடன் வகுத்தென,
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள் ஆதலின் ;

பதவுரை

[இயல்பினின் வழாஅ இருக்கை முறைமையின் — நெறியிலிருந்து மாறுபடாத வரிசை முறையிலே ; குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப— இசைக்கருவியுடைய வாத்தியக் காரர்கள் ஒழுங்கு பெற நிற்க ; வலக் கால் முன் மிதித்து ஏறி — மாதவி தன் வலக்காலை முன்னே வைத்து மிதித்து ஏறி ; அரங்கத்து — மேடையில் ; வலத்தூண் சேர்தல் — வலப்பக்கத்துத் தூணைச் சென்று அடைதல் ; வழக்கு எனப் பொருந்தி — நாடக வழக்கு என்று அவ்விடத்தைச் சேர்ந்து ;

இந்நெறி வகையில் — மாதவி சேர்ந்த இந்நெறி முறைப்படியே ; இடத்தூண் சேர்ந்த — இடப் பக்கத்துத் தூணைச் சென்று சேர்ந்த ; தொல் நெறி இயற்கை — பழைமையான வழக்கியல்புகளையுடைய ; தோரிய மகளிரும் — ஆடல் பாடலில் தேர்ச்சி பெற்ற மகளிரும் ; சீர் இயல் பொலிய — தாள இலக்கணங்கள் விளங்க ; நீர் அல நீங்க — அதற்கு ஏலாத குற்றங்கள் நீங்க ; வாரம் இரண்டும் — இரண்டு வகை யான வாரப் பாட்டுகளை ; வரிசையிற் பாட — பாடும் முறையாலே பாட ; பாடிய வாரத்து — அவ்வாறு பாடிய வாரப்பாட்டின் ; இற்றில் நின்று இசைக்கும் — கடைசியிலே நின்று இசைக்கின்ற ; கூடிய— தம்முள் ஒன்றோடொன்று பொருந்திய ; குயிலுவக் கருவிகள் எல்லாம் — இசைக் கருவிகள் எல்லாம் ; குழல் வழி நின்றது யாழே — யாழ் குழலின் இசையை ஒட்டி இசைத்தது ; யாழ்வழி — யாழை ஒட்டி ; தண்ணுமை நின்றது தகவே — தண்ணுமை பொருத்தமாக நின்றது ; தண்ணுமைப் பின் வழி நின்றது முழவே — தண்ணுமையின் பின்னால் முழவு பொருந்தியிசைத்தது ; முழவொடு கூடி நின்று — குடமுழாவோடு பொருந்தி நின்று ; இசைத்தது ஆமந்திரிகை — ஆமந்திரிகை என்னும் இடக்கையாகிய கருவி இசைத்தது ;

ஆமந்திரிகையோடு — ; அந்தரம் இன்றி — வேற்றுமை தோன்றாமல் ; கொட்டு இரண்டு உடையது ஓர் மண்டிலமாக — ஒரு மண்டிலத்திற்குக் கொண்டு இரண்டாக (என்றது, ஒரு தாளத்திற்கு இரண்டு பற்றாக) ; கட்டிய மண்டிலம் — கட்டுக் கோப்பான ஐந்து தாளத்திலும் ; பதினொன்று போக்கி — பதினொரு தாளப் பற்றுக்களை இட்டு ;

வந்த முறையின் — நாடக வழக்கமாக வந்த முறையில் ; வழி முறை வழாமல் — நெறிதுறை மாறு படாமல் ; அந்தரக் கொட்டுடன் — அந்தரக் கொட்டு என்னும் இவ் "ஒத்து" ஆடுதலோடு ; அடங்கிய பின்னர் — ;

மீத்திறம் படாமை — அளவு மேலிட்டுப் போகாமல் ; வக்காணம்

வகுத்து — ஆலாபனம் செய்து; பாற்பட நின்ற — அளவு பட்டு நின்ற; பாலைப் பண்மேல் — பாலை என்ற பண்ணின் மேல்; நான்கின் ஓரிய நன்கனம் அறிந்து — "நாலுறுப்பும் குறைபாடில்லாத உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப் படுத்தியும் அறிந்து பாட்டும் கொட்டும் கூத்தும் நிகழ்த்தி;" மூன்று அளந்து — மூன்று ஒத்துடைய மட்ட தாளத்திலே தொடங்கி; ஒன்று கொட்டி — ஒரொத்துடைய ஏக தாளத்திலே முடித்து; அதனை —; ஐது மண்டிலத்தால் — அழகிய மண்டில நிலையாலே; கூடை போக்கி — தேசிக் கூத்திற்கு ஒற்றித்தும் இரட்டித்தும் ஒத்தும் வழக்கப்படி அக்கூத்தினை ஆடி முடித்து; (அதாவது ஐவகைத் தாளத்தையுடைய தேசிக் கூத்தை ஆடும் முறையிலே ஆடி)

வந்த வாரம் வழி மயங்கிய பின்றை
ஆறும் நாலும் அம்முறை போக்கிக்
கூடிய ஐந்தின் கொள்கை போலப்
பின்னையும் அம்முறை பேரிய பின்றை

— இவற்றின் பொருள் தெளிவாக விளங்கவில்லை.

பொன் இயல் பூங்கொடி — பொன்னாலான ஒரு பூங்கொடி; புரிந்து உடன் வகுத்தென — ஆடலும் பாடலும் வல்லதாய் வந்து நடித்தாற் போல; நாடக நன்னூல் நன்கு கடைப் பிடித்து — நாடக இலக்கண முறையைச் சிறப்புறக் கடைப் பிடித்து; காட்டினாள் ஆதலின் — தன்திறம் முழுமையும் காட்டினாளாதலால்;

* *

மாதவியின் குற்றமில்லாத நாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்த மன்னன், அக்காலத்து வழக்கப்படி, அவளுக்கு இலையாலும் பூவாலும் செய்யப்பட்ட ஒரு மாலையுடன், தலைக்கோல் ஒன்றையும், ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன்னையும் பரிசாகக் கொடுத்தான். மன்னன் கொடுத்த மாலையை மாதவியின் தாய் சித்திராபதி ஒரு கூனி கையில் கொடுத்து, இம்மாலையை ஆயிரத்தெட்டு பொன்கள் கொடுத்து, யார் வாங்குகிறானோ அவனே மாதவியின் கணவனாவான் என்று சொல்லிக் கூனியை நகர இளைஞர் நடமாடும் தெருவில் நிறுத்தினாள்.

சபையில் மாதவியின் ஆட்டத்தைக் கோவலன் பார்த்து, மயங்கி விட்டான். மயக்கந் தெளியாமல், தெருவில் போகும்போது, மாலையுடன் நின்ற கூனியைப் பார்த்து அவளுடைய வார்த்தைகளைக் கேட்டதும், முன்பின் யோசியாமல், ஆயிரத்தெட்டுப் பொன்னை அவள் கையில் கொடுத்து, அவளுடன் மாதவியின் வீட்டை அடைந்தான். மாதவியின் இன்பத்தில் மயங்கி அறிவு சோர்ந்த கோவலன், அவளை விட்டுப் பிரிய மனமில்லாதவனாய்த் தன் வீட்டையும், தன் மனைவியையும் மறந்து மாதவியின் வீட்டியிலேயே தங்கி விட்டான்.

மாதவி பரிசு பெற்றதும் கோவலன் அவளை உற்றதும்

காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை இயல்பினின் வழாமை
தலைக்கோல் எய்தி, தலை அரங்கு ஏறி,
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு

ஒரு முறையாகப் பெற்றனள்; அதுவே —
" நூறு பத்து அடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறு உயர் பசும்பொன் பெறுவது இம்மாலை;
மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்கு" என,
மான் அமர் நோக்கி, ஓர் கூனி கைக் கொடுத்து,
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த;
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு, மாதவி தன்னொடு
அணைவுறு வைகலின், அயர்ந்தனன் மயங்கி,
விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்;
வடு நீங்கு சிறப்பின் தன் மனை அகம் மறந்து என்.

பதவுரை

[காவல் வேந்தன் — நாடு காவல் செய்யும் வேந்தனிடத்தே; இலைப் பூங்கோதை — இலையும் பூவும் சேரத் தொடுத்த மாலையுடன்; இயல்பினின் வழாமை — தன் ஆடல் பாடல் அழகுகளில் மாறுபடாமல்; தலைக்கோல் எய்தி — தலைக்கோல் கொள்ளும் சிறப்பினைப் பெற்று; தலை அரங்கு ஏறி — தலைமையான, வேந்தன் அரங்கிலே முதன்மையாக ஏறி; விதி முறைக் கொள்கையின் — நூல்களால் விதிக்கப் பெற்ற கொள்கை முறைப்படி; ஆயிரத்தெண் கழஞ்சு — ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னை; ஒரு முறையாகப் பெற்றனள் —;

அதுவே — அன்று முதலாக அம்மாலையின் விலையைப் பரிசமாக முடிவு செய்து; நூறுபத்து அடுக்கி எட்டுக் கடை நிறுத்த வீறுயர் பசும் பொன் பெறுவது இம்மாலை — இம்மாலை மாற்றுயர்ந்த ஆயிரத்தெட்டுப் பசும் பொன் விலையுள்ளது; மாலை வாங்குநர் சாலும் நங் கொடிக்கு என — நமது கொடி போன்ற மங்கை மாதவிக்கு இம்மாலை வாங்குவோர் தக்கவராவார் என்று; மான் அமர் நோக்கி — மான் போன்ற பார்வை யுடையவளாகிய; ஓர் கூனி கைக் கொடுத்து — கூனி ஒருத்தியின் கையிலே மாதவியின் தாய் சித்திராபதி கொடுத்து; நகர நம்பியர் திரிதரு மறுகில் — நகரத்து இளைஞர் திரிகின்ற தெருவிலே; பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த — விலை கூறுவோர் போன்ற ஒரு பாவனையாக அவளை நிறுத்த; மாமலர் நெடுங்கண் மாதவி மாலை — அழகிய மலர் போன்ற கண்ணையுடைய மாதவியின் மாலையை; கோவலன் வாங்கி —; கூனி தன்னொடு —; மணமனை புக்கு — மணக் கோலத்தோடு விளங்கும் அவள் வீட்டிலே புகுந்து; மாதவி தன்னொடு —; அணைவுறு வைகலின் — கட்டியணைந்த அன்றே; அயர்ந்தனன் மயங்கி — அவள் இன்பத்தில் மயங்கி அறிவு சோர்ந்தனன்; அதனால்: விடுதல் அறியா விருப்பினன் ஆயினன் — அவளை விட்டுப் பிரிய விருப்ப மில்லாதவனாயினன்; வடு நீங்கு சிறப்பின் — குற்றம் நீங்கிய சிறப்பினையுடைய; தன்மனையகம் மறந்து — தன் வீட்டினை மறந்து.]

(அரங்கேற்று காதை முற்றிற்று.)

தமிழ் இசைச் சங்கம், சென்னை

இசை அரங்கு

(அரண்மனைக்காரத் தெருவிலுள்ள—செயின்ட் மேரீஸ் ஹாலில்)

24—12—1943 வெள்ளிக்கிழமை மாலை 5—30—8—30
இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் —பாட்டு

25—12—1943 சனிக்கிழமை மாலை 5—30—8—30
இசைவாணர் எம். கே. தியாகராஜ பாகவதர் —பாட்டு

26—12—1943 ஞாயிற்றுக்கிழமை மாலை 5—30—8—30
கான சரஸ்வதி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் —பாட்டு

27—12—1943 திங்கட்கிழமை மாலை 4—30—6—30
நாதஸ்வரச் சக்ரவர்த்தி டி. என் ராஜரெத்னம் பிள்ளையும்
ஆஸ்தான வித்வான் பி. எஸ். வீருசாமி பிள்ளையும்—நாதஸ்வரம்
தவுல் அரசு நீடாமங்கலம் டி. என். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை—தவுல்
அன்று மாலை 6—30—9
கும்பகோணம் ஸ்ரீமதி பானுமதி கோஷ்டியார்—பரதநாட்டியம்

28—12—1943 செவ்வாய்க்கிழமை மாலை 5—30—8—30
வித்வான் மதுரை மணி ஐயர் —பாட்டு

29—12—1943 புதன்கிழமை மாலை 5—30—8—30
கோகிலகான இசைவாணி எம். எஸ். சுப்புலக்ஷ்மி —பாட்டு

30—12—1943 வியாழக்கிழமை மாலை 5—30—8—30
ஸ்ரீமதி என். சி. வசந்தகோகிலம் —பாட்டு

31—12—1943 வெள்ளிக்கிழமை மாலை 5—7
சீவளூர் எஸ். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை —பாட்டு
அன்று மாலை 7—9 ஸ்ரீமதி பிருந்தாவும் முக்தாவும் —பாட்டு

1—1—1944 சனிக்கிழமை மாலை 5—30—8—30
ஆஸ்தான வித்வான் ஜி. என். பாலசுப்ரமணியம் —பாட்டு

2—1—1944 ஞாயிற்றுக்கிழமை மாலை 4—6—30
தமிழ் இன்னிசைப் பிரயோகர் ஜெயராமன் —பாட்டு
அன்று மாலை 6—30—9—30
திருப்பாம்புரம் டி. என். சுவாமிநாத பிள்ளை —புல்லாங்குழல்

3—1—1944 திங்கட்கிழமை மாலை 4—30—6—30
மதுரை மாரியப்பசாமி —பாட்டு
அன்று மாலை 6—30—9—30 ஆலத்தூர் சகோதரர்கள் —பாட்டு

4—1—1944 செவ்வாய்க்கிழமை மாலை 6—30—8—30
கொடுமுடி கே. பி. சுந்தராம்பாள் —பாட்டு
(தக்க பக்க வாத்தியங்களுடன் நடைபெறும்)

நிகழ்ச்சிகள் மாற்றத்திற்குரியன

கட்டணம்

சீசன்: ஸ்பெஷல் ரிசர்வ் ரூ. 25. முதல் வகுப்பு ரூ. 15 2-ம் வகுப்பு ரூ. 9
தினசரி: ஸ்பெஷல் ரிசர்வ் ரூ. 5. முதல் வகுப்பு ரூ. 3. 2-ம் வகுப்பு ரூ. 2
மூன்றும் வகுப்பு ரூ. 1.

10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அரைக் கட்டணம்.

சீசன் டிக்கட்டுகள் 20-12-43 வரை கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

1. தமிழிசைச் சங்கம், 79. செம்புதாஸ் தெரு. ஜி. டி. சென்னை
2. G. K. வேல் & கம்பெனி, போட்டோகிராபர்ஸ். 23, மௌண்ட்ரோடு
3. Dr. A. V. அவதானி, 137, பிராடீஸ் ரோடு, மயிலாப்பூர்
4. தமிழ்ப் பண்ணை, பனகல் பார்க், தியாகராய நகர்
5. Dr. E. M. துரைசாமி, பார்க்கர் & கம்பெனி, 127, புரசவாக்கம் ஐரோடு

மலர் மணம்

அட்டைச் சித்திரம்:

தாலாட்டு.

"வசந்தச் சோலையிலிருந்து நீலாம்புரியில் 'ஆரிரரோ ஆராரோ' என்னும் அமுதமயமான கீதம் தேனெனப் பாய்ந்து வருகிறது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்பார்கள். அன்பின் உருவான இளங்குழந்தை ஆனந்தமாகக் கண்ணயர்ந்து தூங்குவதும், தாய் மனம் நிறைந்த மகிழ்ச்சியில் தாலாட்டுவதும் கவர்ச்சி மிக்க காட்சிகளில் ஒன்று. அப்படிக் கண் துயிலும் குழந்தை இயற்கைத் தேவியின் மடியில் 'ஆகாசப் பந்தலின் கீழ்' ஆடிவரும் கோலத்தில் விளங்குமானல் அது கண் கொள்ளாக் காட்சியே தான். இந்த இனிமையைத்தான் அழகிய கவியில் குழைத்துத் தருகிறார் 'கதிரவன்'.

ஸ்ரீமதி ஜானகி எழுதிய "ரோஜாக் கொத்தின்" நடை நயம் ரோஜாவைப் போல மிக மென்மையானது. வேடிக்கையான கற்பனை. வேடிகையான பாத்திரங்கள் சுவையுடன் அதைப் புனைந்திருக்கிறார்.

"சந்திரோதயத்தில் ஸ்தூபி சொல்லும் கதையைக் காணலாம், 'எப்படிப் பார்க்கிறோமோ அப்படியே தெரிகிறது' என்றார் மகான் ராமதீர்த்தர். ஜடப் பொருளையும் கலைக் கண்களோடு பார்க்கையில் அதில் உயிர் எப்படியோ வந்தடைந்து விடுகிறது. சில சமயம் அதிசயமாகவும் இருக்கும். அம் மாதிரி அதிசயத்தில் ஆழும் வண்ணம் இசைத்தவர் எம். எஸ். சத்திவேலு.

என். சிதம்பர சுப்ரமணியம் அவர்கள் "சக்கர வாகம்" என்னும் சிறந்த சிறு கதைத் தொகுதியை இயற்றியவர். கலைப் பண்பு மிக்க அற்புதமான கதைகளும், கட்டுரையும் ஏராளமாக எழுதியிருக்கிறார். இவர் கைக் கொள்ளும் பாணி இங்கிதமானது. அலாதியான அழகு கொண்டது. மனோ தத்துவங்களை விவரிப்பதில் கை தேர்ந்தவர். இங்கு வெளி வந்துள்ள "ஆசா பாசம்" மனோ ஓட்டத்தை அபூர்வமாக விவரிக்கிறது.

மொழி ஆராய்ச்சி, சரித்திரக் கற்பனை, கிராமியப் பாடல், நவீன இலக்கியம் முதலிய துறைகளில் அரிய கட்டுரைகளும், கதைகளும் புனைந்து புகழ் பெற்ற வரும், பல உயர்ந்த நூல்களின் ஆசிரியருமான தி. நா. சுப்ரமணியம் அவர்கள் இம்மலரில் "ஜகன் மோகினி" என்னும் சரித்திரக் கதையைச் சித்திரித் திருக்கிறார். இன்னும் பலவிதச் சுவையுடன் வசந்தம் வீசுகிறது.

-- ஆசிரியர்

அஜாக்ஸ்

உங்கள் தற்காப்புக்காக



வீட்டிலாகட்டும், ஆபீசிலா
கட்டும் அஜாக்ஸ் இரும்புச்
சாமான்கள் பாதுகாப்புடன்,
சோபையுமளிக்கின்றன.
உறுதியான அமைப்பும், அழ
கான தோற்றமு முள்ளவை.

உங்கள் விலையுயர்
ந்த பொருள்களைக்
காக்க **அஜாக்ஸ்**
இரும்பு அலமாரி
களையே தேர்ந்தெ
டுங்கள். திருடர்க
ள்முயற்சியை வீ
ணாக்குவதிலும் நெ
ருப்பு, கரையான்
முதலிய நாசம் உ
ண்டுபண்ணும் பூச்
சிகள் இவைகளா
ல் சேதமடைவ
தை தடுப்பதிலும்
தலை சிறந்தவை



பெருந் தீயையும்,
பக்காத் திருடர்க
ளையும் எதிர்த்து
நிற்க, மிகச்சிறந்த
பொருள்களைக்
கொண்டு ஏற்ற வ
கையில் செய்யப்ப
ட்டவை இந்த இரு
ம்புப் பெட்டிகள்.



Ajax

PRODUCTS LTD.

106, ARMENIAN STREET, MADRAS.

AS-K.6

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: முருகப்பா & சன்ஸ்.

கிளை ஆபீஸ்: நெ. 5, வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்.

PSG

மோட்டார்களை

ஸ்தாபனம் செய்து



செலவை

சிக்கனம் செய்யுங்கள்

PSG அண்டு சன்ஸ், தர்மஸ்தாபன இண்டஸ்டிரியல்
இன்ஸ்டிடியூட், பூளமேடு, கோயமுத்தூர்.

சுத்த தனி வசீகரம்

மைசூர் சந்தன சோப் உனக்கு உறுதியாக அளிப்பது அதுதான்.

அது குளிர்ச்சியுள்ளது. மிருதுவானது. கூச்சம் மிகுந்த சருமங்களிலும் உபயோகிக்கத்தக்கது.

மைசூர்

சந்தன சோப்

கவர்மெண்ட் சோப் பாக்டரி,
பெங்களூர்.

Use

A. P. R.

GUARANTEED

GINGELLY OIL

Free from Adulteration! Free from Bitterness!
Free from Rancidness! But of Appreciable Smell!
Best and Pure Oil.

Try Once Try

FOR COOKING AND BATHING.

Sales Depot:

A. P. Ramaswamy Chettiar's

Guaranteed Gingelly Oil Stores,
(REGISTERED)
New Market, COIMBATORE.

Factory;

A. P. R. OIL MILLS,

FORT, COIMBATORE.

R. L. Subramania Chetty,
Managing Secretary.

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் : நார்த் பீச் ரோடு, மதருஸ்.

மதருஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், மவுன்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

அதிகார மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் (28—5—'43)	...	ரூ.	27,55,229
ரிசர்வும் மற்ற நிதிகளும் (25—5—'43)	...	ரூ.	29,44,259

மொத்த ஆஸ்தி 7 கோடிக்கு மேல்.

எல்லாவித பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்.

வேண்டிய விவரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது எழுதி தெரிந்துகொள்ளலாம்.

செக்ரடரி : N. கோபால அய்யர்.

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்:

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், எஸ்பிளனேட், மதருஸ்.

பிராஞ்சுகள்:

ஆலப்புழை, பம்பாய், கண்ணனூர், கோயமுத்தூர், தேவக்கோட்டை, காரைக்குடி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சேலம், சிவகெங்கை.

வெளியிடப்பட்டு வசூலான மூலதனம்	ரூ. 50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 22,27,000
ரிஸர்வ் நிதி	ரூ. 7,00,000

கனம் எம். ஸிடி. எம். சிதம்பரம் செட்டியார், சேர்மன்.

பிக்ஸட் டிபாசிட்டுகளும் கீழ்க்கண்ட விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்

6–மாதத்துக்கு	2%
12 „	$2\frac{1}{4}$%
24 „	$2\frac{1}{2}$%

எல்லாவித பாங் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்

எஸ். டி. சதாசிவம், ஜெனரல் மேனேஜர்.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"
COIMBATORE.

THE VASANTHA DYING WORKS.

181. Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED.
SINGANALLUR.

For all kinds of dying border yarn and tie yarn etc., undertakes any variety of colour dying at reasonably cheap rates for dying all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colourguaranteed.

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹமதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AVI

★

199791

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

வசந்தா மில்ஸ்

(லிமிடெட்.)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

மல் சர்டிங்

லாங்கிளாத் சதர்

வேஷ்டிகள் டவல்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

Regd. No. M. 4519 VASANTHAM December-1943

Printed at the Vasanta Mills, Press, and Published by A. Krishnaswamy at 4/12. A. Trichy Road, Coimbatore. Editor; R. Thirugnanasambandam.